# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT
# 2018



සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
DEPARTMENT OF SAMURDHI DEVELOPMENT
ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Primary Industries and Social Empowerment

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ❖ உள்ளடக்கம் | 02 |
| ❖ நன்றியுரை | 03 |
| ❖ நோக்கு மற்றும் பணி | 04 |

| | | |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி | 05 - 10 |
| 02. | நிர்வாகப் பிரிவின் செயலாற்றுகை | 11 - 21 |
| 03. | மனிதவள அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை | 22 - 34 |
| 04. | விசாரணைப் பிரிவின் செயலாற்றுகை | 35 - 36 |
| 05. | 2018 - அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் | 37 |
| 06. | சமூக நலன்புரி பிரிவின் செயலாற்றுகை | 38 - 46 |
| 07. | சமூக பாதுகாப்புப் பிரிவின் செயலாற்றுகை | 47 - 56 |
| 08. | சமூக அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை | 57 - 70 |
| 09. | சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் செயலாற்றுகை | 71 - 77 |
| 10. | பொருளாதார, வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை | 78 - 87 |
| 11. | தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை | 88 - 95 |
| 12. | தகவல் தொழில்நுட்பப் பிரிவின் செயலாற்றுகை | 96 - 100 |
| 13. | ஊடகப் பிரிவின் செயலாற்றுகை | 101 - 105 |
| 14. | சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் செயலாற்றுகை | 106 - 135 |
| 15. | உள்ளக கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகை | 136 |
| 16. | கணக்கறிக்கை | 137 - 138 |

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

2017ஆம் ஆண்டின் 02ன் இலக்க வாழ்வின் எழுச்சி (திருத்திய) சட்டத்தின், 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டு நாட்டுக்கும், நாட்டின் வறிய மக்களுக்கும் வினைத் திறன்மிக்கதும் தரம் வாய்ந்ததுமான சேவையினை வழங்குவதற்குமாக 2018 ஆம் ஆண்டில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மேலுள்ள பிரகாரம் மக்களுக்கான சேவைகளை வழங்கும் போது, உரிய வழிகாட்டல்களை வழங்கி, இத்திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய நிதி அமைச்சு பொதுத் திறைசேரி சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் செயலாளர்கள் உட்பட உரிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், முழுப்பணியாளர்களின் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கினறேன். மேலும் திணைக்களத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகள், நிவாரணங்கள் மற்றும் சமூக நலன்புரிச் சேவைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு வழங்கி வரும் ஒத்துழைப்புக்காகவும் கடமைகளை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றியமைக்காகவும் நாட்டிலுள்ள மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட மேலதிகப் பணிப்பாளர் நாயகங்கள், பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக 2018 ஆம் ஆண்டில் எமது திணைக்களத்தின் கடமைகளை மேற்கொள்ள பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் ஏனைய உறிய நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மகேஷ் பெரேரா

பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல் நெறிப்படுத்தல், மற்றும் கண்காணிப்பு)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

## எமது நோக்கு

“2030ஆம் ஆண்டாகும் போது வறுமை நிலையற்ற, வலுவூட்டப்பட்ட சுபீட்சமிகு இலங்கையினை உருவாக்குவதற்கு செற்படுகின்ற முன்னோடி நிறுவனம் ஒன்றாக அமைதல்”

## எமது பணி

“வசதி வாய்ப்புக்களற்ற நிலைக்குள்ளான மக்களை (பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, பௌதீக ரீதியாக, உளவியல் ரீதியாக, சட்ட ரீதியாக மற்றும் சுற்றாடல் ரீதியாக வலுவூட்டச் செய்யும் பொருட்டு வினைத்திறன்மிக்கலும் பயன் உறுதி வாய்ந்ததுமான வேலைத்திட்டங்களை மக்கள் பங்கேற்பினைப் பெற்றுக் கொண்டு நிலைபேரான முறையொன்றின் ஊடாக செயற்படுத்துதல்.

## 01. பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி

1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை சமுர்த்தி அதிகாரசபை 1996 ஆத் ஆண்டின் 18 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை 2005 ஆம் ஆண்டில் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய மூன்று அதிகாரசபைகளையும் மலைநாட்டு கிராம புனரமைப்புத் திணைக்களம் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் ஆகிய இரண்டு திணைக்களங்களையும் உள்ளடக்கியதாக 05 அரசாங்க நிறுவனங்களை ஒருங்கிணைத்து 2013, ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்பட்டது. வாழ்வின் எழுச்சி சட்டத்தின் ஒழுங்குகளுக்கமைய கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் 2017 ஜனவரி 03 ஆந் திகதிய 1843/47 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர் இத்திணைக்களம் உத்தியோகபூர்வமாகத் தாபிக்கப்பட்டது. பின்னர் மேற்குறித்த 05 நிறுவனங்களிலும் பணிபுரிந்த 26,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் புதிய திணைக்களத்திற்கு உள்வாங்கப்பட்டனர். அதன் பின்னர் 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி திருத்திய சட்டத்தின் மூலம் திணைக்களத்தின் பெயர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் எனத் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் நாட்டின் 25 மாவட்டங்களிலுமுள்ள 331 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள 14022 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகங்களாக மாவட்ட செயலாளர்கள் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள, பிரதேச செயலாளர்கள் நேரடியாக பங்களிப்புச் செய்கின்றனர்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கினை அடையும் பொருட்டு வறுமையை ஒழிப்பதற்கும் சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தி தனிநபர், குடும்பம், குழுக்கள் மற்றும் மக்களை மையமாகக் கொண்ட வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவது இத்திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். இதற்காக, நாடுபூராகவும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு தேசிய மாவட்ட மற்றும் பிரதேச மட்ட ஒருங்கிணைப்பு வலையமைப்பினை கட்டியெழுப்புவதன் ஊடாக குறுநிதி வங்கித் தொகுதியினை மேம்படுத்துவதன் ஊடாக இலக்கிடப்பட்ட மக்களுக்கு குறுநிதிக் கடன் வசதிகளை வழங்குவதும் தேசிய அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு மக்களை ஒன்று திரட்டுவதும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மற்றுமொரு அடிப்படை குறிக்கோள் ஒன்றாகும். இதற்காக, 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) சட்டத்தின் சமுர்த்தி ஏற்பாடுகளுக்கேற்ப இத்திணைக்களம் பின்வரும் மூன்று பிரதான துறைகளைக் கொண்டதாக இயங்கி வருகின்றது.

**(I)** பதவிக் கட்டமைப்பு கொண்ட திணைக்களத் துறை

**(II)** சமுதாய அடிப்படை வங்கி முறைமைத் துறை

**(III)** சமுதாய அடிப்படை அமைப்புத் துறை

## (I) பதவிக் கட்டமைப்பினைக் கொண்ட திணைக்களத்துறை

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ கட்டமைப்பானது கீழுள்ள பதவிக் கட்டமைப்புக்களைக் கொண்டதாகும். பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ தலைமைத்துவத்தின் கீழ் 14 பிரதான பிரிவுகளின் பிரதானிகள் ஊடாக செயற்படுகின்ற அதாவது மேலதிக பணிப்பாளர் நாயகம், மனிதவளமும் நிர்வாகமும், சமூக பாதுகாப்பு, மற்றும் நலன்புரியும் அத்துடன் சமூக அபிவிருத்தியும் சுற்றாடல் அபிவிருத்தியும் சமுதாய அடிப்படை அமைப்பு, சந்தைப்படுத்தல், திட்டமிடலும் நெறிப்படுத்தலும், பயிற்சியும் ஆராய்ச்சியும், வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சமுதாய அடிப்படை வங்கி ஆகிய பிரிவுப் பொறுப்பு பணிப்பாளர்களால் பிரதம கணக்காளர், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள், தகவல் தொழில் நுட்பம், மற்றும் ஊடகம் ஆகிய பிரிவுகளின் தலைவர்கள் தலைமைக் காரியாலயத்திலும் 25 மாவட்டங்களும் உள்ளடங்குகின்றவாறு கடமை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். மாவட்ட மட்டத்தில், மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகங்கள் / மாவட்டச் செயலாளர்களின் நெறிப்படுத்தலின் கீழ் உள்ள மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் மற்றும் அப்பணியாளர்களின் ஊடாக மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு குறித்த பணிகள் செயற்படுத்தப்படுகின்றது. சமுதாய அடிப்படை வங்கி நடவடிக்கைகள், சமுதாய அடிப்படை அமைப்புக்களை கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களை கிராம மட்டத்தில் செயற்படுத்துவது பிரதேச செயலாளர்களின் தலைமையில் சமுர்த்தி முகாமையாளர்கள், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய களத்துறை பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

## (II) சமுதாய அடிப்படை வங்கி முறைமைத் துறை

இப்பிரிவின் பணிகளாவன தலைமைக்காரியாலயத்தின் வங்கி நிதிப் பணிப்பாளரின் கீழ் நிர்வகிக்கப்படும் பணியாரள்கள் ஊடாக நாடு முழுவதிலுமுல்ல 331 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குமான சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் இயங்கும் 1074 வங்கிகளுக்குறிய சகல பணியாளர்கள் ஊடாக இந்த வங்கி முறைமை இயங்கி வருகின்றது. அந்த வங்கிகளின் ஊடாக சமுர்த்தி நிவாரணத்தினை வழங்குதல் பயனாளிகளின் கட்டாயச் சேமிப்பு வைப்புக்களைப் பேணி வருதல், பயனாளிகளுக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் குறுநிதிக் கடன்களை வழங்குதல், மீதமுள்ள நிதிகளை அதிக பயன்களைத் தரும் மூலங்களில் முதலீடு செய்தல், வேறு சமூக நலன்புரி செயற்பாடுகளை முன்னெடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்கின்றது..

2018 ஆண்டிற்குள் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான கடன் வசதிகளை அத்தியாவசியமான கிராமிய மக்களுக்குப் பல்வேறு திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்டிருந்த கடனின் பெறுமதியானது 43,645.93 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அதற்குறிய கடன்களின் எண்ணிக்கை 665,051 ஆகும். 1999 தொடக்கம் 2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியல் கடன்களின் திரட்டிய பெறுமதியானது ரூபா மில்லியன் 264,519.31 ஆகும். அதற்குறிய மொத்த கடன்களின் எண்ணிக்கையானது 8,868,521 ஆகும். மேலும் இப்பிரிவின் சகல நடவடிக்கைகளும் தகவல் தொழில்நுட்ப முறையினூடாக செயற்படுத்தப்பட்டு மக்களுக்கு வினைத்திறன் மிக்கதும் தரம் வாய்ந்ததுமான சேவைகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவிற்குறிய செயற்திறன் தொடர்பான தகவல்கள் 14 ம் இலக்க அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளது.

## (III) சமுதாய அடிப்படை அமைப்புக்கள் துறை

2017 ஆம் ஆண்டின் 2ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் திருத்திய 2013 ஆம் அண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்திற்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் பிரதேச அமைப்புக்கள் மற்றும் மாவட்ட குழுக்களை தாபிப்பதற்குத் தேவையான கட்டளைகள் மற்றும் அமைப்பு விதிகள் (சமுர்த்தி சட்டத்தின் 42 வது பிரிவு) உள்ளடங்கிய 2017ஆம் ஆண்டில் மார்ச் 07 ஆம் திகதியின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009/08 என்ற இலக்கத்தினையுடைய அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. அதற்கமைய சமுர்த்தி சட்டத்தின் அடிப்படை குறிக்கோளான வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக சமத்துவத்தினை நிறைவேற்றுதல் என்பனவற்றின் பொருட்டு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவும் உள்ளடங்குகின்ற பிரகாரம் தன்னார்வ அமைப்பான சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களை தாபிப்பதும் (சமுர்த்தி சட்டத்தின் 09 வது பிரிவு) பிரதேச அமைப்புக்களை ஆரம்பிப்பதும் (சமுர்த்தி சட்டத்தினை 15 வது பிரிவு) சமுர்த்தி மாவட்டக் குழுக்களை ஆரம்பித்தல் (சமுர்த்தி சட்டத்தின் 19 வது பிரிவு) என்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமுதாய அடிப்படை அமைப்புக்களை ஆரம்பித்து பலப்படுத்தி, மக்களை விழிப்பூட்டி, அவர்களை பொருளாதார சமூக மற்றும் ஆத்மீக ரீதியாக அபிவிருத்தி செய்து சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வாழ்வாதார வேலைத்திட்டங்களின் பொருட்டு ஈடுபடச் செய்யும் நோக்கில் 2018 ஆம் ஆண்டாகும் போது 30211 சமுதாய அடிப்படை அமைப்புக்களும் 331 பிரதேச அமைப்புக்களும் 25 மாவட்ட குழுக்களும் செயற்பட்டு வருகின்றன சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு 2018 ஆம் ஆண்டிற்குள் பயிற்றுனர்களை பயிற்றுவிக்கம் வேலைத்திட்டத்தின் கீழ் உத்தியோகத்தர்கள் 132, 331 தலைமையக முகாமையாளர்களும் சமுதாய அடிப்படை அமைப்புவிடய உத்தியோகத்தர்கள் 25 பேர் உட்பட மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் சகல முகாமையாளர்களும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் விழிப்பூட்டப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாலர்கள் மற்றும் கணக்குப் பரிசோதகர்கள் ஆகிய 1324 மக்கள் பிரதிநிதிகளின் பொருட்டு செயற்பாடுகள் மற்றும் பணிப் பொறுப்புக்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்கள் 26 ஐ நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பிரிவுக்குறிய 2018 ஆம் அண்டின் செயலாற்றுகை தொடர்பான விரிவான தகவல்களை 09ம் இலக்க அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 2018ம் ஆண்டிற்குறியதாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் பெற்றுக் கொண்டுள்ள செயலாற்றகைப் பற்றிய பொழிப்பின் விபரம் ஒன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

## வாழ்வாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள்

2016-2030 இற்குறியதாக பூகோள அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலைபேரான அபிவிருத்தி இலக்குகள் 17 இற்குள் பிரதான விடயமாக வறுமையினை ஒழிப்பது மற்றும் பட்டினியை இல்லாமல் ஆக்குதல் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டமிடலை தயாரிக்கும் போது வறிய குடும்பங்களை வலுவூட்டி அவர்களை வறிய நிலையிலிருந்து மீட்டெடுக்கும் முக்கிய குறிக்கோள்களை முன்னெடுத்து கொண்டு திணைக்களததின் சகல கருத்திட்டங்களும் திட்டமிடப்பட்டது. இங்கு வறிய குடும்பங்களை வலுவூட்டுவதனூடாக எதிர்ப்பார்க்கப்படுவது அவர்களை பொருளாதார, சமூக, அரசியல் உடல், உள மற்றும் சட்டம் ஆகிய சகல துறைகளிலும் ஒன்று திரண்டதாக மொத்தமாக வலுவூட்டப்பட்ட பலம் வாய்ந்த

ஆட்களாக அவர்களை மாற்றுவதாகும். அதன் பிரகாரம் திணைக்களத்தின் நோக்கு, பணி என்பன புதிய திசைக்குத் திரும்பியுள்ள்துடன் அந்த நோக்குகளுடன் அதற்குறிய நோக்கங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு 2017ம் ஆண்டிலிருந்து திணைக்களத்தின் முன் நடவடிக்கைகளைத் தயாரிக்கும் திட்டமிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் 2018ம் ஆண்டின் வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு பொதுத் திறைசேரியிலிருந்து நேரடியாக 2000.00 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு இத்திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றது வாழ்வாதார அபிவிருத்தி பிரிவினால் செயற்படுத்தும் கருத்திட்டங்களிடத்தேயே விவசாய அபிவிருத்திக் கருத்திட்டம், கால்நடை வளர்ப்புக் கருத்திட்டம், மீன்பிடி அபிவிருத்தி கருத்திட்டம், சுயதொழில் கைத்தொழில் அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்களை செயற்படுத்துவதன் ஊடாக வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) பயனாளிக் குடும்பங்களினதும் குறைந்த வருமானம் பெறும் வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) பயனாளிக் குடும்பங்களினதும் வருமான நிலையினை உயர்த்துவதும் குறைந்த வருமானம் பெறும் அக்குடும்பங்களினது சுகாதார மற்றும் போசனை மட்டத்தினை உயர்த்துவதும், தொழில் சந்தைக்கு பொருத்தமான ஊழியர்களை வழங்குவதற்கும் தொழிற் பயிற்சிகளை வழங்குவது இப்பிரிவின் முக்கிய பணியாகும்.

2018 ஆம் ஆண்டிற்குள் இத்திணைக்களத்தின் சகல அபிவிருத்தி பிரிவுகளின் மூலம் பூர்த்தி செய்ய திட்டமிட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கையானது 50,830 ஆகும் என்பதுடன் வருட இறுதியில் 41,789 கருத்திட்டங்களை பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. அதற்கமைய வருட இறுதியில் ரூ மில்லியன் 1006,89 ஐ செலவிட்டு வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய 2018 ஆம் ஆண்டிற்குள் அடைந்து கொண்ட நிதி முன்னேற்றமானது 63% மாகும் என்பதுடன் பௌதீக முன்னேற்றமானது 82% ஆகும்.

இப்பிரிவின் கீழ் மேலே காட்டப்பட்ட உப பிரிவுகள் மற்றும் மாவட்ட ரீதியாக செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள், அவற்றின் பொருட்டு செலவிடப்பட்ட நிதி, கருத்திட்டங்கள் மற்றும் பயனாளிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் இலக்கம் 08 முதல் 13 வரையிலான அத்தியாயங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

## ஏனைய துறைகளின் செயலாற்றுகை

2018 ஆம் ஆண்டில் ஏனைய சேவைகள் மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளின் செயற்திறன் தொடர்பான தரவுகள் மற்றும் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இவ் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதாவது உதவிச் சேவை என்ற வகையில் 2018ம் ஆண்டிற்குள் நிர்வாகம் பயிற்சி மற்றும் மற்றும் விசாரணைப் பிரிவின் செயலாற்றுகை 02.03 மற்றும் 04 ஆம் அத்தியாயங்களின் கீழும் 06 மற்றும் 07 அத்தியாயத்தின் கீழ் சமூக பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரி பிரிவின் செயலாற்றுகையும் சமூக அபிவிருத்திப் பிரிவின் செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் 08 அத்தியாயத்திலும் தரப்பட்டுள்ளன. தொழில் முயற்சிப் பிரிவின் செயலாற்றுகை 11 வது அத்தியாயத்திலும் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் செயலாற்றுகை 12வது அத்தியாயத்திலும், ஊடகப் பிரிவின் செயற்லாற்றுகை 13 வது அத்தியாயத்தின் கீழும் கணக்கறிக்கை பற்றிய விபரம் 15 வது அத்தியாயத்தின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திணைக்களத்தின் முக்கியமான வேலைத்திட்டமான சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டம் 2018 ஆம் ஆண்டிற்குறிய சாராம்சப்படுத்தப்பட்ட முன்னேற்றமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும். அதாவது உதவிபெற்ற 1384021 பேருக்கு வழங்கப்பட்ட உதவிப் பணத்தின் தொகை ரூபா மில்லியன் 39,238.79 ஆகும் என்பதுடன், இத்தொகை செலவிடப்பட்டது, இவ் வருடத்தில் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா மில்லியன் 39,600.00 ஆன முழு ஒதுக்கீட்டுத் தொகையில் இருந்ததாகும்

இதற்கு மேலதிகமாக சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 2018ம் ஆம் ஆண்டின் சமூக பாதுகாப்பு நிதியத்தின் ரூபா மில்லியன் 1159.47 ஐ செலவிட்டு பயனாளிகள் 282013 பேருக்கு தங்களது அன்றாட வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை முக்கியமான சந்தர்ப்பங்களின் போது உதவி வழங்குவதற்கு முடியுமாக இருந்தது.

| | |
|---|---|
| பிறப்பின் பொருட்டு 7,500.00 வீதம் | 6,707 பேருக்கு |
| இறப்பின் பொருட்டு 15,000.00 வீதம் | 29,620 பேருக்கு |
| திருமணத்தின் பொருட்டு 7,500.00 வீதம் | 29,544 பேருக்கு |
| நோய்களின் பொருட்டு 7,500.00 வீதம் | 58,578 பேருக்கு |
| புலமைப்பரிசிலின் பொருட்டு 1,500.00 வீதம் (24 மாதங்கள்) | 10,000 பேருக்கு |
| விசேட பிறப்புக்கள் | 12,722பேருக்கு |

என்றவகையிலாகும்

(இரட்டைக் குழந்தை 02 இற்கு ரூபா 5,000.00 மற்றும் இரட்டைக் குழந்தை 03 அல்லது அதிலும் கூடியது ரூபா 10000.00 வீதம்)

மேற்குறிப்பிட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி மற்றும் கட்டமைப்பு அபிவிருத்திக்காக திறைசேரியில் ரூபா மில்லியன் 86 கிடைக்கப்பெற்றதுடன் அதில் ரூபா மில்லியன் 33.24 ஐ செலவிடப்பட்டு அலுவலக ஊழியர்கள் 27576 பேருக்கு பயிற்சி வாய்ப்புக்கள் மற்றும் நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்குறியதாக பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னேற்றமதனது 39% வீதமாகும். இப்பிரிவின் மூலம் 442 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எண்ணியிருந்ததுடன் பூர்த்தி செய்யக்கூடிய கருத்திட்டங்களின் எண்ணிக்கையானது 397 ஆகும்.

இவை தவிர 2018 ஆம் ஆண்டில் முன்னர் குறிப்பிடப்பட்ட அரச நிறுவனங்கள் 05 திணைக்களத்திற்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான ஓய்வூதியச் செயற்பாடுகள் மற்றும் அக்ரஹார காப்புறுதிச் செயறபாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய கோவைகளைத் தயாரிக்கும் செயற்பாடுகளும் நிறுவனத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பைத் தயாரித்தல் அரசாங்க ஓய்வூதியத் திணைக்களம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடனான தொடர்ச்சியான தொடர்பாடல் ஒருங்கிணைப்பு என்பவற்றை மேற்கொண்டது.

மேற்குறித்த பின்னணியில் திணைக்களமானது தாபன மற்றும் நிர்வாக ரீதியாக ஸ்திரப்படுத்துவதற்கு குறித்த பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து ரூ.மில் 1006.89 ஐ பயனாளிகளினதும் குறைந்த வருமானம் பெறுவோரினதும் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு செலவிட்டு 41,789 அபிவிருத்தி கருத்திட்டங்களை நாடுபூராகவும் செயற்படுத்தக் கூடியதாக இருந்தமையும் பல்வேறு திட்டங்கள் ஊடாக 666,051 பயனாளிகளுக்கு ரூபா மில்லவியன் 43,645.93 ஐ கடனாக வழங்கக் கிடைத்தமை திணைக்களம் பெற்றுக் கொண்ட வெற்றியாகும். அதன் மூலம் வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் 04 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை ஓரளவுக்கேனும் அடைய முடிந்தது. மேலும் எமது நாட்டின்

வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி) மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களை வலுவூட்டி அவர்களது வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தி அவர்களை வறுமையிலிருந்து விடுவித்து அவர்களை நாட்டின் பிரதான பொருளாதார திசையில் செயலூக்கமிக்க நிலையான பங்காளர்களாக உருவாக்கும் உன்னத குறிக்கோளை அடைவதற்காக இத்திணைக்களம் நீண்டதொரு பயணத்தை 2018ம் ஆண்டில் செயற்படுத்தியது. அக்குறிகோல்களை அர்த்தமுள்ளதாகவும், முழுமையாகவும் அமைந்து கொள்ள இத்திணைக்களம் எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன். முன்வரும் வருடங்களில் இக்குறிக்கோள்களை அமைந்து கொள்ளுளம் பொருட்டு ஊக்குவிக்கப்பட்ட மனித வளம் ஒன்றினை உருவாக்கும் நோக்கில் எதிர்காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எஸ்.ஈ.ஆர்.ரீ.எம்.எஸ். பண்டார

பணிப்பாளர் நாயகம்
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

## 2. மனித வளங்கள் பிரிவின் செயலாற்றுகை (நிர்வாகப் பிரிவு) -2018

**சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மனிதவளப்பிரிவு – நிர்வாகம், தாபனம், சட்டம் மற்றும் விசாரணைகளுக்குறிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. நிர்வாகத்தின் போது எதிர்கொள்கின்ற நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதும் இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற முக்கியமான கடமையாகும்.**

### 2.1.1. பிரதான குறிக்கோள்கள்

- ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவி உயர்வு நடைமுறையினை நடைமுறைப்படுத்துல்.
- பணியாளர்களின் நடத்தைகள், ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பேணி வருதல், நாளாந்த கடமைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- நிறுவனத்தின் நடத்தைச் செயற்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- அலுவலக கட்டமைப்பினத் தயாரித்தல் மற்றும் அமைப்புக் கட்டமைப்பினை தயாரித்தல்.

### 2.1.2. நாளாந்தக் கடமைகள்

- நாளாந்த தபால் தொடர்பான நடவடிக்கைககளை மேற்கொள்ளல்.
- பிரிவுகள் மற்றும் பிரிவுசார் ஒருங்கிணைப்பினை பராமரித்துச் செல்லல்.
- பொது மக்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல்.
- பணியாளர்களின் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேறகொள்ளல்.
- பணியாளர்களான சகல உத்தியோகத்தர்களினதும் தனிநபர் கோவைகளை பராமரித்தல், பேணிச் செல்லல் மற்றும் இற்றைப்படுத்தல்..
- போக்குவரத்து அலகை முகாமை செய்தல்.
- ஊழியர் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணப் படிகள் மற்றும் அனைத்துக் கொடுப்பனவுகளுடனும் தொடர்புடைய பட்டியல் மற்றும் பதவியுயர்வுப் பரீட்சைகளை ஒழுங்குசெய்தல்.
- வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள், போட்டிப் பரீட்சைகள் மற்றும் பதவியுயர்வுப் பரீட்சைகளை ஒழுங்கு செய்தல்.

- உத்தியோகத்தர்களை இணைப்பு செய்வது தொடர்பான புள்ளிவிபர அறிக்கைகளை பராமரித்தல்.
- மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றச் செயற்பாடுகள்.
- உத்தியோகத்தர்களுடன் தொடர்புபடுகின்ற ஒழுக்காற்று நிர்வாக நடவடிக்கைகள்

### 2.1.3. விஷேட அடிப்படைகள்

- நிர்வாகப் பிரிவுக்குரிய பாராளுமன்ற வினாக்களுக்கான குறித்த பதில்களை வழங்குவதும் அமைச்சுடனான ஒருங்கணைப்புக்கள்.
- பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவுடன் தொடர்புடைய கடமைப் பணிகள்.
- நிர்வாகப் பிரிவுக்குரிய கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்களை தயார்ப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

### 2.1.4. ஒழுங்குக் கட்டமைப்பு.

- பாராளுமன்ற ஆலோசனைச் செயற்குழுக் கூட்டங்களில் எழுப்பப்படும் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பில் பிரிவுகளின் தலைவர்களுக்கு அறிவித்தல் செய்தல்.
- வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் மற்றும் ஏனைய பதவி உயர்வுப் பரீட்சைகளை நடாத்துதல் / தொடர்பாடல் பணிகளை பூர்த்தி செய்தல்..
- நிலவிவரும் பதவி வெற்றிடங்களைக் கவனத்திற் கொண்டு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்.
- சமூக வலுவூட்டல் தொடர்பான கண்காணிப்புச் செயற்குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல்.

**2.1.5. அமைப்பு கட்டமைப்பு**

## Organizational Chart – National Level:



## Organizational Chart – District Level:




**SSM** – Senior Samurdhi Manager

**SDO** – Samurdhi Development Officer

## 2.1.6. பதவியணியினர்

களப்பணி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கையானது 25.794 ஆகும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 2.1**
**உத்தேச பணியாளர்களும் வெற்றிடங்களும் (பொழிப்பு)**

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது பணியில் உள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | 1 | 0 | 1 |
| | | 2 | 2 | 0 |
| 2 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| 3 | பணிப்பாளர்கள் | 7 | 0 | 7 |
| 4 | பணிப்பாளர்கள் | 5 | 1 | 4 |
| 5 | பணிப்பாளர்கள் | 1 | 1 | 0 |
| 6 | பிரதம கணக்காளர் | 1 | 1 | 0 |
| 7 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| 8 | உதவிப் பணிப்பாளர்கள் | 3 | 3 | 0 |
| 9 | உதவி / பிரதிப் பணிப்பாளர் | 426 | 29 | 397 |
| 10 | மாவட்ட பணிப்பாளர்கள் | 20 | 20 | 0 |
| 11 | மாவட்ட பணிப்பாளர்கள் | 5 | 5 | 0 |
| 12 | கணக்காளர்கள் | 28 | 6 | 22 |
| 13 | உள்ளகக் கணக்காய்வாளர்கள் | 2 | 2 | 0 |
| 14 | சட்ட உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 15 | நிருவாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 16 | தொகுதிப் பகுப்பாய்வாளர் | 1 | 1 | 0 |
| 17 | நிதி உதவியாளர் | 1 | 1 | 0 |
| 18 | செய்தி உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 19 | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் | 10 | 8 | 2 |
| 20 | சமுர்த்தி முகாமையாளர் (விசேட தரம்) | 2011 | 1850 | 161 |
| 21 | சிரேஷ்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் | 20 | 20 | 0 |
| 22 | ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் | 56 | 52 | 4 |
| 23 | சமுர்த்தி முகாமையாளர் (V1 a தரம்) | 388 | 549 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 48 | 48 | 0 |
| 25 | அபிவிருத்தி உதவியாளர் | 7 | 7 | 0 |
| 26 | மேம்படுத்தல் உத்தியோகத்தர் | 27 | 27 | 0 |
| 27 | அபிவிருத்தி உதவியாளர் | 4 | 4 | 0 |
| 28 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 4 | 4 | 0 |
| 29 | கணக்கீட்டு உதவியாளர் | 1 | 1 | 0 |
| 30 | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 31 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 365 | 0 | 365 |
| 32 | கணக்கீட்டு உதவியாளர் | 6 | 6 | 0 |
| 33 | ஊடக உதவியாளர் | 1 | 1 | 0 |
| 34 | மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 1 | 1 | 0 |
| 35 | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் | 95 | 95 | 0 |
| 36 | உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் | 54 | 0 | 54 |
| 37 | வீடியோ படப்பிடிப்பாளர்/தொகுப்பாளர் | 1 | 1 | 0 |
| 38 | கணக்குப் பதியுனர் | 1 | 1 | 0 |
| 39 | கணினி உதவியாளர் | 1 | 1 | 0 |
| 40 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 9 | 9 | 0 |
| 41 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 282 | 226 | 56 |
| 42 | முகாமைத்துவ உதவியாளர் | 163 | 163 | 0 |
| 43 | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | 22611 | 21856 | 755 |
| 44 | சாரதிகள் | 88 | 88 | 0 |
| 45 | சாரதிகள் | 19 | 19 | 0 |
| 46 | சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்கள் | 1 | 1 | 0 |
| 47 | அலுவலக பணி உதவியாளர்கள் | 38 | 38 | 0 |
| 48 | அலுவலக பணி உதவியாளர் | 339 | 336 | 3 |
| 49 | லொரி உதவியாளர் | 9 | 9 | 0 |
| 50 | தொழிலாளர்கள் | 8 | 8 | 0 |
| 51 | காவலாளிகள் | 2 | 2 | 0 |
| 52 | பாதுகாப்பு ஊழியர்கள் | 6 | 6 | 0 |
| 53 | சமையற்காரர் | 6 | 0 | 6 |
| **மொத்தம்** | | **27191** | **25515** | **1837** |

**மூலக்கூறு – திணைக்கள மூலக்கூறு**

**2.1.7**

1.சமூக வலுவூட்டல் மற்றும் நலநோம்புகை கௌரவ அமைச்சர் : - திரு. பீ. ஹரிசன் அவர்கள்
2.சமூக வலுவூட்டல் மற்றும் நலநோம்புகை பிரதியமைச்சர் : - திரு. ரஞ்சன் ராமநாயக்க அவர்கள்
3.சமூக வலுவூட்டல் மற்றும் நலநோம்புகை கௌரவ அமைச்சரின செயலாளர் : - திருமதி. ஷிராணி வீரக்கோன் அவர்கள்.

**2.1.7.1. தேசிய பேரவை அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல்.**

உத்தியோகத்தர்களின் பெயர்.

| | | |
|---|---|---|
| 1. திரு. ஜினசிரி தடல்லகே அவர்கள் | - | தலைவர். |
| 2. திரு. எஸ்.டீ. உடவத்தை அவர்கள் | - | மேலதிக செயலாளர் (நிர்வாகம்) |
| 3. திரு சோமசிரி லியன்வல அவர்கள் | - | (அங்கத்தவர்) |
| 4. கலாநிதி. எஸ்.எல்.ஏ.மாணியம் அவர்கள் | - | (அங்கத்தவர்) |
| 5. திரு. ஜீ.எல்.பீ. ஜினசோம அவர்கள் | - | (அங்கத்தவர்) |
| 6. திரு. பீ.ஏ.ரீ. ரொட்ரிகோ அவர்கள் | - | (அங்கத்தவர்) |
| 7. திரு. எச்.கே. ரஞ்சித் உதயசிரி அவர்கள் | - | பணிப்பாளர் (குறுநிதி) |
| 8. திரு. ஏ.ஜீ.வெல்லப்பிலி அவர்கள் | - | பணிப்பாளர் (சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி) |
| 9. திரு. பீ.ஆர்.டீ.எச். அனுரவன்ஷ அவர்கள் | - | பி. பணிப்பாளர் (சமுதாய அடிப்படை அபிவிருத்தி) |
| 10. திரு. எஸ்.ஏ.ஜீ.எஸ். வீரசிங்க அவர்கள் | - | (அங்கத்தவர்) |
| 11. திரு. ஆர். கணேஸராஜ் அவர்கள் | - | (அங்கத்தவர்) |
| 12. திருமதி. ஐ.டீ.எஸ்.சஞ்ஜீவனீ | - | செயலாளர் |

**2.1.7.2. வங்கி முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் பெயர் பட்டியல்**

**உத்தியோகத்தர்கள் பெயர் :**

1. திரு. நிமல் கொட்டவலகெதர அவர்கள் - பணிப்பாளர் நாயகம் (கட.மேவு) - தலைவர்
2. திரு. யூ.பீ. சரத் ரூபசிறி அவர்கள் - பணிப்பாளர் (குறுநிதி)
3. திரு. எச்.கே.ஏ. ரஞ்சித் உதயசிறி அவர்கள் - பணிப்பாளர் (குறுநிதி)
4. திரு. ரீ.வீ. வீரசேன அவர்கள் - (பொது முயற்சிகள் திணைக்களம் நிதியமைச்சு) உத்தியோகபூர்வ அங்கத்தவர்
5. திருமதி வீ.ர.ர.எஸ்.த.சில்வா அவர்கள் - மேலதிக பணிப்பாளர் - உத்தியோகபூர்வ அங்கத்தவர்
6. திரு. எச்.எல். திரேசா அவர்கள் - நியமன அங்கத்தவர்
7. திரு. கே.பீ.பீ.எச். மிஹிரி பென்ன அவர்கள் - நியமன அங்கத்தவர்
8. திரு. ஜே. சமரதுங்க அவர்கள் - நியமன அங்கத்தவர்.

### 2.1.8. 30 சமூக பாதுகாப்பு நிதிய நம்பிக்கைச் சபையின் அங்கத்தவர் பெயர்ப்பட்டியல்

**உத்தியோகத்தரின் பெயர்**

7. திரு. நிமல் கொட்டவலகெதர அவர்கள் - பணிப்பாளர் நாயகம் (கட.மே) - தலைவர்
8. திரு. எச்.கே. ரணவீர அவர்கள் - பணிப்பாளர் (சமூக பாதுகாப்பு)
9. திரு. யூ.ஜீ. ரத்ணசிரி அவர்கள் - மேலதிக செயலாளர் (மற்றும் பொருளாதார விவகார அமைச்சு)
10. திரு. எஸ்.டீ உடவத்தை அவர்கள் - மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
11. திருமதி எம்.ஏ......... அவர்கள் - மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி - சமூக வலுவூட்டல் மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சு)
12. திருமதி பீ.கே. ரத்னாயக்க அவர்கள் - பணிப்பாளர் (திறைசேரி நெறிப்படுத்தல் திணைக்களம்)
13. திரு. எச்.எம். ரத்னாயக்க அவர்கள் - அங்கத்துவம்
14. திரு. தமித் வீரசூரிய அவர்கள் - அங்கத்துவம்
15. திரு. அசங்க புஞ்சிதேவ அவர்கள் - அங்கத்துவம்
16. திரு முத்துவேலு மாரிமுத்து அவர்கள் - அங்கத்துவம்
17. திரு. எம்.டபிள்யூ. எம் யாசீன் அவர்கள் - அங்கத்துவம்

## 2.1.9. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் 2018

**1. பணிப்பாளர் நாயகம்**

1. கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன அவர்கள்- 2018.05.16 திகதி வரை
2. திரு.ஜே. தடல்லகே - 2018.09.18 திகதி வரை
3. திரு. நிமல் கொட்டவலகெதர அவர்கள் (பதில்) -

**2. மேலதிக உதவிப் பணிப்பாளர் நாயகம்**

1. திரு.எஸ்.ஈ.ஆர்.ரீ.எம்.எஸ்.பீ பண்டார அவர்கள்
2. திருமதி என்.ஏ.பி. நிஷ்ஷங்க அவர்கள்

**3. பிரதம கணக்காளர்**

1. செல்வி ஆர் மனம்பேரி

**4. பணிப்பாளர் பதவிகள்**

1. திரு சீ.டீ களுஆரச்சி அவர்கள் - 2018.09.28 திகதி வரை
2. திரு ஏ.ஜீ வெல்லப்பிளி அவர்கள் - பணிப்பாளர் (சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி)
3. திரு ரஞ்சித் உதயசிறி அவர்கள் - பணிப்பாளர் (குறுநிதி) ) 2017.07.27 திகதி முதல் 2018.11.27 திகதி வரை
4. திரு பீ. கே. நிஷாந்த அவர்கள் பணிப்பாளர் (குறுநிதி)

**5. கணக்காளர் பதவிகள்**

1. திரு பீ.ர.எஸ்.ஜே. குமார அவர்கள் (நிதி மற்றும் கொடுப்பனவு)

**6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்**

1. திருமதி ஆர் பீ. பீ. அபேக்கோண் அவர்கள்

**07. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் பதவிகளின் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் பெயர்ப்பட்டியல் 2019.02.01**

| தொடர் இலக்கம் | பெயர் | | தரம் | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. கே.ஏ.எம் பெரேரா அவர்கள் | | இ.நி.சே. iii | கம்பஹா(கட.மே) |
| 2 | திருமதி பீ.ஏ.எஸ் உதயங்கனீ அவர்கள் | | இ.நி.சே. i | களுத்தறை |
| 3 | திருமதி கே.எஸ் பிரேமச்சந்திர அவர்கள் | | இ.நி.சே. i | கண்டி |
| 4 | திரு டப்.எம்.சீ.கே. வன்னிநாயக்க அவர்கள் | | இ.நி.சே. i | குருணாகலை |
| 5 | திரு.ஜே.ஏ.எஸ்.பீ. ஜயசிங்ஹ அவர்கள் | | இ.நி.சே. i | இரத்தினபுரி |
| 6 | திருமதி ஏ.டீ.பீ.குசுமசிறி அவர்கள் | | இ.நி.சே. i | கேகாலை |
| 7 | திருமதி எப்.ஆர்எம். ரியால்தீன் அவர்கள் | | இ.நி.சே. i | மாத்தளை |
| 8 | திருமதி. கே.எல்.எம்.சீ. குலரத்ன அவர்கள் | | இ.நி.சே. i | நுவரெலியா |
| 9 | திருமதி எஸ் சுதீஸ்னர் அவர்கள் | | இ.நி.சே. i | திருகோணமலை |
| 10 | திருமதி ஏ. தவபாலன் அவர்கள் | | இ.நி.சே. iii | கிளிநொச்சி |
| 11 | திரு ஏ.ஜீ.எஸ். அசோக்க அவர்கள் | | இ.நி.சே. i | கொழும்பு |
| 12 | திரு எம்.எம். சுப்ராஸ் அவர்கள் | | இ.நி.சே. iii | அம்பாறை (கட.மே) |
| 13 | திருமதி டீ.எஸ் விதானகே அவர்கள் | | இ.நி.சே. i | காலி |
| 14 | திருமதி டீ.பீ.ஏ.எஸ் திசாநாயக்க அவர்கள் | | இல.திட்.சே. iii | அநுராதபுரம் (கட.மே) |
| 15 | திருமதி ஜெயபவானி கணேசமூர்த்தி அவர்கள் | | இல.திட்.சே. ii | முல்லைத்தீவு (கட.மே) |
| 16 | திரு டப்.எம்.பீ. விஜய பண்டார அவர்கள் | | இல.திட்.சே. i | பதுளை |
| 17 | திரு எல்.ஏ.சோமரத்ன அவர்கள் | | இல.திட்.சே.1 | மொணராகலை (பதில்) |
| 18 | திரு கே.ஏ.எல். சிரில் அவர்கள் | | இல.திட்.சே.i | மாத்தறை |
| 19 | திரு என்.ஜீ.ஜே.பீ. ரோஹித்த அவர்கள் | | இல.திட்.சே. i | ஹம்பாந்தோட்டை |
| 20 | திருமதி பீ.பாக்கியராஜன் அவர்கள் | | இல.திட்.சே. i | மட்டக்களப்பு |
| 21 | திரு எஸ்பீ.வீரசேக்கர அவர்கள் | | இல.திட்.சே. iii | புத்தளம் (கட.மே) |
| 22 | திரு டப்.ஜீ.டப். வணசிங்க அவர்கள் | | இல.திட்.சே. i | பொலன்னறுவை (பதில்) |
| 23 | திரு கே. மகேஸ்வரன் அவர்கள் | | இ.தி.சே.i | யாழ்ப்பாணம் (பதில்) |
| 24 | திரு சரோஜினிதேவி பத்மரஞ்சன் அவர்கள் | | இ.தி.சே.i | வவுனியா |
| 25 | திரு எஸ். குணபாலன் அவர்கள் | | இ.நி.சே.i | மன்னார் (பதில்) |

## 8. பிரதிப் பணிப்பாளர் பதவிகள்

1. திரு மகேஷ் பெரேரா அவர்கள் - பி.பணிப்பாளர் (திட்டமிடலும் நெறிப்படுத்தலும்)
2. திரு எஸ். லியனாராச்சி அவர்கள் - பி.பணிப்பாளர் (பயிற்சி மற்றும் ஆராய்ச்சி)
3. திரு எச். கே. ரணவீர அவர்கள் - பி.பணிப்பாளர் (சமூக நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்பு)
4. திருமதி ஆர்.எம்.எல்.டபிள்யூ.எல் ரத்னாயக்க அவர்கள் - பி.பணிப்பாளர் (குறுநிதி)
5. திரு பீ.ஜீ.எல். ஆர்.என்.எஸ் பண்டார அவர்கள் - பி.பணிப்பாளர் (கண்டி மாவட்டம்)
6. திரு எஸ். ஆர். விஜயசேகர அவர்கள் - பி.பணிப்பாளர் (சட்டம்)
7. திரு எஸ். வன்னிகம அவர்கள் - பி.பணிப்பாளர் (மாத்தறை மாவட்டம்)
8. திரு கபில மாசகோரால அவர்கள் - பி.பணிப்பாளர் (காலி மாவட்டம்)
9. திருமதி எஸ். டீ. கல்யாணி அவர்கள் - பி.பணிப்பாளர் (காலி மாவட்டம்)
10. திரு.ரஞ்சித் டி. சில்வா அவர்கள் - பி.பணிப்பாளர் (மாத்தளை மாவட்டம்)
11. திரு. பீ.ஆர்.டி.எச். அநுரவன்ஷ அவர்கள் - பி.பணிப்பாளர் (சமுதாய அடிப்படை அமைப்பு காரியாலயம்)

## 9. உதவிப் பணிப்பாளர் பதவிகள்

1. திரு ஆனந்த கமகே அவர்கள் - சந்தைப்படுத்தல் பிரிவு – தலைமைக் காரியாலயம்
2. திருமதி ஐ.டீ.என். சஞ்ஜீவனி அவர்கள் - சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்
3. திரு எஸ்.பீ. வணிகதுங்க அவர்கள் - மாத்தறை மாவட்டம்
4. திரு ஐ.சீ.ஜே குணரத்ன அவர்கள் - நிர்வாகம் - தலைமைக் காரியாலயம் (விசாரணை)
5. திரு பீ.டீ.ஆர.கே பெரேரா அவர்கள் - கண்டி மாவட்டம்
6. திரு. ஏ.எப் பிரணாந்து அவர்கள் - கொழும்பு மாவட்டச் செயலகம்
7. செல்வி டபிள்யூ எம்.ரீ.யூ விஜேரத்ன அவர்கள் - தாபனம் தலைமைக் காரியாலயம்
8. திரு டபிள்யூ ஜீ.எ.எஸ். விக்ரமசிங்க அவர்கள் - கண்டி - கண்டி- மாவட்ட காரியாலயம்

## 10. நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள்

1. திரு பீ.ஜீ உபுல் ஜயசாந்த (நிர்வாகம்)
2. திரு டீ.பீ இலங்கன்திலக்க (பதில்) (தாபனம்)

## 03. மனித வளங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2018

### 3.1. அறிமுகம்.

2030ஆம் ஆண்டாகும் போது வறுமை நிலையற்ற வலுவூட்டப்பட்ட சுபீட்சமிகு ஒரு இலங்கையினை உருவாக்குவதே சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்காகும். இந்த நோக்கினை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு செயற்படுகின்ற விதத்தில் தலையிடும் பலமிக்க மனித வளம் ஒன்றினை உருவாக்க வேண்டியுள்ளது. ஆகையினால் 2018ஆம் ஆண்டில் மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவின் இலக்கானது பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டி சுபீசமிகு தேசம் ஒன்றினைக்கட்டியெழுப்பி தேசிய பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்ய தோள் கொடுக்கும் உத்தியோகத்தர்களை இலங்கையின் மனித மூலதனம் ஒன்றாக ஆக்கிக் கொண்டு அவர்களை அறிவு பூர்வமாக பலப்படுத்திக்கொண்டு பணியில் திருப்பிகரமான ஒரு நிலையினை உருவாக்குவதாகும். இந்த மனித வளத்தினை உற்பத்தித் திறனுள்ள வினைத்திறன் மிக்க பண்புகளைக் கொண்டதாகவும், அறிவு, திறமை, மற்றும் உடன்பாட்டு ரீதியான மனப்பாங்கு மற்றும் முன்னுதாரணமிக்கவர்கள் என்ற வகையில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நோக்கு, பணி என்பனவற்றினை அடைந்து கொள்ளக் கூடிய மனித மூலதனம் ஒன்றினை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்குள்ளேயே உருவாக்கிக் கொள்ளமுடியம். இவ்வாறான மனித மூலதனத்தினை உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவில் 2018ஆம் ஆண்டில் செயற்பாட்டுத்திட்டமிடல் தாயார் செய்யப்பட்டது.

மனித வள அபிவிருத்தி பிரிவின் ஒட்டு மொத்த பயிற்சிகளினூடாக பணியாளர்களை வலுவூட்டுதல், அதாவது பணியாளர்களின் அறிவு, திறமை, ஆற்றல்கள், உடன்பாட்டு ரீதியான மனநிலை பெறுமதிகள், என்னப்பாடுகள் (சிந்தனைகள்) மற்றும் முன்மாதிரிகளையும் மேம்படுத்தவது எதிர்பார்க்கப்படுகின்றது.

**நோக்கு:**

2030 ஆம் ஆண்டில் வறுமை நிலையற்ற இலங்கையினை பொருட்டு பலம் வாய்ந்த மனித மூலதனத்தினை உருவாக்குதல்.

**பணி:**

வறிய மக்களை வலுவூட்டி, தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்து கொள்ளத் தேவையான அறிவு, திறமை, மனப்பாங்கு, மற்றும் முன்மாதிரிகளையுடைய பலம் வாய்ந்த மனித வளம் ஒன்றினை திணைக்களத்திற்குள் உருவாக்ககிக் கொள்ளல்.

**நோக்கங்கள்:**

- திணைக்களத்திற்குள் பூரணத்துவமுள்ள வளவாளர்கள் குழு ஒன்றினையும், சகல பணியாளர்களையும் விசேட திறமைகளைக் கொண்ட மனித வளங்களாக ஆக்கிக் கொள்ளல்.
- திணைக்களத்தின் பணியினை அடைந்து கொள்ளக் கூடிய விதத்தில் திறமைகளைக் கொண்ட பணியாளர்களை உருவாக்குதல்.

- சரியாக முகாமைத்துவம் செய்து உடன்பாட்டு ரீதியான மனப்பாங்குகளைக்கொண்ட முழுமையான மனித வளம் ஒன்றினை உருவாக்குதல்.
- சமுர்த்தி வேலைத்திட்டத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்யும் பயனாளி மக்களையும் இடையீட்டாளர்களாக செயற்படும் உத்தியோகத்தர்களையும் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் மிக்க பண்புகளைக் கொண்ட பணியாளர் குழாமாக மாற்றுதல்.
- 2018ஆம் ஆண்டில் முழுத் திணைக்களத்தினதும் இலக்குகளை பூர்த்தி செய்ய துணைபுரிதல்.
    - ய) சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டுதல்.
    - டி) ஒட்டுமொத்த வங்கி வலையமைப்பினையும் இலாபமீட்டுகின்ற வங்கிகளாக மாற்றுதல்.
- வாடிக்கையாளர்களின் கவர்ச்சிகளை அதிகரிக்கக் கூடியவிதத்தில் சமுர்த்தி வங்கிகளை மறுசீரமைத்தல்.

## மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவின் பணிப்பொறுப்புக்கள்:

- உள்ளக பணியாளர்களின் அறிவு, திறமை, மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்தல்.
- சமுர்த்தி பயிற்சி நிலையங்களை வினைத்திறன்மிக்கதாகவும், பயனுறுதி வாய்ந்ததாகவும் பராமரித்து பயிற்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல்
- செயற்படுத்தும் வேலைத்திட்டங்களின் நன்மை தீமை நிலையினை ஆய்வு செய்வதும் புதிய வழிமுறைகளை இனங்காண்பதும்.

# மூலோபாய வழிகள்:

- ❖ திணைக்களத்தின் நோக்கு மற்றும் பணி என்பவற்றினை அடைந்து கொள்வதும் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய பிரகாரம் பணியாளர்களுக்கான விடயத்துடன் இணைந்த அறிவினைப் புகட்டுதல்.
- ❖ அறிவு மற்றும் திறமைகள் பூரணத்துவமான வளவாளர் குழாம் ஒன்றினை திணைக்களத்திற்குள் உருவாக்குதல்.
- ❖ பணியாட்களின் பயிற்சியின் பொருட்டு தேவையான பயிற்சி நிலையங்களை முறைப்படியாகவும் வினைத்திறன் உள்ளவிதத்திலும் பராமரித்துச் செல்லல்.
- ❖ வறுமையினை ஒழிப்பதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் பேரண்டப் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய விதத்தில் பணியாளர்களின் அறிவாற்றலை இற்றைப்படுத்துதல்.
- ❖ வறுமையினை ஒழிக்கும் பொருட்டு தேவையான வெளிநாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பில் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளச் செய்தல்.
- ❖ அறிவு மற்றும் கல்வி என்பனவற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு உயர் தொழில் மற்றும் கல்விப் பாடநெறிகளை கற்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

## 3.2. <u>2018 இல் செயற்படுத்திய கருத்திட்டங்களின் முன்னேற்றம்.</u>

**தலைமைக் காரியாலயத்தின் பணியாளர்களுக்கான விடயத்துடன் இணைந்த பயிற்சியினை வழங்குதல்.**

**அறிமுகம்:** தலைமைக்காரியாலயத்தில் பணியாற்றும் பல்வேறு பதவிகளுக்குறிய உத்தியோகத்தர்களின் பொருட்டு அவர்கள் பணியாற்றும் விடயங்களுக்கு ஏற்புடையதாக (தாபன நடவடிக்கைகள்/ தனிநபர் கோவைகள்/ ஓய்வூதியம் தயாரித்தல்/ அரச நிதி/ கணக்காய்வு/ ஒழுக்காற்று முறை/ கணினி அறிவு போன்ற பிற விடயத்துறைகளுக்குறியவாறு) அறிவினை விருத்தி செய்யும் பொருட்டு பயிற்சியினை வழங்குதல்.

4. **இலக்கக் குழு(பயனாளிகளின் எண்ணிக்கை)** :- 395

5. **செயற்படுத்தப்படும் முறை** :- விரிவுறைகள், ஆற்றுப் படுத்துதல், (Presentation) மற்றும் கையேடுகள்.

6. **செயற்படுத்துமிடம்** :- தலைமைக்காரியாலயம் மற்றும் சமுர்த்தி பயிற்சி நிலையம்.

(சமனவவெவ/ நில்லம்பை/ நிலாவெளி)

7. **அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு** :- ரூ. மில். 2.00

5. **ஆரம்பிக்கப்பட்ட திகதி** :- 2018.03.01

6. **முடிக்கப்பட்ட திகதி** :-2018.12.14

7.. **2018.12.31 திகதியில் செலவும்** :- ரூ.மி 1.63

8.. **கருத்திட்டத்தின் முடிவு** :- 512 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியினை வழங்குதல்.

9. **பெற்றுக் கொள்ளப்பட்ட சமூக**

**பொருளாதார ரீதியான நன்மைகள்** :- உத்தியோகத்தர்களுக்கு விடயத்துடன் இனைந்ததான பயிற்சியினை வழங்குவதன் ஊடாக அவர்களது அறிவு வளர்ச்சியடைந்து வினைத்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த பணியாளர் ஒருவரை உருவாக்குதல் மற்றும் அதனூடாக முழுச் சமூகத்திற்கும் சிறந்த சேவை ஒன்றினை வழங்குதல்.

10. **கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள்:-**



**புதிதாக ஆட்சேர்த்தக்கொள்ளப்பட்ட அலுவலக பணி உதவியாளர்களுக்கான பயிற்சியினை வழங்கும் ஒரு நிகழ்ச்சி**



**ஒழுக்காற்று தொடர்பான பயிற்சியினை வழங்கும் ஒரு நிகழ்ச்சி**



**உத்தியோகத்தர்களுக்கான அரசாங்க நிதி முகாமைத்தவம் தொடர்பான ஆரம்ப அறிவினை வழங்குதல்.**

### 3.2.2. மாவட்ட பணியாளர்களுக்கு விடயத்தோடு இணைந்த பயிற்சியினை வழங்குதல்.

**அறிமுகம்:-** மாவட்டங்களின் இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றும் பல்வேறு பதவிகளுக்க்குறிய சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் கடமைகளை நிறைவேற்றுகின்ற விடயங்களுக்குறியதாக (தாபன நடவடிக்கைகள்/ தனிநபர்கோவை/ ஓய்வூதியம்தயாரித்தல்/ அரசாங்க நிதி/ கணக்காய்வு/ ஒழுக்காற்று நடவடிக்கைகள்/ கணினி அறிவு போன்ற பிற

விடயத்துறைகளுக்குறியதாக) அறிவினை விருத்தி செய்யும் பொருட்டு பயிற்சியினை வழங்குதல்.

4. **இலக்குக் குழு (பயனாகளின் எண்ணிக்கை)** :- 100 வேலைத்திட்டங்கள்

5. **செயற்படுத்தும் முறை** :- விரிவுறைகள், ஆற்றுப்படுத்துதல் (Presentation) மற்றும் கையேடுகள்

6. **செயற்படுத்துமிடம் :** மாவட்டச் செயலகங்கள் மற்றும், பிரதேச செயலகங்கள்.

7. **அங்கீகரித்த நிதி ஒதக்கீடு :-** ரூ. மில் 14.00

5. **ஆரம்பித்த திகதி** :- 2018.03.01

6. **முடிக்கப்பட்ட திகதி** :- 2018.12.14

7.**2018.12.31 திகதியில் செலவுகள்** :- ரூ. மில் 7.15

8**. கருத்திட்டத்தின் முடிவு** :- சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 8473 பேருக்கு விடயத்தோடு இணைந்த பயிற்சியினை வழங்கியமை.

9. **பெற்றுக் கொள்ளப்பட்ட சமூக பொருளாதார நன்மைகள்:-** உத்தியோகத்தர்களுக்கு விடயத்தோடு இணைந்த பயிற்சியினை வழங்குவதன் ஊடாக அவர்களது அறிவு வளர்ச்சியடைந்து வினைத்திறன்மிக்க மற்றும் பயனுறுதி வாய்ந்த ஊழியர் ஒருவரை உருவாக்கி அதனூடாக முழு சமூகத்திற்கும் சிறந்த சேவையொன்றினை வழங்குதல்.

10. **கருத்திட்டத்திற்குறியதான புகைப்படங்கள் :-**



**சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உத்தியோகத்தர்களை விளக்கமளிக்கும் சந்தர்ப்பம் ஒன்று.**





**தொழில்முயற்சி அபிவிருத்தி தொடர்பான பயிற்றுனர்களாக சமுர்த்தி முகாமையாளர்களைப் பயிற்றுவித்தல்.**

அறிமுகம் :- சமுர்த்தி வங்கி வலையமைப்பை இலாபகரமானதாக ஆக்குதல், மற்றும் அந்த வங்கிகளை பயனுள்ளதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் உருவாக்குவது மனித வள பிரிவின் குறிக்கோளாகும். சமுர்த்தி வங்கிகளின் ஊடாக தொழில் முயற்சி அபிவிருத்திகளின் பொருட்டு கருத்திட்டக்கடன்கள் வழங்கப்பட்டாலும் கருத்திட்ட தேவைப்பாடுகளை இனங்காண்பதும் கண்காணிப்பது மற்றும் பின்பணி ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் உள்ள குறைபாடுகள் காரணமாக வெற்றிகரமற்ற சிறு வியாபாரங்கள் அதிகரித்துள்ளதுடன் கடனை செலுத்தாமலுள்ள சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளது. ஆகையினால் இப்பாடநெறியின் ஊடாக மேற்படி நிலமைகளை தீர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. சமுர்த்தி வங்கியின் ஊடாக கருத்திட்டக் கடனை வழக்குவதன் ஊடாக பொருளாதார வலவூட்டல்கள், அதிலிருந்து கடனைச் செலுத்தாமலுள்ள நிலைகள் என்பன குறைக்கப்பட்டுள்ளன.

**இலக்குக் குழு-** சமுர்த்தி முகாமையாளர் = 200

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் = 7500

**செயற்படுத்தப்படும் முறை - முதலாம் கட்டத்தின் போது** முகாமையாளர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. **இரண்டாம் கட்டத்தின் போது** இப்பயிற்றுனர்களைப் ஈடுபடுத்திக் கொண்டு களத்தில் கடமைபுரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றது. **மூன்றாம் கட்டத்தின் போது** சமுர்த்தி பயனாளிகளின் வர்த்தக மற்றும் கருத்திட்டங்களின் பொருட்டு தேவையான தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பில் விளக்கங்களை வழங்குவதும், வழிகாட்டல்களை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் பயனாளிகளின் வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்களை வலுவூட்ட எதிர்பார்க்கப்படுகின்றது.

**செயற்படுத்திய இடம்:-** முகாமையாளர்களை பயிற்றுவித்தல், நில்லம்மை, மற்றும் சமனவவெவ சமுர்த்தி பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பது மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு:** - ரூ.மில். 13

**ஆரம்பித்த திகதி** - 2018.03.01

**முடிக்கப்படவுள்ள திகதி** - 2018.12.31

**2018.012.31 வரையிலான செலவுகள்:-** சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

- ரூ.மில் 7.6

**கருத்திட்டத்தின் முடிவு -** பயிற்றுனர்களாக 270 சமுர்த்தி முகாமையாளர்களை பயிற்றுவித்தல், 8269 சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்.

1. **பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்:-** இக்கருத்திட்டத்தில் சமுர்த்தி முகாமையாளர்களை பயிற்றுவிக்கும் பொருட்டு தேவையான வளப்பங்களிப்பிளை YOULEAD நிறுவனத்தின் மூலம் வழங்கியமை. இங்கு முன் நடவடிக்கைகளின் பொருட்டு தேவையான வளப்பங்களிப்பினையும் பயிற்சிச்செலவினையும் YOULEAD நிறுவனம் மூலம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. 2018ஆம் ஆண்டிற்குள் 8269 சமுர்த்தி அபிவிருத்தி

உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்து தொழில் முயற்சியாளர்களை அபிவிருத்திச் செய்தல்.



**தொழில் முயற்சிப் பயற்றுனர்களாக முகாமையாளர்கள் பயிற்சி பெறும் ஒரு சந்தர்ப்பம்**

**3.2.4. தொழில்கல்வியினூடாக வினைத்திறனை உயர்த்தும் நோக்கில் உத்தியோகத்தர்களை ஊக்கப்படுத்தி உயர்கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்தல்.**

**இலக்குக்குழு :-** 150 உத்தியோகத்தர்கள்.

**செயற்படுத்தும் விதம்**:- * தங்களது தேவைக்கேற்ப தெரிவு செய்யப்பட்ட பாடநெறிகளின் பொருட்டு உத்தியோகத்தர்களுக்கு கற்கைப் பாடநெறிகளின் பொருட்டு கட்டணத்தைச் செலுத்துதல், * உத்தியோகத்தர்களை விளக்கமளித்தல், * குழுச் சிபாரிசுக்கு சமர்ப்பித்தல் * குழு சிபாரிசுகளையும் அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ளல் * கொடுப்பனவு நடவடிக்கைகளின் பொருட்டு கணக்குப் பிரிவிக்கு சமர்ப்பித்தல்.

**செயற்படுத்துமிடம்** - தலைமைக்காரியாலயம்.

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு** - ரூ. மில். 3.00

**ஆரம்பித்த திகதி** - 2018.01.25

**பூர்த்தி செய்யவுள்ள திகதி** - 2018.10.15

**2018.12.31 ஆம் திகதி வரை செலவுகள்** - ரூ.மில். 1.46

**கருத்திட்டத்தின் முடிவுகள்:** 52பேர் கற்கைப்பாடநெறியினை பயின்றுள்ளனர்.

**3.2.5. மனித வள அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறி**

**அறிமுகம்** - களத்துறையிலும் அலுவலகப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு சிறந்த உதவியினைப்பெறுகின்ற சான்றிதழ் பாட நெறிகள் நான்கின் கூட்டுச்சேவைகளின் இந்த டிப்லோமா பாடநெறி உள்ளது. உத்தியோகத்தர்களை 15 மாவட்டங்களிலிருந்து பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு இந்த வேலைத்திட்டத்தின் பொருட்டு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்து தேசிய தொழிற்கல்வி கற்கை நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

**இலக்கக்குழு** -50

**செயற்படுத்தப்படும் விதம்:-** - *இதன் பொருட்டு மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்களின் பெயர்களை வரவழைத்து தெரிவுசெய்யும் பொருட்டு தொழில் கல்வி கற்கை நிறுவனத்துடன் கூட்டிணைந்து நேர்முகப் பரீட்சையினை நடாத்துதல், * தேசிய தொழில் கல்வி கற்கை நிறுவனத்துடன் இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடல் * சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மனிதவள அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு ஈடுபடச் செய்தல்.

**செயற்படுத்துமிடம்** - தேசிய தொழில் கல்விநிலையம், பெலவத்த

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு** ரூ.மில். 3.00

**ஆரம்பித்த திகதி** - 2018.10.04

**முடிக்கப்படவுள்ள திகதி-** 2019.02.20

**2018.12.31 திகதியின் செலவு** - ரூ.மில். 2.44

**கருத்திட்டத்தின் முடிவு** - 48 உத்தியோகத்தர்கள் டிப்ளோமாதாரிகளாகுதல்.

**கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள் -**





**3.2.6. மனிதவள அபிவிருத்தி வேலைத்திட்ட உத்தியோகத்தர்களை வெளிநாட்டு புலமைப்பரிசிலின் பொருட்டு முன்வைத்தல்.**

**அறிமுகம்** - வறுமையினை ஒழிக்கும் முறை தொடர்பில் வெளிநாடுகளில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு அனுபவத்தினை வழங்கும் பொருட்டு வெளிநாட்டு புலமைப்பரிசிலினை வழங்குதல்.

**இலக்கக்குழு** - 15

**செயற்படுத்தப்படும்விதம்** :-

* உத்தியோகத்தர்களை விளக்கமளித்தல்.
* தகுதியான உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவழைத்தல்.
* குழு சிபாரிசுக்கு சமர்ப்பித்தல்
* அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பித்தல்.

**செயற்படுத்துமிடங்கள்** - ஆசிய நாடுகளைக் கொண்ட வலய நாடுகள்

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு** - ரூ.மில். 15

**ஆரம்பித்த திகதி** - 2018.01.01

**முடிக்கப்படவுள்ள திகதி** - 2018.08.31

**2018.08.31 வரை செலவுகள்** - பிரிவின் நிதி ஒதுக்கீடுகள் செலவிடப்படுவதில்லை.

**கருத்திட்டத்தின் முடிவுகள்-** 31 உத்தியோகத்தர்களை வெளிநாட்டுப் புலமைப்பரிசிலின் பொருட்டு அனுப்பியுள்ளமை.

### 3.2.7. நில்லம்பை, சமனலவெவ, வாழ்வாதார அபிவிருத்தி பயிற்சி நிலையம் அபிவிருத்தி

**அறிமுகம்** -பயிற்சி நிலைய அத்தியாவசிய திருத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் உபகரணங்களை வழங்குவதும்.

**இலக்குக் குழு** - பயிற்சி நிலைய நிர்மாணிப்பு

**செயற்படுத்தப்படும் விதம்** - *பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணிகளில் மேலதிகமான மரங்களை அகற்றிவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். * பயிற்சி நிலையத்தின் மேலதிக வருமான வழியொன்றாக தேயிலையினை பயிரிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். * பயிற்சி நிலையத்தின் கட்டிடக்குறைபாடுகளைத் தயாரித்தல் - தேவையான மதிப்பீடுகளை தயாரித்தல், மற்றும் அவற்றினை தயாரிப்பதற்கு கண்டி மாவட்டச்செயலாளருக்கு சமர்ப்பித்தல், தேவையான உபகரணங்களை விநியோகித்தல்.

**செயற்படுத்துமிடம்** - நில்லம்பை, சமனலவெவ

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு** - ரூ. மில். 30

**ஆரம்பித்த திகதி** - 2018.01.01

**முடிப்பதற்கு உத்தேசித்துள்ள திகதி** - 2018.12.15

**2018.12.31 வரையில் செலவுகள்** - ரூ.மில். 2.83 ஆகும்.

**கருத்திட்டத்தின் முடிவு** - அத்தியாவசிய உபகரணங்களை வழங்குதல், அத்தியசியமான திருத்தங்களுக்கான மதிப்பீட்டினைத் தயாரித்துல்.

**பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார நன்மைகள் :-** தேவையான பயிற்சி உபகரணங்கள் மற்றும் கட்டிடங்களின் திருத்தங்களின் பொருட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

**3.2.8. வறிய குடும்பங்களை வலுவூட்டச் செய்யும் பொருட்டு இடையீட்டாளர்களாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வகிபாகம் தொடர்பான விடயத்துடன் இணைந்த பயிற்சி சிங்களமொழி மூலம்.**

**அறிமுகம் :-**வறிய குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு இடையீட்டாளர்களாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வகிபாகங்களையும் குடும்ப அபிவிருத்திதிட்டமிடலையும் தயாரிப்பதன் ஊடாக பொருளாதார ரீதியில் வலுவூட்டும் பொருட்டு வர்த்தக திட்டமிடலைத் தயாரிப்பதற்கு உள்ளீர்த்தல்.

**இலக்கக் குழு (பயிலுனர்களின் எண்ணிக்கை) :-** சகல சமுர்த்தி முகாமையாளர்களும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.

**செயற்படுத்தும் விதம் :-** -

**கட்டம் - 1**

வகிபாகம் தொடர்பான காட்சி (நடிப்பு), குழுக்காலந்துறையாடுதல், குழு ரீதியாக ஆற்றுப்படுத்தல், உட்பட விடயத்தோடு இணைந்த பயிற்சியினை மேற்கொள்ளல்.

**கட்டம் -2**

விடயத்தோடு இணைந்த பயிற்சியின் பின்னர்பயிலுனர்களால் 10 பயனாளிக் குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான குடும்ப அபிவிருத்திதிட்டமிடலைத் தயாரிப்பதும், மீண்டும் 03 வாரத்திற்குள் பின்னூட்டல் பட்டறையில் 10 குடும்பங்கள் தொடர்பில் விடயங்களை சமர்ப்பித்தல்.

**கட்டம் - 3**

பின்னூட்டல் பட்டறையின் பின்னர் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சகல சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மேற்படி இடையீட்டாளர் பயிற்சிகளை வழங்குதல்.

**கட்டம் - 4**

கிராம உத்தியோகத்தர் பிரிவுமட்டத்தில் சமூக வலுவூட்டல் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் - 2019ஆம் ஆண்டு

**செயற்படுத்தப்பட்ட இடம் -** சமனலவெவ, நில்லம்பை, நிலாவெளி, RDTRI பிலிமத்தலாவை ஆகிய பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட, பிரதேச செயலகங்கள்.

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு** - ரூ.மில். 13

**ஆரம்பித்த திகதி** - 2018.08.26

**பூர்த்தி செய்யப்படவுள்ள திகதி** - 2018.11.29

**2018.12.31 ஆம் திகதியில் செலவு** - ரூ. மில். 11.6

**கருத்திட்டத்தின் முடிவு** - 519 சமுர்த்தி முகாமையாளராகக் கொண்ட பயிற்சிக்குழாம் ஒன்று உருவாக்கியிருத்தல், 9,859 பிரிவுப் பணியாளர்களின் பொருட்டு (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்) பயிற்சியினை வழங்கியமை.

## 04. விசாரணைப் பிரிவின் செயலாற்றுகை

அறிமுகம் :-

திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவின் கீழ் வருகின்ற ஒரு பிரிவான விசாரணைப் பிரிவு நிர்வாகப் பணிப்பாளரின் முழுமையான கண்காணிப்பின் கீழ் உதவிப் பணிப்பாளர் (விசாரணையின்) தலைமையில் செயற்படுகின்ற ஒரு பிரிவாகும்.

- கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகள் நடாத்துதல்.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட கணக்காய்வு விசாரணைகள் தொடர்பில் முன் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விளக்கமளிக்கக் கோருதல் அல்லது குறிறப்பத்திகையினை வழங்குதல்
- முறைப்படியான ஒழுக்காற்று விசாரணையினை நடாத்துதல்
- ஒழுக்காற்றுக் கட்டளைகளை விடுத்தல்.
- ஒழுக்காற்றுக் கட்டளைக்கு எதிரான மேன்முறையீடுகளின் பொருட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல்.
- பதவி நிலை உத்தியோகத்தர்களுக்குறிய குற்றப்பத்திரிகைகளின் நகல்களை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல்.
- ஜனாதிபதி விசாரணைப் பிரிவு, இலஞ்சம் அல்லது மோசடிக் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பாராளுமன்ற முறைப்பாட்டு செயற்குழு, போன்ற நிறுவனங்களுடன் ஒழுங்கிணைப்பு நடவடிக்கைகள்
- அதிகார சபையொன்று திணைக்களம் ஒன்றாக மாறிய காரணத்தினால் ஒழுக்காற்று முறைகளின் கீழ் உள்ளடங்காத விடயங்கள் தொடர்பில் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் அங்கீரித்துக் கொள்ளல்.

**நோக்கு:**

சட்டத்தினை மதிக்கின்ற மற்றும் ஒழுக்கத்தினை மதிக்கின்ற பணியாளர்கள் குழாம் ஒன்றினை உருவாக்குவதன் ஊடாக செயற்திறன் மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான மக்கள் பணி ஒன்றினை மேற்கொள்ளுகின்ற, மோசடிகள், துஷ்பிரயோகங்களற்ற முன்மாதிரியான அரசாங்க நிறுவனம் ஒன்றினை உருவாக்குதல்.

**பணி:**

பொதுவான சட்டங்களை மீறுதல், ஒழுக்க விரோத நடத்தைகள் மற்றும் பாதகச் செயல்கள், தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளான உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தின் ஒழுங்கு விதிக் கோவைக்கு ஏற்றதாக ஒழுக்காற்றல் தண்டனைகளை வழங்கி அவர்களை சட்டத்தை மதிக்கும் ஒழுக்காற்றினை மதிக்கும் அரச பணியாளர்களாக மாற்றுவதற்கான வாய்ப்புகளை வழங்குவதும் அரசாங்க சேவையின் நல்ல நிலைக்கும் பொது மக்கள் நலனுக்கு மாற்றமானவர்கள் என உறுதிப்படுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்களை அரசாங்க சேவையிலிருந்து நீக்குதல்.

**நோக்கங்கள்:**

1) உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்ற முறைகேடுகளை விசாரணை செய்து ஒழுக்காற்றுத் தண்டனைகளை வழங்குவதன் மூலம் அவர்களை சரியான திசைக்கு எடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2) திணைக்களத்தினதும் அரச சேவையினதும் புகழ் பெயரை ஆரம்பித்தல்.

3) திணைக்கள ஊழியர்கள் மத்தியில் ஒழுக்கத்தினைப் பேணிச் செல்வதும் நிதி ஒழுங்குகளைப் பேணிச் செல்வதனை உறுதிப்படுத்துதலும்.
4) மோசடிகளைத் தவிர்த்து முறைகேடுகளை தடுக்கும் பொருட்டு தேவையான பிரேரணைகளையும்/ சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல்.

2018ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட பணிகளின் திரட்டிய அறிக்கை

| | |
|---|---|
| புதிதாக ஆரம்பித்த கோவைகளின் எண்ணிக்கை | **- 162** |
| வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகைகளின் எண்ணிக்கை | **- 64** |
| வழங்கிய ஒழுக்காற்றுக் கட்டளைகளின் எண்ணிக்கை | **- 80** |
| விளக்கம் கோருதல் | **- 19** |
| ஒழுக்காற்றுக் கட்டளைகள் | **- 13** |
| பணி நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | **- 74** |
| பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகர்களின் எண்ணிக்கை | **- 04** |
| வருடத்திற்குள் முடிக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | **- 83** |
| வீதாசார ரீதியில் முன்னேற்றம் | **- 51.2%** |
| தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்ட வேண்டிய கோவைகளின் எண்ணிக்கை | **- 571** |
| செலவுகள் | **- 7,168,206.90** |

## 05. 2018 அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

புள்ளிவிபரக்குறிப்பு -5.1

### செயற்பாட்டுத் திட்டமிடலின் முன்னேற்றப் பொழிப்பு - 2018.12.31 ஆம் திகதி

| தொ .இல | கருத்திட்டத்தின் பெயர் | ஒதுக்கியத் தொகை (ரூ.மில்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | முடிக்கப்பட்ட கரத்திட்டங்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூ.மில்) | நிதி முன்னேற்றத்தின் வீதம் (%) | பௌதீக முன்னேற்றத்தின் வீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொருளாதார வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் | 919.00 | 31,985 | 24,894 | 553.55 | 60% | 78% |
| 2 | தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம் | 168.00 | 7,110 | 6,110 | 110.17 | 66% | 86% |
| 3 | சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டம் | 280.00 | 8,200 | 8,150 | 245.47 | 88% | 99% |
| 4 | சமுதாய அடிப்படை அமைப்புக்கள் வேலைத்திட்டம் | 70.00 | 662 | 621 | 25.71 | 37% | 94% |
| 6 | மனித வளங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 86.00 | 442 | 397 | 33.24 | 39% | 90% |
| 7 | தகவல் தொழில் நுட்ப வேலைத்திட்டங்கள் | 22.00 | 7 | 5 | 7.85 | 36% | 71% |
| 8 | ஊடக வேலைத்திட்டங்கள் | 27.45 | 37 | 28 | 13.91 | 51% | 76% |
| 5 | சட்டம் மற்றும் வெளிவிவகார வேலைத்திட்டங்கள் | 1.43 | 25 | 5 | 0.42 | 29% | 20% |
| 9 | திட்டமிடல் மற்றும் நெறிப்படுத்தல் வேலைத்திட்டங்கள் | 11.12 | 2,325 | 1,566 | 6.19 | 56% | 67% |
| 10 | சமுர்த்தி நலன்புரி வேலைத்திட்டங்கள் | 10.00 | 35 | 12 | 10.00 | 100% | 34% |
| 11 | வினைத்திறன் மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி வேலைத்திட்டம் | 5.00 | 2 | 1 | 0.38 | 8% | 50% |
| **மொத்தம்** | | **1,600.00** | **50,830** | **41,789** | **1,006.89** | **63%** | **82%** |
| 12 | உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி (அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படும்.) | 400.00 | 216 | 77 | 65.30 | 16% | 36% |
| | **மொத்தம்** | **2,000.00** | **51,046** | **41,866** | **1,072.19** | **54%** | **82%** |

## 06. சமூக நலன்புரிப் பிரிவின் செயலாற்றுகை.

### 6.1 .அறிமுகம் :

இலங்கையில் வறுமையினை ஒழித்தல் மற்றும் மனித அபிவிருத்தியின் பொருட்டு சுதந்திரத்தின் பின்னர் அதிகாரத்திற்கு வந்த அரசாங்கங்களால் பல்வேறு வேலைத்திட்டங்கள் பின்பற்றப்பட்டுள்ளது. இலவச கல்வி வசதிகள் மற்றும் இலவச சுகாதார வசதிகளை விரிவாக்குதல் இலவச நிவாரணக் கொள்கைகளை செயற்படுத்துதல். விவசாயக் குடியேற்றத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் காணியற்றவர்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம், வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், நீர் வசதிகள் மற்றும் துப்பரவுவேற்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் ஒன்றினைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துதல் போன்ற பல நடவடிக்கைகள் அவற்றில் உள்ளடங்குகின்றன.

1977ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் கீழ் அது வரையில் இருந்த பொருளாதாரக் கொள்கைகளை மாற்றஞ் செய்து சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு போன்ற சர்வதேச நிறுவனங்களின் ஆலோசணைகளை ஏற்றுக் கொண்டு இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 1977 இல் இருந்து இது வரையில் கொள்கையடிப்படையிலான பலமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது. அங்கு உணவு நிவாரணத்தினை நிறுத்தி விட்டு அரிசி பங்கீட்டுத்திட்டத்திற்குப் பதிலாக உணவு முத்திரைத்திட்டமும், பின்னர் ஜனசக்தி திட்டமும் அதன் பின்னர் சமுர்த்தி திட்டமும் செயற்படுத்தப்பட்டது.

எமது சமூகத்திற்குள் குறைந்த வருமானம் பெறுவோர், செயற்பட முடியாத ஆட்கள், மற்றும் நிரந்தர தொழில்லாதவர்களை பாதுகாத்து வறுமை நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் பொருட்டு அக்குடும்பங்களை வலுவூட்டி அவர்கள் காண்பதைவிட ஏதேனும் ஒன்றினைக் கூடுதலாத் தூண்டிவித்து சிந்திப்பதை விடக் கூடுதலாக சிந்திக்க ஊக்குவித்தும் ஒரு பணியினை செய்வதைவிட ஏதேனும் ஒன்றை செய்விரும்புவதற்குமான் சூழல் ஒன்றினைக் கட்டியெழுப்பி அவர்களது உள்ளார்ந்த திறன்களை எழுச்சி பெறச் செய்யும் அரச அனுசரனையினையுடைய வேலைத்திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பது காலத்தின் தேவையாக இருந்தது.

பணியாற்ற விருப்பமும் ஆற்றலுமுள்ளதாக இருந்தும் முதலீட்டுப் பலம் ஒன்று இல்லாமல் போகும் காரணத்தினால் வறுமை நிலையால் வாடும் அதிகப்படியான ஆட்களின் சமூக மற்றும் பொருளாதார தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் நோக்கில் ஆரம்ப்பிக்கப்பட்ட அதிகமான வேலைத்திட்டங்கள் அக்குறிக்கோள்களை நோக்கிப் பயணிப்பதில் தவறிவிட்டது. அரசாங்க கொள்கைகள் எதுவாக இருந்தாலும் தேவைப்படுவது அதன் வறிய குழுக்களை பிரதான பொருளாதாரச் சுற்றோட்டத்தில் ஒன்றினைக்கக்கூடிய விதத்தில் கொள்கைகளை திட்டமிடுவதாகும். ஜனசக்தி மற்றும் அதன் பின்னர உருவான சமுர்த்தி ஆகிய வேலைத்திட்டங்கள் செயற்பட்டதானது வறிய மக்கள் தொகுதியினரை பொருளாதாரத்தின் பிரதான உற்பத்திச் சுற்றேட்டத்தில் ஒன்றிணைத்து அதனூடாக அவர்களை வறுமையின் அதள

பாதாலத்திலிருந்து மீட்டெடுத்து பலம் வாய்ந்த மக்கள் பிரிவினராக மாற்றும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டாகும்.

## 6.2. நிவாரண வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் முறை:

1995ஆம் அண்டிலிருந்து கொடுப்பனவு படிவங்கள் வழங்கப்பட்ட சமுர்த்தி நிவாரண உதவிகள் 2012ஆம் ஆண்டின் வரவு செயற்திடட்டத்திற்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் ஊடாக பயனாளிக்கு பணமாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. சமுர்த்தி பயனாளிகளின் சேமிப்புக்கும் அதனுடான முன்முதலீட்டு நடவடிக்கைகளின் பொருட்டு ஊக்குவிப்பதும் இதன் குறிக்கோளாகும்.

2018ஆம் ஆண்டில் சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையானது 1,384,021 ஆகும் என்பதுடன் அதன் பொருட்டு ரூபா பில்லியன் 39.2 பெறுமதியான நிதி ஒதுக்கீட்டளவு செலவிடப்பட்டுள்ளது.

நிவாரணத் தொகையினை தலைமைக்காரியாலயத்திலிருந்து மாவட்டச் செயலகத்திற்கு வழங்கியதன் பின்னர் மாவட்ட செயலகம் உறிய பிரதேச செயலகத்தின் ஊடாக சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் வரவு வைத்ததன் பின்னர் பயனாளிகளின் கணக்கில் பற்றுவைத்ததாக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் நீண்டகாலம் செலவிடப்படுவதனால் 2015ஆம் ஆண்டிலிருந்து பயனாளியின் பிரிவிக்குச் சொந்தமான வங்கிக்கு தலைமைக் காரியாலயத்திலிருந்து நேரடியாக பணம் அனுப்பும் முறையின் ஊடாக பணம் வரவு வைக்கப்பட்டதன் பின்னர் அத்தொகைபயனாளியின் கணக்கில் வரவு வைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. அதன் மூலம் திறைசேரி பணம் வழங்கியவுடன் முன்னரைவிட துரிதமாக பயனாளிக்குறிய பணத்தைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

### 6.3. நிவாரண வேலைத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்

- வறிய மக்களின் போசனைத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதும் அபிவிருத்தி தேவைகளின் பொருட்டு அவர்களை ஒன்றுதிரட்டுவதும்.
- வீடமைப்பு லொத்தர் நிதியத்தின் பொருட்டு பங்களிப்புச் செய்து கொள்ளல்.
- கட்டாய சேமிப்புக்களினூடாக குறைந்த வருமானம் பெறுவோரை நிதியியல் ரீதியாக பலப்படுத்துதல்.
- சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்து கொண்டு அக்குடும்பங்களின் உத்தேசிக்கப்பட்ட மற்றும் உத்தேசிக்கப்படாத அபாயகரமான சந்தர்ப்பங்களில் நிதிப் பலத்தினை வழங்குதல்.

## 6.4. நிவாரணத்தினை வகைப்படுத்துதல்:

**புள்ளிவிபரக் குறிப்பு 6.1 நிவாரணத்தினை வகைப்படுத்துதல்.**

| குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை | நிவாரணத்தின் பெறுமதி (ரூபா) | நிவாரணக் கொடுப்பனவு பிரிந்து செல்லும் விதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | கட்டாயச் சேமிப்பு (ரூபா) | சமூக பாதுகாப்பு (ரூபா.) | வீடமைப்பு லொத்தர் நிதியம் (ரூபா). | பயனாளிக்கு செலுத்த வேண்டிய தொகை (ரூபா.) |
| 04 அல்லது 04 க்கு மேற்பட்டவர்கள் | 3500/- | 300/- | 100/- | 50/- | 3050/- |
| 03 (மூவருக்கு) | 2500/- | 200/- | 100/- | 50/- | 2150/- |
| 03 (மூவருக்கு குறைந்த) | 1500/- | 100/- | 100/- | 50/- | 1250/- |
| வலுவூட்டப்பட்ட குடும்பங்கள் | 420/- | 270/- | 100/- | 50/- | |

### 6.5. கட்டாய சேமிப்பு கணக்கு

சமுர்த்தி பயனாளிகளை சேமிப்பின் பொருட்டு பழக்கப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு பயனாளியும் கட்டாய சேமிப்பின் பொருட்டு பங்களிப்புச் செய்து கொள்ளப்படுவதுடன் ஏதேனும் ஒரு முதலீட்டுத் தேவையின் போது திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது உயர்கல்வித் தேவையொன்றின் போது கட்டாய சேமிப்பு பங்களிப்புத் தொகையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 6.6. சமூக பாதுகாப்பு

சமுர்த்தி பயனாளிக் குடும்பம் ஒன்றில் ஏற்படும் மரணமொன்றின் போது, திருமணத்தின் போது வைத்தியசாலை அனுமதியின் போது பிள்ளைப் பேறின்போது, குடும்பம் பொருளாதார ரீதியாக கீழ் மட்டத்திற்கு விழுவதனைத் தவிர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு வேலைத்திட்டங்களின் பொருட்டு ஒவ்வொரு பயனாளியும் பங்களிப்புச் செய்து கொள்ளப்படும்.

### 6.7. வீடமைப்பு லொத்தர்

பயனாளிக் குடும்பங்களின் வீட்டுத் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் ஒவ்வொரு பயனாளியின் பங்களிப்புத் தொகையில் கட்டியெழுப்பப்படுகின்ற வீடமைப்பு நிதியமொன்றாகும்.

### 6.8. பயனாளி ஒருவருக்குக் கிடைக்கின்ற தொகை

சமுர்த்தி வங்கியின் ஊடாக பயனாளிக்குச் கிடைக்கின்ற தொகையிலிருந்து உணவு அல்லது பிற தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் பொருட்டு தனக்குத் தேவையான எந்த ஒரு இடத்திலும் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (மதத்தளங்கள்/ முதியோர் இல்லம்/ சிறுவர் இல்லம்/ மாற்றுதிறனாளிகளின் இல்லம் 1500/=

பயனாளிகளின் கட்டாய சேமிப்புத் தொகை, நிதி உதவிகளின் பெறுமதியுடன் பயனாளிகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது.)

### 6.9. மத குருமாருக்கான நிவாரணத்தை வழங்குதல்.

மதகுருமாருக்கு சொந்தமான நிவாரணமானது தனிநபர்களுக்குறிய ரூபா 1500/= பெறுமதியான நிவாரணத் தொகையாகும் 18 வயதிலும் குறைந்த மதகுருமாருக்கு நிவாரண தொகை நிறுவனத்தின் சட்டபூர்வமான பொறுப்பாளர்களின் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும் இந்த மதத்தவங்கள் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

### 6.10. முதியோர் இல்லம்/ சிறுவர் இல்லம்/ மாற்றுத்திறனாளி இல்லங்களுக்கு நிவாரணத்தை வழங்குதல்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து சமூக சேவைகள் திணைக்களத்திலும் பதிவாகியுள்ள போதுமானளவு வருமானம் கிடைக்காதவர்களை தனிநபர் ஒருவர் எனக் கருதி ரூபா 1500/= இற்கான நிவாரணம் ஒன்று வழங்கப்பட்டள்ளது. 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களின் நிவாரணங்கள் நிருவாகிகளின் பெயரில் வழங்கப்படுவதுடன் 18 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களின் பொருட்டு தனித்தனியாக வழங்கப்படும்.

### 6.11. நலன்புரி நன்மைகளை செலுத்தும் பொருட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை தெரிவு செய்யும் பொருட்டான பொதுவான எடுகோள்களும் சுட்டிகளும்.

1. கல்வி
2. சுகாதாரம்
3. பொருளாதார நிலை
4. சொத்துக்கள்
5. வீட்டின் நிலை
6. குடும்பத்தின் ஜன வெளிப்பாடு

### 6.12. நிவாரணத்தினை இடைநிறுத்த/ செல்லுபடியற்றதாக்குவதற்கு காரணமான விடயங்கள்

- ❖ தொழிலின் நிமித்தம் வெளிநாடு செல்லல் (வெளிநாடு சென்று 06 மாதங்களின் பின்னர்)
- ❖ அரச தொழில் வழங்குதல்
- ❖ வருமான நிலை அதிகரித்தல்
- ❖ போலியான தகவல்களை சமர்ப்பித்தல்
- ❖ மதுபாவனையிலும் சூதாட்டத்திலும் ஈடுபடல்

எவ்வாறு இருந்தும் இதன் மூலம் குடும்ப அலகு மேலும் மோசமடைவதைத் தவிர்த்துக் கொள்வது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படும்.

**புள்ளிவிபரக் குறிப்பு 6.2**

- **கடந்த 05 வருடங்களில் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை (2014-2018)**

| ஆண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2014 | 1,479,811 |
| 2015 | 1,453,078 |
| 2016 | 1,407,235 |
| 2017 | 1,388,242 |
| 2018 | 1,384,021 |

**புள்ளிவிபரக் குறிப்பு 6.3**



கடந்த 05 வருடங்களில் சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவின் பொருட்டான செலவு

**(2014 - 2018)**

| ஆண்டு | செலவு (ரூபா) |
|---|---|
| 2014 | 15,041,799,341.62 |
| 2015 | 40,209,736,640.00 |
| 2016 | 40,740,170,648.31 |
| 2017 | 39,707,051,488.00 |
| 2018 | 39,238,795,641.00 |

**புள்ளிவிபரக் குறிப்பு 6.2**



### புள்ளிவிபரக் குறிப்பு 6.4

## 2018 ஆண்டில் சமூக நலன்புரி பிரிவின் வேலைத்திட்டங்களுக்கான செலவுகள்.

| வேலைத்திட்டம் | உத்தேச வேலைத்திட்டம் | | நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் | |
|---|---|---|---|---|
| | ஒதுக்கிய தொகை (ரூ. மில்) | குறிப்பிட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | பூர்த்தி செய்யப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை |
| சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்குறிய விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களும் புதிதாக சமுர்த்தி நிவாரணங்களை வழங்குவதும் | **20** | **35** | **15.69** | **27** |

### புள்ளிவிபரக் குறிப்பு 6.5

## 2018 ஆம் ஆண்டின் சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கைகள் மாவட்டத்திற்கமைய

| மாவட்டம் | ரூபா 420/= | ரூபா 1500/= | ரூபா 2500/= | ரூபா 3500/= | மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1,090 | 21,856 | 8,320 | 13,967 | 45,233 |
| கம்பஹா | 5,954 | 41,391 | 20,730 | 39,398 | 107,473 |
| களுத்துறை | 5,089 | 24,569 | 10,206 | 19,493 | 59,357 |
| கண்டி | 4,791 | 35,088 | 13,730 | 26,879 | 80,488 |
| மாத்தளை | 2,506 | 18,376 | 8,731 | 15,419 | 45,032 |
| நுவரெலியா | 7,151 | 14,981 | 6,797 | 10,919 | 39,848 |
| காலி | 6,845 | 21,284 | 11,570 | 27,201 | 66,900 |
| மாத்தறை | 4,069 | 24,499 | 10,805 | 21,633 | 61,006 |
| ஹம்பாந்தோட்டை | 5,393 | 16,109 | 9,892 | 21,350 | 52,744 |
| யாழ்ப்பாணம் | 1 | 13,166 | 9,114 | 31,002 | 53,283 |
| மன்னார் | 0 | 3,347 | 2,029 | 7,644 | 13,020 |
| வவுனியா | 1,535 | 3,393 | 1,732 | 5,095 | 11,755 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு | 41 | 2,175 | 2,330 | 6,473 | 11,019 |
| கிளிநொச்சி | 0 | 3,192 | 1,868 | 6,467 | 11,527 |
| மட்டக்களப்பு | 14,710 | 23,200 | 9,952 | 28,878 | 76,740 |
| அம்பாறை | 12,373 | 22,829 | 10,118 | 26,321 | 71,641 |
| திருகோணமலை | 5,064 | 13,529 | 5,833 | 14,189 | 38,615 |
| குருணாகல் | 7,663 | 51,377 | 25,611 | 51,932 | 136,583 |
| புத்தளம் | 1,223 | 22,208 | 8,418 | 17,718 | 49,567 |
| அனுராதபுரம் | 3,334 | 24,466 | 10,692 | 19,285 | 57,777 |
| பொலனறுவை | 3,634 | 8,288 | 6,508 | 12,392 | 30,822 |
| பதுளை | 4,692 | 20,285 | 9,773 | 19,817 | 54,567 |
| மொனராகலை | 6,534 | 13,172 | 7,648 | 16,677 | 44,031 |
| இரத்தினபுரி | 9,999 | 27,089 | 19,983 | 46,677 | 103,748 |
| கேகாலை | 6,929 | 19,866 | 11,128 | 23,322 | 61,245 |
| மொத்தம் | **120,620** | **489,735** | **243,518** | **530,148** | **1,384,021** |

புள்ளிவிபரக் குறிப்பு - 6.6

## ஒவ்வொரு குழுவின் கீழ் பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கையும் செலவுகளும் (2018.01.01 முதல் 2018.12.31)

| தொகுதி | ஜனவரி | | பெப்ரவரி | | மார்ச் | | ஏப்ரல் | | மே | | ஜூன் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா |
| Rs.3,500/- | 550,230 | 1,925,805,000 | 548,690 | 1,920,415,000 | 548,029 | 1,918,101,500 | 546,640 | 1,913,240,000 | 544,449 | 1,905,571,500 | 542,515 | 1,898,802,500 |
| Rs.2,500/- | 242,200 | 605,500,000 | 242,880 | 607,200,000 | 242,689 | 606,722,500 | 243,042 | 607,605,000 | 243,472 | 608,680,000 | 244,117 | 610,292,500 |
| Rs. 1,500/- | 467,540 | 701,310,000 | 469,406 | 704,109,000 | 470,057 | 705,085,500 | 472,057 | 708,085,500 | 474,974 | 712,461,000 | 478,052 | 717,078,000 |
| Rs. 420/- | 130,680 | 54,885,600 | 130,002 | 54,600,840 | 130,131 | 54,655,020 | 129,575 | 54,421,500 | 128,576 | 54,001,920 | 128,045 | 53,778,900 |
| **Total** | 1,390,650 | **3,287,500,600** | 1,390,978 | **3,286,324,840** | 1,390,906 | **3,284,564,520** | 1,391,314 | **3,283,352,000** | 1,391,471 | **3,280,714,420** | 1,392,729 | **3,279,951,900** |

| ஜூலை | | ஆகஸ்ட் | | செப்டம்பர் | | ஒக்டோபர் | | நவம்பர் | | டிசம்பர் | | மொத்தச் செலவு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தச் செலவு ரூபா | |
| 537,681 | 1,881,883,500 | 534,783 | 1,871,740,500 | 532,808 | 1,864,828,000 | 534,816 | 1,871,856,000 | 532,846 | 1,864,961,000 | 530,148 | 1,855,518,000 | 22,692,722,500 |
| 243,464 | 608,660,000 | 242,941 | 607,352,500 | 242,763 | 606,907,500 | 244,815 | 612,037,500 | 244,616 | 611,540,000 | 243,518 | 608,795,000 | 7,301,292,500 |
| 482,591 | 723,886,500 | 483,779 | 725,668,500 | 484,624 | 726,936,000 | 488,722 | 733,083,000 | 489,185 | 733,777,500 | 489,735 | 734,602,500 | 8,626,083,000 |
| 126,170 | 52,991,400 | 125,224 | 52,594,080 | 124,401 | 52,248,420 | 122,956 | 51,641,520 | 121,896 | 51,196,320 | 120,620 | 50,660,400 | 637,675,920 |
| 1,389,906 | **3,267,421,400** | 1,386,727 | **3,257,355,580** | 1,384,596 | **3,250,919,920** | 1,391,309 | **3,268,618,020** | 1,388,543 | **3,261,474,820** | 1,384,021 | **3,249,575,900** | **39,257,773,920** |

# 7. சமூக பாதுகாப்புப் பிரிவின் செயலாற்றுகை

## 7.1. அறிமுகம்:-

8 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பு அறுதியின் மூலம் 1997.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலிலுள்ள பிரகாரம் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிதியமானது அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிகமல்லாத நிறுவனம் ஒன்றாககக் கருதப்படுகின்றது. அதன் பிரகாரம் சமூக பாதுகாப்பு நிதியமானது அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து தங்கி வாழும் நிறுவனம் ஒன்றல்ல என்பதுடன் நிறுவனத்தினாலேயே வருமானங்களை ஈட்டிக் கொள்கின்றது என்பதனால் இவ்வாறு வகைப்படுதலுக்கு உள்ளாகியுள்ளது.

2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பிக்கப்படும் போது சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் அதில் கூட்டிணைக்கப்பட்டது. அதன் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு நிதியமாக செயற்பட்டதுடன் 2017 ஆம் அண்டில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பெயரில் திணைக்களம் என்ற பெயர் மாற்றப்பட்டவுடன் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் என்ற பெயரில் செயற்படுகின்றது. திணைக்களத் தலைவரின் தலைமையில் 10 அங்கத்தவர்களைக் கொண்ட சமூக பாதுகாப்பு, நம்பிக்கைப் பொறுப்புச் சபை மூலம் நிதியத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**நோக்கு :**

சுபீட்சமிகு மக்களுக்கான பாதுகாப்பான ஒரு எதிர்காலம்

**பணி :**

எதிர்பாராமலும், எதிர்ப்பார்ப்புடனும் முகங்கொடுக்கின்ற சம்பவங்களில் போது கீழே விழ இடமளியாமல் சமுர்த்தி பயனாளிகளை பொருளாதார சமூக, சுகாதார, மற்றும் கல்வி ரீதியில் அவர்களை தோள்கொடுத்து உதவுதல்.

குறிக்கோள்கள்:

- சமுர்த்தி பயனாளிகள், மற்றும் சமூகத்தில் பின்தள்ளப்பட்ட நிலைக்குள்ளான ஆட்கள், குழுக்கள், நிறுவனங்கள் பொருளாதார ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடும் போது எதிர்பாராதவிதத்திலும் எதிர்பார்த்த விதத்திலும் முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்ற நிதியியல் ரீதியான கஷ்டங்களை குறைந்து அவர்களின் சமூக மற்றும் வாழ்க்கைத்தரத்தினை பாதுகாத்தல்.

- நிவாரணம் பெறும் மக்களின் போசனை மட்டத்தினை உயர்த்தி அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலையினைகட்டி எழுப்புவதற்காக செயற்படல்.

**7.2. பிரிவின் மொத்த முன்னேற்றம்:-**

இணைப்பு இலக்கம் 01

இணைப்பு இலக்கம 02

**அறிமுகம் :- (சமூக பாதுகாப்பு நிதியம்)**

சமுர்த்தி பயனாளிகளினால் சுய விருப்பத்தின் பெயரில் வழங்கப்படுகின்ற மாதாந்த பங்களிப்பு மற்றும் அப் பங்களிப்புத் தொகையிலிருந்து பயளாளிக்கொடுப்பனவுகள் செலுத்தியதன் பின்னர் நிலுவையாகும் நிதி அரசாங்க வங்கிகளில் முதலீடு செய்வதன் மூலம் உழைக்கப்படுகின்ற வட்டி வருமானத்தின் மூலம் இந்த நிதியம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டி எழுப்பப்பட்ட நிதியத்திலிருந்து சமுர்த்தி பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் வசதிவாய்ப்புகளற்ற நிலை என்ற நிலைக்குள்ளான ஆட்கள், குழுக்கள், நிறுவனங்கள் மற்றும் பயனாளிகல்லாத இரட்டைக் குழந்தைப் பெறுபேருகளின் பொருட்டு நலனுதவிகள் வழங்கப்படுகின்றன. முக்கியமாக பிறப்பு, இரட்டைக் குழந்தை பிறப்பு விவாகம் வைத்தியசாலையில் அனுமதித்தல், இறப்பு மற்றும் சிப்தொர புலமைப்பரிசில் ஆகிய எதிர்ப்பார்க்கப்பட்ட மற்றும் எதிர்ப்பார்கப்படாத சம்பவங்களின் பொருட்டு காப்புறுதி முறையொன்றாக நன்மைகள் வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக சமுர்த்தி சமூக பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் சமூகத்தில் வசதி வாய்ப்புகளற்ற நிலைக்குள்ளான ஆட்கள், குழுக்கள், நிறுவனங்களின் பிரகாரம் சமூகத்தில் வசதி வாய்ப்புளற்ற நிலைக்குள்ளான ஆட்கள், குழுக்கள், நிறுவனங்களின் பொருட்டு நிதியியல் மற்றும் பொருள் ரீதியான உதவிகள் வழங்கப்படுகின்றன.

**இலக்கக் குழுக்கள் :-**

I. சமுர்த்தி பயனாளிகள்

II. சமூகத்தில் வசதி வாய்ப்புக்களில்லாத நிலைக்குள்ளாகியுள்ள ஆட்கள், குழுக்கள், நிறுவனங்கள்

**செயற்படுத்தப்படும் முறை:-**

சமுர்த்தி பயனாளினால் சுயவிருப்பத்தின் பிரகாரம் வழங்கப்படுகின்ற ரூபா 100/= இற்கான மாதாந்த பங்களிப்புத் தொகையிலிருந்து பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொண்டதன் பின்னர், நிலுவையாகும் நிதியினை அரச வணிக வங்கிகளில் முதலீடுகள் செய்யப்படுவதனால் உழக்கும் வட்டி வருமானத்தினால் பயன்படுத்திக்கொண்டு பிறப்பு, விவாகம், வைத்தியசாலையில் அனுமதித்தல், இரட்டைக் குழந்தைப்பேறு, மற்றும் சிப்தொர புலமைப்பரிசிலின் பொருட்டு நன்மைகள் வழங்கப்படுகின்றன இந்த சம்பவங்களின் எண்ணிக்கை சரியாக குறிப்பிட கூடிய சம்பவமானது சிப்தொர புலமைப்பரிசிலை வழங்குவது மாத்திரமேயாகும். அதாவது வருடமொன்றுக்கு சிப்தொர புலமைப்பரிசில்களை பெறுவோர்களின் எண்ணிக்கைகளானது 15000 ஆகும். ஏன்பதுடன் மாதம் ஒன்றுக்கு ரூபா 1500/= வீதம் இரு வருடங்களுக்கு 540 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுகின்றது. ஏனைய சகல சம்பவங்கள் தொடர்பிலும் சரியாகக் கணக்கிட்டுக் குறிப்பிட முடியாது. மேற்படி சகல சம்பவங்களின் நிமித்தம் நன்மைகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவது கீழுள்ள விதத்திலாகும்.

அதன் பிரகாரம் முதலில் தலைமையக காரியாலயத்தின் சமுர்த்தி பாதுகாப்பு பிரிவின் மூலம் வருட ஆரம்பத்தில் சகல பிரதேச செயலகங்களுக்கும் மாவட்டச் செயலகங்களுக்கும் முற்பணத்தொகை ஒன்று விடுவிக்கப்படுகின்றது. அம்முற்பணத் தொகையினைப் பயன்படுத்திக் கொண்டு குறித்த செலவுகளை ஈடு செய்து கொள்ளல் வேண்டும்.

குறித்த சம்பவத்தின் பொருட்டு பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் முறையாகப் பூர்த்தி செய்ப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் உறிய ஆவணங்களை வலயப்பொறுப்பு சமுர்த்தி முகாமையாளர், சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும். அதன் பின்னர் இந்த விண்ணப்படிவங்களை பிரதேச செயலகத்தின் தலைமையக முகாமையாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிரதேச செயலகத்தின் விடயப்பொறுப்பு உத்தியோகத்தரால் அந்த அந்த விண்ணப்படிவங்களை பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றது. அதன் பின்னர் பிரதேச செயலகத்தின் கணக்காளரால் செலவுகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் உறிய பயனாளிகளுக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் ஊடாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

பிரதேச செயலகத்திற்கு சொந்தமான சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் குறித்தவாறு மேற்கொண்ட கொடுப்பனவுகள் மாவட்டச் செயலகங்கள் மூலம் ஈடுசெய்து கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அதன் பின்னர் மாவட்டச் செயலகங்கள் மூலம் குறித்த சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நிவாரணத்தினைச் செலுத்துவது தலைமைக் காரியாலயத்தின் சமுர்த்தி சகல பாதுகாப்பு நிதியத்தின் மூலம் ஈடு செய்துகொள்ளல் வேண்டும். ஏதேனும் ஒரு விதத்தில் வழங்கிய முற்பணத்தொகை போதுமாகாத விடத்து சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் மீண்டும் முற்பணத்தொகை போதுமாகாத விடத்து சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலம் மீண்டும் முற்பணத்தினை கோர முடியும்.
இதற்கு மேலதிகமாக நம்பிக்கைப் பொறுப்புச்சபையில் அங்கீகாரத்தின் பிரகாரம் சந்தர்ப்பத்திற்கேற்ப சமுர்த்திப் பயனாளிகளுக்கு குறைந்த வருமானம் பெறுவோருக்கும் சமூகத்தில் வசதி வாய்ப்புக்கள் இல்லாத நிலைக்குள்ளானோருக்கும், குழுக்களுக்கும், நிறுவனங்களுக்கும் குறித்த தேவைகளின் பொருட்டு நிதியியல் மற்றும் பொருள் ரீதியான உதவிகள் வழங்கப்படுகின்றது.

செயற்படுத்தப்படும் இடங்கள்:-

கிராம சேவகர் பிரிவு → வலய அலுவலகம் → பிரதேச செயலகம் → சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் → மாவட்டச் செயலகம் → தலைமைக்காரியாலயத்தின் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம்

அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு :- 2018 ம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டமிடலுக்கமைய ரூ.மில் 2053.83 இற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்பிக்கப்பட்ட திகதி:- 2018.01.01

பூர்த்தி செய்த திகதி:- 2018.12.31

செலவறிக்கை:- 2018.12.31 ஆம் திகதியில் செலவு

- பயனாளிக் கொடுப்பனவு - இணைப்பு இலக்கம் 03
- நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு - இணைப்பு இலக்கம் 04

கருத்திட்டத்தின் முடிவு:- 2018.01.01 முதல் 2018.12.31 திகதி வரை விண்ணப்பித்த சகல பயனாளிகளுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் சமூக பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகரித்த சபை நிருபங்களுக்குறியதாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

பெற்றுக் கொண்ட சகல பொருளாதார பெறுபேறுகள்:-

- குறிப்பிட்ட பிரகாரம் நிதியியல் நன்மைகளை வழங்குவதனூடாக பயனாளிகளின் நிதியியல் ரீதியான கஷ்டங்களை குறைத்தல்..
- க.பொ.த (சா/தர) சிறந்த பெறுபேற்றினைப் பெற்று க.பொ.த (உ/த) கற்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்தாது வெற்றிகரமான உயர்கல்வியினைப் பெற ஊக்குவித்தல்.
- குறிப்புக்கள் மற்றும் இரட்டைக் குழந்தைப் பிறப்புக்களுக்கு நிதிகள் நன்மைகளை வழங்குவதனூடாக போசனை மட்டத்தினைப உயர்த்தி ஆரோக்கியமான சமூக பாதுகாப்பு சூழல் ஒன்றுக்கு பங்களிப்பினை வழங்குதல்..
- நாட்டின் முக்கியமான சமூக பாதுகாப்பு வலையமைப்பின் பொருட்டு பங்களிப்பினை வழங்குதல்..

கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள்

2018-2020 கல்வியாண்டிற்குறியதான எம்பிலிபிட்டியப பி.செ.பிரிவில் சிப்தொர புலமைப் பரிசில் வழங்கல்





**புள்ளிவிபரக் குறிப்பு 7.1**

# சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம்

2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை பங்களிப்புத் தொகை கிடைப்பனவு

| ஆண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை | கிடைப்பனவு (ரூபா) |
|---|---|---|
| 2014 | 1,480,450 | 775,464,467.85 |
| 2015 | 1,466,090 | 767,937,637.00 |
| 2016 | 1,419,534 | 1,570,238,635.00 |
| 2017 | 1,407,235 | 1,677,301,000.00 |
| 2018 | 1,384,021 | 1,667,315,000.00 |
| மொத்தம் | | 6,458,256,739.85 |

**புள்ளிவிபரக் குறிப்பு 7.3**

## சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் 2018 ஆண்டின் வருமான செலவின் முன்னேற்ற அறிக்கை 2018/01/01 ம் திகதி முதல் 2018/12/31 திகதி வரை

| தொ. இ | விபரம் | 2018 ஜனவரி மதல் நவம்பர் வரை வருமான செலவு ரூ.சதம் | | 2018 டிசெம்பர் மாதம் | | 2018-12-31 திகதியில் மொத்த வருமானம். |
|---|---|---|---|---|---|---|
| | **வருமானம்** | | | | | |
| 1 | பங்களிப்புப் பண கிடைப்பனவு (இணைப்பு இலக்கம் 01) | | 1,528,912,900.00 | | 138,402,100.00 | 1,667,315,000.00 |
| 2 | நிலாவெளி - விடுதிக் கட்டணம் | | 840,815.00 | | 347,283.50 | 1,188,098.50 |
| 3 | முதலீட்டு வட்டி வருமானம் | | | | | |
| | வட்டித் தொகை | 913,000,545.36 | | 288,418,789.06 | | |
| | (-) பிடிபணவறி | 50,512,556.63 | 862,487,988.73 | 14,420,939.44 | 273,997,849.62 | 1,136,485,838.35 |
| 4 | பிற கிடைப்பனவு (இணைப்பு இலக்கம் 02) | | 2,057,723.32 | | 51,778,411.23 | 53,836,134.55 |
| | மொத்த விநியோகம் | | 2,394,299,427.05 | | 464,525,644.35 | 2,858,825,071.40 |
| | **கொடிகள்** | | | | | |
| | பயனாளிக் கொடுப்பனவு (இணைப்பு இலக்கம் 02) | | | | | |
| 1 | நிர்வாகக் கொடுப்பனவு | | 1,067,521,032.71 | | 120,137,899.16 | 1,187,658,931.87 |
| 2 | நிலாவெளி நிலையத்திற்கானது செலவுகளை மேற்கொள்ளல் | | 1,122,493.97 | | 351,242.25 | 1,473,736.22 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | பிரிவு கொடுப்பனவுகள்(இணைப்பு இலக்கம் 04) | | 2,431,638.55 | | 345,753.23 | 2,777,391.78 |
| 4 | நம்பிக்கைப் பொறுப்புச் சபை கூட்டத்திற்கு செலவுகள் | | 3,062,887.83 | | 9,919.38 | 3,072,807.21 |
| 5 | சிப்தொர புலமைப் பரிசில் திட்டத்திற்கு செலவிடல் | | 761,770.00 | | | 761,770.00 |
| 6 | மாதிரிக் கிராம வேலைத்திட்டத்திற்கு நிதி விடுவித்தல் | | 1,250,631.30 | | 1,209,206.95 | 2,459,838.25 |
| 7 | சிப்தொர ஈடுசெய்தல் | | 76,851,337.00 | | 3,761,750.00 | 80,613,087.00 |
| 8 | மொத்த செலவுகள் | | 48,187,500.00 | | 3,765,000.00 | 51,952,500.00 |
| | மாவட்ட பயனாளிக் கொடுப்பனவின் பொருட்டு ஆரம்ப முற்பணம் வழங்குதல் | | 1,520,334,291.36 | | 176,935,362.97 | 1,697,269,654.33 |
| 9 | சிப்தொர முற்பணம் வழங்கல் | | 292,730,000.00 | | 51,172,092.00 | 343,902,092.00 |
| 10 | முற்பணம் வழங்கள் | | 26,370,000.00 | | 22,597,500.00 | 22,597,500.00 |
| 11 | முதலீடுகள் குறைதல் / அதிகரித்தல் | | 45,000.00 | | | |
| | மாத ஆரம்ப காசு மீதி | | 912,483,430.59 | | 123,996,930.24 | 1,036,480,360.83 |
| | மாத இறுதி காசு மீதி | | 76,328,159.34 | | 37,809,864.44 | 76,328,159.34 |
| | | | 37,809,864.44 | | 201,403,215.58 | 201,403,215.58 |

**புள்ளிவிபரக் குறிப்பு - 7.3** **சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம்**

**முதலீட்டுப்பகுப்பாய்வு 2018 ஆம் ஆண்டு**

| கிடைப்பனவு | | | | | | கொடுப்பனவு | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | தெறிய தொகை ரூபா | வட்டி தொகை ரூபா | வரி | வரி கழிக்கப்பட்டதன் பின்னர் வட்டி | மொத்தம் | முதலீடு செய்தல் | மொத்தம் |
| ஜனவரி | 2,249,129,266.68 | 144,506,555.40 | 11,560,524.43 | 132,946,030.97 | 2,382,075,297.65 | 2,032,075,297.65 | 2,032,075,297.65 |
| பெப்ரவரி | 288,983,007.57 | 17,577,756.85 | 1,406,220.55 | 16,171,536.30 | 305,154,543.87 | 505,154,543.87 | 505,154,543.87 |
| மார்ச் | | | | - | - | 50,000,000.00 | 50,000,000.00 |
| ஏப்ரல் | 106,210,000.00 | 6,222,742.05 | 311,137.10 | 5,911,604.95 | 112,121,604.95 | 112,121,604.95 | 112,121,604.95 |
| மே | 2,573,587,630.54 | 147,712,544.23 | 7,385,627.20 | 140,326,917.03 | 2,713,914,547.57 | 2,813,914,547.57 | 2,813,914,547.57 |
| ஜுன் | 4,869,745,896.64 | 279,171,946.41 | 13,958,597.32 | 265,213,349.09 | 5,134,959,245.73 | 5,134,957,445.73 | 5,134,957,445.73 |
| ஜுலை | 2,032,075,297.65 | 118,368,386.11 | 5,918,419.31 | 112,449,966.80 | 2,144,525,264.45 | 2,144,525,264.45 | 2,144,525,264.45 |
| ஆகஸ்ட் | 505,154,543.87 | 27,555,142.38 | 1,377,757.12 | 26,177,385.26 | 531,331,929.13 | 581,330,090.37 | 581,330,090.37 |
| செப்டம்பர் | 50,000,000.00 | 2,772,602.74 | 138,630.14 | 2,633,972.60 | 52,633,972.60 | 52,633,972.60 | 52,633,972.60 |
| ஒக்டோபர் | 112,121,604.94 | 6,324,119.30 | 316,205.96 | 6,007,913.34 | 118,129,518.28 | 118,128,598.90 | 118,128,598.90 |
| நவம்பர் | 2,813,914,547.56 | 162,788,749.89 | 8,139,437.50 | 154,649,312.39 | 2,968,563,859.95 | 2,968,563,859.95 | 2,968,563,859.95 |
| டிசம்பர் | 5,134,957,445.73 | 288,418,789.06 | 14,420,939.44 | 273,997,849.62 | 5,408,955,295.35 | 5,258,954,375.97 | 5,258,954,375.97 |
| மொத்தம் | 20,735,879,241.18 | 1,201,419,334.42 | 64,933,496.07 | 1,136,485,838.35 | 21,872,365,079.53 | 21,772,359,602.01 | 21,772,359,602.01 |

புள்ளிவிபக் குறிப்பு - 7.4 பயனாளிக் கொடுப்பனவு 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையில்

| தொ. இல | மாவட்டச் செயலகம் | பிறப்பு | | திருமணம் | | நோய்கள் | | இறப்பு | | புலமைப் பரிசில் | | விசேட பிறப்புக்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு | தொகை ரூ. | அளவு | தொகை ரூ. | அளவு | தொகை ரூ. | அளவு | தொகை ரூ. | அளவு | தொகை ரூ. | அளவு | தொகை ரூ. | அளவு | மொத்தம் ரூபா |
| 1 | கொழும்பு | 64 | 480,000.00 | 535 | 4,012,500.00 | 1,175 | 3,576,500.00 | 1,054 | 15,810,000.00 | 4,498 | 6,745,000.00 | 404 | 2,060,000.00 | 7,730 | 32,684,000.00 |
| 2 | கம்பஹா | 292 | 2,190,000.00 | 1,656 | 12,420,000.00 | 3,638 | 10,294,300.00 | 2,154 | 32,310,000.00 | 7,630 | 11,445,000.00 | 1,452 | 7,565,000.00 | 16,822 | 76,224,300.00 |
| 3 | களுத்துறை | 135 | 1,012,500.00 | 892 | 6,690,000.00 | 1,975 | 5,446,000.00 | 1,673 | 25,095,000.00 | 5,075 | 7,612,500.00 | 791 | 4,000,000.00 | 10,541 | 49,856,000.00 |
| 4 | கண்டி | 310 | 2,325,000.00 | 1,618 | 12,135,000.00 | 3,645 | 10,061,000.00 | 2,147 | 32,205,000.00 | 9,612 | 14,418,000.00 | 1,075 | 5,385,000.00 | 18,407 | 76,529,000.00 |
| 5 | மாத்தளை | 175 | 1,312,500.00 | 652 | 4,890,000.00 | 1,399 | 3,950,030.00 | 833 | 12,495,000.00 | 4,522 | 6,783,000.00 | 269 | 1,425,000.00 | 7,850 | 30,855,530.00 |
| 6 | நுவரெலிய | 238 | 1,785,000.00 | 601 | 4,507,500.00 | 1,414 | 3,982,500.00 | 1,041 | 15,615,000.00 | 5,332 | 7,998,000.00 | 438 | 2,270,000.00 | 9,064 | 36,158,000.00 |
| 7 | காலி | 192 | 1,440,000.00 | 1,432 | 10,740,000.00 | 2,190 | 6,037,500.00 | 1,708 | 25,620,000.00 | 7,633 | 11,449,500.00 | 752 | 3,775,000.00 | 13,907 | 59,062,000.00 |
| 8 | மாத்தறை | 298 | 2,235,000.00 | 1,334 | 10,005,000.00 | 3,287 | 8,634,300.00 | 1,599 | 23,985,000.00 | 6,597 | 9,895,500.00 | 601 | 3,055,000.00 | 13,716 | 57,809,800.00 |
| 9 | ஹம்பாந்தோட்டை | 302 | 2,265,000.00 | 1,222 | 9,165,000.00 | 2,609 | 7,285,500.00 | 1,143 | 17,145,000.00 | 5,177 | 7,765,500.00 | 630 | 3,180,000.00 | 11,083 | 46,806,000.00 |
| 10 | யாழ்ப்பாணம் | 408 | 3,060,000.00 | 1,681 | 12,607,500.00 | 3,029 | 7,889,400.00 | 1,020 | 15,300,000.00 | 5,255 | 7,882,500.00 | 104 | 550,000.00 | 11,497 | 47,289,400.00 |
| 11 | மன்னார் | 158 | 1,185,000.00 | 389 | 2,917,500.00 | 579 | 1,498,750.00 | 150 | 2,250,000.00 | 2,967 | 4,451,000.00 | 14 | 175,000.00 | 4,257 | 12,477,250.00 |
| 12 | வவுனியா | 95 | 712,500.00 | 348 | 2,610,000.00 | 374 | 1,270,000.00 | 200 | 3,000,000.00 | 1,776 | 2,664,000.00 | 137 | 707,500.00 | 2,930 | 10,964,000.00 |
| 13 | முல்லைத்தீவு | 132 | 990,000.00 | 232 | 1,740,000.00 | 318 | 883,150.00 | 110 | 1,650,000.00 | 1,230 | 3,046,500.00 | 11 | 145,000.00 | 2,033 | 8,454,650.00 |
| 14 | கிளிநொச்சி | 125 | 937,500.00 | 282 | 2,115,000.00 | 631 | 1,628,250.00 | 150 | 2,250,000.00 | 2,559 | 4,561,500.00 | 129 | 675,000.00 | 3,876 | 12,167,250.00 |
| 15 | மட்டக்களப்பு | 383 | 2,872,500.00 | 2,486 | 18,645,000.00 | 3,943 | 9,919,000.00 | 967 | 14,505,000.00 | 7,734 | 11,601,000.00 | 447 | 2,235,000.00 | 15,960 | 59,777,500.00 |
| 16 | அம்பாறை | 594 | 4,455,000.00 | 2,455 | 18,412,500.00 | 5,062 | 11,807,700.00 | 1,085 | 16,275,000.00 | 6,817 | 10,225,500.00 | 682 | 3,510,000.00 | 16,695 | 64,685,700.00 |
| 17 | திருகோணமலை | 250 | 1,875,000.00 | 1,116 | 8,370,000.00 | 1,088 | 2,935,250.00 | 551 | 8,265,000.00 | 4,591 | 6,886,500.00 | 294 | 1,535,000.00 | 7,890 | 29,866,750.00 |
| 18 | குருணாகலை | 624 | 4,680,000.00 | 2,569 | 19,267,500.00 | 5,895 | 16,022,000.00 | 3,349 | 50,235,000.00 | 10,581 | 15,871,500.00 | 1,506 | 8,002,500.00 | 24,524 | 114,078,500.00 |
| 19 | புத்தளம் | 364 | 2,730,000.00 | 1,067 | 8,002,500.00 | 1,731 | 4,634,250.00 | 1,211 | 18,165,000.00 | 6,055 | 9,082,500.00 | 653 | 3,395,000.00 | 11,081 | 46,009,250.00 |
| 20 | அனுராதபுரம் | 382 | 2,865,000.00 | 1,079 | 8,092,500.00 | 2,137 | 6,249,750.00 | 1,107 | 16,605,000.00 | 7,076 | 10,614,000.00 | 329 | 1,645,000.00 | 12,110 | 46,071,250.00 |
| 21 | பொலனறுவை | 223 | 1,672,500.00 | 565 | 4,237,500.00 | 1,071 | 3,130,500.00 | 449 | 6,735,000.00 | 3,882 | 5,823,000.00 | 209 | 1,045,000.00 | 6,399 | 22,643,500.00 |
| 22 | பதுளை | 255 | 1,912,500.00 | 1,050 | 7,875,000.00 | 2,754 | 7,260,750.00 | 1,087 | 16,305,000.00 | 6,868 | 10,302,000.00 | 412 | 2,185,000.00 | 12,426 | 45,840,250.00 |
| 23 | மொனராகலை | 221 | 1,657,500.00 | 1,071 | 8,032,500.00 | 2,049 | 5,473,000.00 | 764 | 11,460,000.00 | 7,838 | 11,757,000.00 | 350 | 1,780,000.00 | 12,293 | 40,160,000.00 |
| 24 | இரத்தினபுரி | 355 | 2,662,500.00 | 2,111 | 15,832,500.00 | 3,813 | 10,923,750.00 | 2,317 | 34,755,000.00 | 7,028 | 10,542,000.00 | 528 | 2,640,000.00 | 16,152 | 77,355,750.00 |
| 25 | கேகல்லை | 132 | 990,000.00 | 1,101 | 8,257,500.00 | 2,772 | 7,868,250.00 | 1,751 | 26,265,000.00 | 6,509 | 9,763,500.00 | 526 | 2,670,000.00 | 12,791 | 55,814,250.00 |
| | **மொத்தம்** | 6,707 | 50,302,500.00 | 29,544 | 221,580,000.00 | 58,578 | 158,661,380.00 | 29,620 | 444,300,000.00 | 144,842 | 219,186,000.00 | 12,743 | 65,610,000.00 | 282,034 | 1,159,639,880.00 |

**புள்ளிவிபரக் குறிப்பு - 7.5**

## சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் - நம்பிக்கைப் பொறுப்பு அங்கீகரித்த செலவுத் தொகை

| தொ. இல | விபரம் | தொகை. ரூ.சதம் |
|---|---|---|
| 1 | வில்கமுவ பி.செ சிறுநீரக நோயாளிகளுக்கு தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்குதல் | 1,172,000.00 |
| 2 | திருமதி கே.ஜீ வஜிரா ஹேரத்தின் நரம்பில் நோயினால் அவதியுறும் பிள்ளைக்கு நிதியுதவி வழங்குதல் | 60,000.00 |
| 3 | ஜப்பானிய புலமைப் பரிசில் பெறுவோறுக்கு செலவுகளை மேற்கொள்ளல் | 465,031.50 |
| 4 | செல்வன் ஆர்.எம். மலிந்து நிம்சரவிற்கு மின்சார “ஓகன்” இசைக்கருவி ஒன்றினைக் கொள்வனவு செய்ய உதவித் தொகையினை வழங்குதல் | 48,500.00 |
| 5 | கேஷானி நிசாதிகாவுக்கு “டப்” இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்தல் | 32,499.00 |
| 6 | எம்.ஜீ.ஓ.கே திலகரத்ண என்ற மாணவிக்கு வயலீன் ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவு | 14,250.00 |
| 7 | பீ. கனிஷ்ட பிரதீப் என்ற மாணவனுக்கு கராத்தே போட்டியில் கலந்து கொள்வதற்கு நிதியுதவியினை வழங்குதல். | 65,000.00 |
| | **முழு மொத்தம்** | **1,857,280.50** |

## 08. சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரிவின் செயலாற்றுகை.

### 8.1. அறிமுகம்.

இலங்கையில் வறுமையினை ஒழிக்கும் தேசிய பணியினை தனது முக்கிய பணியாகக் கொண்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மக்களை முழுமையான வலுவூட்டலுக்குட்படுத்தும் பொருட்டு பொருளாதார, சமூக, உள, அரசியல், கலாச்சார, சட்ட மற்றும் சுற்றாடல் ஆகிய விரிவான வரையறைக்குள் தனது செயற்பாடுகளை வகைப்படுத்தியுள்ளது. அதன் பொருட்டு திணைக்கள அமைப்புக் கட்டமைப்பினைக் கொண்ட முக்கிய பிரிவிவாக இருப்பது சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரிவாகும்.

சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரிவு சமூகத்திலுள்ள சகல சமூகக் குழுக்களிலும் (சிறுவர்கள், இளைவயதினர், முதியோர் மற்றும் பெண்கள்) கவனத்தினைச் செலுத்தி அவர்கள் சமூக, உள, சுற்றாடல் மற்றும் கலாச்சார ரீதியாக முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினைக் குறைந்து அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு ரீதியாக நிறைவடைந்துள்ள மனித சமூகம்ஒன்றினை உருவாக்கும் பொருட்டு 2018ஆம் ஆண்டிலும் ரூபா மில்லியன் 245 ஐ செலவிட்டு பல வேலைத்திட்டங்களை செயற்படுத்தியது.

**<u>நோக்கு:</u>**

"சமூக, உளவியல், சுற்றாடல், மற்றும் கலாச்சார ரீதியாக வலுவூட்டப்பட்ட ஒரு சமூகம். ”

**பணி:**

"சமூக, உளவியல், சுற்றாடல், மற்றும் கலாச்சார ரீதியாக பலமுள்ள மனித சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்பும் பொருட்டு சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டங்களை செயற்படுத்ததல்.”

**நோக்கங்கள்:**

- பல்வேறு சமூக காரணங்களினால் வாழ்வதற்கு பொருத்தமான வீடொன்றில்லாத மக்களுக்கு வீடொன்றிற்கான உரித்தினை உறுதிப்படுத்தி கொண்டு அவர்களின் சமூக ரீதியான வாழ்வினை உறுதிப்படுத்துதல்.
- சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பம் ஒன்றில் பிள்ளைப் பேறு நடைபெறுகின்ற பொது அதனைத் தலைப்பாகக் கொண்டு வருமானமீட்டல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பினை இலக்காகக் கொண்டு மனை அலகு மட்டத்தில் மரக்கன்றுகளை நடுகையிடல்.
- புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை, மற்றும் பிற சமூக ரீதியான காரணங்களினால் குடும்ப அலகுகளில் சிதைவடைந்துள்ள உள்ளக ரீதியான சக வாழ்வினைக் கட்டியெழுப்புதல்.
- நாடு பூராகவும் வியாபித்துள்ள 7-18 வயதெல்லைக்குள் உள்ள சிறார்களை இனங்கண்டு அவர்களை அணிதிரட்டி ஆற்றல்களை வெளிக்கொண்டுவருதல், மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்வதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவதும்.

- கல்வியில் உள்ள போட்டித்தன்மை, மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் ஊக்குவிப்பினால் புத்தங்களைப் வாசிப்பதிலிருந்து தூரமாகியுள்ள சிறுவர் சமூகத்தினரை வாசிப்பதற்கு ஊக்குவிப்பதும் அவர்களின் சிந்தனா சக்தியினைத் தூண்டுவதும்.
- மக்களின் உள சமூக ரீதியான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினைக் குறைக்கும் பொருட்டு பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றினைத் செயற்படுத்துவதும் அவர்களது சமூக வாழ்கையின் உற்பத்தித் திறனை உறுதிப்படுத்துவதும்.
- மேற்படி வேலைத்திட்டங்களை உறிய நேரத்தில் இலக்கிடப்பட்ட விதத்தில் செயற்படுத்துவதும் பெறுபேறுகளை மதிப்பிடுவதும்.

**புள்ளி விபரக் குறிப்பு - 8.1**

**<u>பிரிவின் மொத்த முன்னேற்றங்கள் தொடர்பான பொழிப்பு</u>**

| தொ. இல | வேலைத்திட்டம் | ஒதுக்கிய தொகை ரூபா. மில்லியன் | செலவிட்ட தொகை ரூ. மில்லியன் | செலவாகிய வீதம் | வேலை த்திட்டங் களின் எண்ணி க்கை | பங்கேற்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரிய பியச வீடமைப்பு வேலைத்திட்டம் | 200.2 | 187.32 | 93% | 1014 | 1,014 |
| 2 | சமுர்த்தி பசுமை வெகுமதி வருமானமீட்டல் மரநடுகை வேலைத்திட்டம் | 25 | 18.910 | 76% | 17 | 9,951 |
| 3 | போதைப்பொருள் மற்றும் புகைத்தல் தடுப்பு வேலைத்திட்டம், ஆத்மிக அபிவிருத்தி மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டம் | 10 | 7.038 | 70% | 358 | 26,964 |
| 4 | சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக மற்றும் கலாச்சார வேலைத்திட்டம் | 24.80 | 17.491 | 70% | 1,463 | 40,334 |
| 6 | உளவளத்துணையும் தொழில் வழிகாட்டலும் | 17.5 | 12.810 | 73% | 262 | 20,080 |
| 8 | முன்னேற்ற மீளாய்வு | 2.50 | 1.515 | 60% | 146 | 4,683 |
| | **மொத்தம்** | **280** | **245.084** | **87%** | **3260** | **103,026** |

## 8.2. திரய பியச வீடமைப்பு வேலைத்திட்டம்

**அறிமுகம்:**

வீடு என்பது அடிப்படையான மனிதத் தேவை ஒன்றாகும் என சமூகத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் ஒன்றாகும். வீடுகளின் நிலைக்கேற்ப தனியாளினதம் மக்களினதும் வறிய நிலை வெளியே காணக்கூடிய அடையாளம் ஒன்றாகவும். வீடொன்றில்லாமல் வாழ்வது வறுமை நிலையினை அளவை செய்யும் ஒரு பிரதான காரணியாகும். அத்துடன் பிரத்தியேகம், பாதுகாப்பு, ஆரோக்கியம், பொருளாதாரம், உட்பட ஆட்களின் அந்நியோன்னிய தொடர்பு நிலை இல்லாமை ஆகிய அனைத்தையும் நிர்ணயிக்கின்ற ஒன்றாக ஆக்கிக் கொள்ளவதாகும்.

வீடு என்பது சுற்றாடலின் ஒரு பகுதியாகும். வீட்டில் வாழும் ஆட்களினதும் சுற்றாடலுக்குமிடையே எதேனும் ஒரு தொடர்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அது உளவியல் ரீதியாக கட்டியெழுப்பப்படும் அர்த்தமுள்ள தொடர்பு ஒன்றாகும் இதில் முக்கியமான அடிப்படையானது குடும்பம் என்ற கருப்பொருளாகும். வீடு, மற்றும் குடும்பம் என்ற இரு கருப்பொருட்களும் மிக நெருங்கியதாக ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளதுடன் வீடு பிரதானமனதாக நடைமுறை ரீதியான மற்றும் அடையாள ரீதிலுமான ஒரு வகிபாகத்தினை மேற்கொள்கின்றது. இவ்வாறான நெருங்கிய காரணங்கள் தொடர்பில் கவனத்திற்கொண்டு வீடொன்றிற்கான உரிமை இருப்பதன் காரணமாக பல்வேறு சங்கங்களுக்கு உள்ளாகும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனங்கண்டு அவர்களது வீட்டுக் கனவினை மெய்யாகிடுவது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்திப் பிரிவின் எதிர்பார்க்கையாகும்.

வீடொன்றிற்கான உரித்து இல்லாமல் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் குடும்பங்களில் விசேடமாக பெண் பிள்ளைகளின் உயிர்களுக்கு வெளியாட்களால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள், சூழலினால் ஏற்படும் முறையற்ற தாக்கங்கள் காரணமாக அவர்கள் வறுமையின் கீழ் மட்டத்தினை அடைவதை தவிர்க்க முடியாது. இந்த சமூக சீர்கேடுனைத் தவிர்த்து உறிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் குடும்பங்களுக்கு ரூபா 200,000/= இற்கான நிதியுதவியினை வழங்கி உத்தியோகத்தர்களினதும் மக்களினதும் கூட்டு தலையீட்டினூடாக வீடொன்றினை நிர்மாணித்து முடித்துக்கொடுப்பது ‘‘திரிய பியச’’ வீடமைப்பு வேலைத்திட்டத்தின் முறையாகும் தனது வீட்டினை நிர்மாணிக்கும் போது இப்பயனாளிகள் பெறும் அனுபவமானது சமூகப் பொறுப்புக்களையும் தனிநபர் அபிமானத்தையும் கட்டியெழுப்புவது மிகவும் முக்கியத்தவம் வாய்ந்ததாகும் வீட்டுத் திருப்தியுடன் தனது குடும்பத்திலுள்ள பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொண்டு உடல் உள நிவாரணத்தினை பெறுவதன் ஊடாக பிள்ளைகளின் கல்வி மற்றும் சுகாதார மட்டத்தினை உயர்த்தி தனிநபர் ஆத்மீக அபிவிருத்தியினூடாக வாழ்கைத் தரத்தினை உயர்த்தி வலுவூட்டும் வழியில் ஈடுபடச் செய்து தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு பங்களிப்புச் செய்து கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது.

**இலக்குக் குழு-** கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் வீடொன்றிற்கான உரித்து இல்லாத குடும்பங்கள்

1. குடும்பங்களில் உழைப்பவர்கள் இறந்து அல்லது செயற்படாத நிலையில் உள்ள குடும்பங்கள்.
2. அதிகமாக பெண்பிள்ளைகள் உள்ள பெண்களை அடிப்படையாகக் கொண்ட குடும்பங்கள்.
3. மாற்றுத்திறனாளிப் பிள்ளைகள் உள்ள பிரதானமாக உழைப்பவர் அங்கவீனமடைந்திருத்தல்.
4. பெற்றோறைப் பராமரிக்கின்ற திருமணமாகாத வயது வந்த பிள்ளைகள் உள்ள குடும்பங்கள்.
5. பெற்றோர் இல்லாமல் பாட்டி, பாட்டன் பாதுகாப்பில் உள்ள சிறுவர்களைக் கொண்ட குடும்பங்கள்.
6. வீடொன்றினைக்கட்ட ஆரம்பித்து பொருளாதார குறைபாடுகள் காரணமாக நீண்டகாலமாக அதனை பூர்த்தி செய்ய முடியாதுள்ள குடும்பங்கள்.
7. சிறுநீரக நோயாளிகள் அதிகமாக உள்ள – அனுராதபுரம், பொலனறுவை, மாத்தளை, அம்பாறை, திருகோணமலை, ஆகிய மாவட்டங்களில் குடும்பத்தில் ஒருவறாவது சிறுநீரக நோயால் அவதிப்படும் வீடில்லாத குடும்பங்கள்.

**செயற்படுத்தப்படும் முறை-** சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் பொருத்தமான குடும்பங்களை இனங்கண்டு கிராம உத்தியோகத்தர்களின் சிபாரிசுடன் அதனை உறுதிப்படுத்தி 03 கட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீட்டினை விடுவித்து கருத்திட்டத்தினை செயற்படுத்ததல்.

**செயற்படுத்தும் இடங்கள்-** மேற்படி நிபந்தனைகளின் அடிப்படையில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இனங்காணாப்பட்ட வீட்டுக்குறியவர்களின் காணிகளில்.

அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு - 200.2 மில்லியன் ரூபா

ஆரம்பித்த திகதி - 2018.02.01

பூர்த்தி செய்த திகதி - 2018.12.31

2018.12.31ஆம் திகதியில் செலவு – ரூபா 187,320,000.00

**கருத்திட்டத்தின் முடிவு-** சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1,001 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன் 1014 வீடுகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டுள்ளது.

**பெற்றுக் கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்-** வீடொன்றின் உரித்து தொடர்பில் தன்னபிமானம் ஏற்படுதல், பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், சமூக அங்கீகாரத்திற்குள்ளாகுதல்

குடும்ப அங்கத்தவர்களின் அந்தரங்கள் பாதுகாக்கப்படல் போன்ற விரிவான சமூக ரீதியான நன்மைகள் கிடைக்கின்றன்.

## கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள்

**<u>பொலனறுவை -கிரித்தலே பிரதேச செயலகம். திரு. பீ.கே.ஜீ ரங்ஹாமி</u>**




**<u>காலி மாவட்டம், பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவு திருமதி பீ.எம் துஷாரி</u>**




**கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவின் திரு. டப்லியூ.எம்.ஏ.எஸ் ஏக்கநாயக்க**




## 8.3. சமுர்த்தி பசுமை வெகுமதி வருமானமீட்டல் மரநடுகை வேலைத்திட்டம்

இந்த வேலைத்திட்டமானது 2018ஆம் ஆண்டில் 125,000 சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டும் இலக்கிற்கமைய பயணித்து செயற்படுத்தப்படுகின்ற வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றாகும். அதன் பிரகாரம் 2017ஆம் ஆண்டிலும் 2018.06.30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலும் சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களிலும் குறைந்தவருமானம் பெறும் குடும்பங்களிலும் இடம் பெற்ற பிள்ளைப்பேற்றினை முன்னிட்டு இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

இந்த விதத்தில் இனங்காணப்படுகின்ற குடும்பங்களுக்கு பலா, மா, தென்னை, மகோகனி மற்றும் தேக்கு ஆகிய பலகை (கம்பு) ரீதியான பெறுமதியும் பொருளாதார ரீதியான பெறுமதியினையும் உடயை மரக்கன்றுகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் கீழுள்ள குறிக்கோள்களை உறுதிப்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டது.

- இலங்கையின் காடுகளின் பரப்பினை அதிகரிப்பதன் ஊடாக காட்டு வளத்தினையம் நீர்வளத்தினையும் பாதுகாத்தல்.
- உணவுப் பாதுகாப்பினை விருத்தி செய்தல்.
- குடும்ப அலகில் வருமானத்தை மேம்படுத்துதல்.
- சிறுவர்களின் எதிர்கால பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.
- சுற்றாடல் பாதுப்பு தொடர்பில் மக்களின் விளங்கிக் கொள்ளும் தன்மையினை விருத்தி செய்தல்.
- நிலைபேரான அபிவிருத்தி இலக்கிற்கு ஏற்ப பூமியிலுள்ள உயிரினங்களை பாதுகாத்தல்.

**இலக்குக் குழுக்கள்:-** பெண்கள், சிறுவர்கள்,

**செயற்படுத்தும் முறை :-** பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இலக்குக்குழுவை இனங்கண்டு தேவையான மரக்கன்றுகளை வழங்கி வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்.

**செயற்படுத்தப்பட்ட இடங்கள்:-** பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில் இனங்காணப்பட்ட குடும்ப அலகுகளில்

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு:-** ரூபா: 25,000,000.00

**ஆரம்பித்த திகதி:-** 2018.01.15

**பூர்த்தி செய்த திகதி:-** 2018.12.31

**2018.12.31 ஆம் திகதியில் செலவு:-** 18,910,026.59

**கருத்திட்டத்தின் முடிவுகள்:-** பொருளாதார மற்றும் பலகைகளின் பெறுமதியினைக் கொண்ட யூத் இனத்தேங்காய், பலா, மா, தேக்கு, மகோகனீ மற்றும் பிற வகையான மரக்கன்றுகள் 103,401 ஐ குடும்பங்களிடத்தேயே விநியோகித்து நடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்:-** 9,951 குடும்பங்களில் பொருளாதார, மற்றும் பலகை வகையான மரங்கள் 103,401 இன் உரிமையினை உறுதிப்படுத்துதல்.

<u>**கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள்**</u>

மாத்தறை மாவட்ட பஸ்கொட செயலகப் பிரதேச செயலகப் பிரிவு



பொலனறுவை மாவட்ட வெலிகந்தை பிரதேச பிரிவு



## 8.4. போதைப்பொருள் மற்றும் புகைத்தல் தடுப்பு, ஆத்மீக அபிவிருத்தியின் ஊடாக மதிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டம்.

**அறிமுகம்:-** சமுதாய ரீதியான தேசத்தின் ஆரம்ப அலகானது குடும்பமாகும். குடும்ப அலகில் நடத்தை வெளியிடப்படும் முக்கிய அங்கமே சமூகமாகும். சமூக பரினாமத்துடன் குடும்ப அருகிலிருந்து அணுவியல் குடும்ப அலகு வரை கூட்டுக்குடும்பத்தின் பரினாம் வளர்கிறது. நிகழ்கால குடும்ப அலகு தொடர்பில் கவனத்தினைச் செலுத்தும் போது மனிதத் தொடர்புகளிலிருந்து வேறுபட்ட மிக விரைவான விதத்தில் செயற்படுவதனையும் காண முடியுமாக உள்ளது. நவீன தொழில்நுட்ப உபகரணங்களுக்கு முறையற்ற விதத்தில் அடிமையாயிருந்த ஒருவருக்கு போட்டித்தன்மையுடன் ஏதேனும் ஒரு சிலவற்றை பிடித்துக் கொள்கின்ற போட்டி நிலை, போதைப்பொருள், மற்றும் மதுபானத்திற்கு அடிமையாகுதல், தொற்றா நோய்களுக்கு உள்ளாகும் வேகம் அதிகரித்தல், மற்றும் மன உழச்சல் போன்ற நிலைகள் காரணமாக அவர்கள் பெற்றுக் கொண்டுள்ள பின்னடைவுகள் அதிகமானதாகும்.

இதன் காரணமாக குடும்ப அலகில் அங்கத்தவர்களுக்கிடையே கூட்டுப் பொறுப்புடனான கட்டுபாடுகள் சிதைவடைந்து செல்வதன் காரணமாக பெற்றோர் பிள்ளைகள் தொடர்புகளை வெறுக்கும் கணவன் மனைவிக்குமிடையிலான தொடர்புகள் அருந்து குடும்ப அலகு சமூகரீதியான விளைவின் உச்சகட்டம் ஒன்றாக உள்ளாகியுள்ளமை, நிகழ்காலத்தில் காணக்கூடிய அறியக்கூடிய அனுபவங்களிலிருந்து தெளிவாகின்றது அதன் காரணமாக குடும்ப அலகின் கட்டுக்கோப்புகள் பலப்படுத்தலின்றி முழுமையான சமூக அபிவிருத்தி தொடர்பில் கதைப்பதில் பிரயோசனமில்லை.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி பிரிவின் போதைப்பொருள் மற்றும் புகைத்தல் தடுப்பு, ஆத்மீக அபிவிருத்தியினூடாக மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டங்கனூடாக குடும்ப அலகில் மனித தொடர்பகளை பலப்படுத்தி நவீன சமூக பண்புகள் தொடர்பில் முழுமையான விளக்கத்துடன் திருப்திகரமாண குடும்ப வாழ்வினை வாழ்வதற்குள்ளாவதன் முக்கியத்தவம் மற்றும் மது பாவனையிலிருந்து விலகுதல், வீட்டு முகாமைத்துவம் போன்ற வழித்தலைப்புக்களின் கீழ் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

**இலக்கக்குழு:** நவீன தொழில்நுட்ப உபகரணங்களின் பால் முறையற்ற விதத்தில் அடிமையாதல், போட்டித் தன்மையான வாழ்க்கை முறை, போதைப் பொருள் மற்றும் மது பாவனைக்கு அடிமையாகுதல் தொற்றா நோய்களுக்கு உள்ளாகும் நிலை அதிகரித்தல் மற்றும் மன அழுத்த நிலைகளுக்கு முகங்கொடுக்கின்ற சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களும்.

**செயற்படுத்தப்படும் விதம்:-** சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலமாக கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் மேற்படி பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்ற குடும்பங்களைத் தெரிவு செய்து பொருத்தமான வளவாளர்களின் மூலம் விளக்கமளித்தல்.

**செயற்படுத்திய இடம்:-** பிரதேச செயலகப்பிரிவு மட்டத்தில்

**அங்கீகரித்த நிதி ஓதுக்கீடு:-** ரூபா: 10,000,000.00

**ஆரம்பித்த திகதி:-** 2018.02.01

**பூர்த்தி செய்த திகதி:-** 2018.12.31

**2018.12.31 ம் திகதியில் செலவு** :- ரூபா: 7,038,152.30

**கருத்திட்டத்தின் முடிவு:-** 358 வேலைத்திட்டத்தின் கீழ் 26,964 ஆட்களுக்கு குறித்த விடய அறிவு வழங்கப்பட்டுள்ளது.

**பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார ரீதியான பெறுபேறுகள் :-** மக்களின் போதைப்பொருள் பாவனை தொடர்பான தெளிவும் திருப்திகரமான குடும்ப வாழ்கையினை மேற்கொள்ளும் விளக்கம் விரிவடைந்துள்ளமை.

**<u>கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள்.</u>**



காலி மாவட்ட ஹிக்கடுவை பிரதேச செயலகம் நுவரகம்பலாத்தை பிரிவு



அனுராதபுரம் மாவட்டம் மத்திய பிரதேச செயலகப் பிரிவு

## 8.5. சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் கழக மற்றும் கலாச்சார வேலைத்திட்டம்

**அறிமுகம்:-** 2019ஆம் ஆண்டில் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக மற்றும் கலாச்சார வேலைத்திட்டங்கள் 03 பிரதான பிரிவுகளின் கீழ் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

### 8.5.1. சமுர்த்தி சிறுவர் கழக சலாச்சார மற்றும் இலக்கிய போட்டிகள் :

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சிறுவர் சமூகமானது கலாச்சார மற்றும் இலக்கிய ஆற்றல்களில் பலவீனமான ஆத்மீக ரீதியில் பின்தள்ளப்பட்ட குழு ஒன்றாக மாறியுள்ளது. ஆகையினால் மீண்டும் அந்த கலாச்சார மற்றும் இலக்கிய ரீதியான ஆற்றல்களை பெருக்கி சமூக மயப்படுத்தி கலாச்சார திசைக்கு மாற்றஞ் செய்வதற்கு பொறுத்தமான இடமே சிறுவர்களை இலக்ககாக் கொண்டு மிகப் பயனுறுதி வாய்ந்த கலாச்சார மற்றும் இலக்கிய ரீதியான வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதாகும்.

2001ஆம் ஆண்டிலிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்திப் பிரிவின் மூலம் தேசத்தின் சிறார்களது எதிர்காலத்தினை பாதுகாக்கும் நோக்கில் எதிர்கால கைத்தொழில் மயமான உலகிற்கு பொருத்தமான விதத்தில் அவர்களை உடல், உள, ஆத்மீக, சமூக மற்றும் கலாச்சார ரீதியாக வலுவூட்டுவதன் பொருட்டு 7 இல் இருந்து 18 இற்கு இடைப்பட்ட சகல சிறுவர்களையும் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகத்தில் ஒன்று சேர்ந்து இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இங்கு பரவலான சுற்றாடலில் விரிவடைந்துள்ள பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு அறிவு திறமை மற்றும் பனப்பாங்குகளில் பூரணத்தவமுள்ள எதிர் கால சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய பிள்ளைகளை தேசத்திற்கு பரிசாக வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் வருடாந்தம் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கிய போட்டிகள் சமுர்த்தி வங்கி, வலய, பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் நடாத்தி வெற்றி பெறும் சிறுவர்களை தேசிய போட்டிகளில்

கலந்து கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மூன்று வயதுத் தொகுதிகளின் கீழ் 14 போட்டி நிகழ்ச்சிகள் ஊடாக இப்போட்டித் தொடர் செயற்படுத்தப்படுவதுடன் மிக சிறப்பாக 2018ஆம் ஆண்டில் இப்போட்டிகள் நடாத்தப்பட்டது.

**8.5.2. சமுர்த்தி சிறுவர் கழக தலைமைத்துவப் பயிற்சி -** சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச செயலக மட்டத்தில் 11,953 சிறுவர் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின்பால் 367,566 சிறார்கள் கூட்டிணைந்துள்ளனர். இச்சிறுவர் கழக பிள்ளைகளின் தலைமைத்துவ திறைமைகளை விருத்தி செய்யும் நோக்கில் பிரதேச செயலப்பிரிவுக்கு ஒரு வேலைத்திட்டம் என்ற வகையில் 331 வேலைத்திட்டங்களை நடாத்த திட்டமிட்டிருந்தது.

**8.5.3. சிறுவர் கழக நூலக மேம்பாட்டு வேலைத்திட்டம்:-** கல்வியில் உள்ள போட்டி நிலை மற்றும் நவீன தொழில்நுட்பத்தினை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது தற்போதைய சிறுவர் பரம்பரையினர் புத்தகங்கள் வாசிப்பதிலிருந்து தூரமாவதற்குக் காரணமாக உள்ளது. சமுர்த்தி கெக்குலு சிறுவர்கள் கழகங்கள் ஊடாக மீண்டும் சிறுவர்கள் புத்தகங்களை வாசிப்பதனை ஊக்குவிப்பதும் அவர்களது கற்பனையினை ஊக்குவிக்கும் எதிர்பார்ப்புடன் கிராமிய மட்டத்தில் சிறுவர் கழக நூலகங்கள் 100இற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை வழங்குவது இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது.

**இலக்கக்குழு:-** 7 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட வயதினையுடைய சக சிறுவர்களும்.

**செயற்படுத்தப்படும் முறை:-** வயது 7 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட வயதினையுடைய சிறுவர்களை கெக்குலு சிறுவர் கழகங்களில் இணைத்துக்கொண்டு சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கியப் போட்டிகளை வலய, பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் நடாத்துதல். சமுர்த்தி சிறுவர் கழக தலைமைத்தவப் பயிற்சி மற்றும் இனங்காணப்பட்ட சிறுவர் கழக நூலகங்களை மேம்படுத்துதல்.

**செயற்படுத்திய இடங்கள் -** சமுர்த்தி வங்கி வலயம், பிரதேச செயலகப்பிரிவு, மாவட்டச் செயலகம், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.

**அங்கீகரித்த நிதி ஒதக்கீடு-** ரூபா:- 24,800,000.00

**ஆரம்பித்த திகதி-** 2018.04.01

**பூர்த்தி செய்த திகதி-** 2018.12.31

**2018.12.31 ஆம் திகதியில் செலவு** - ரூபா:- 17,491,538.13

**கருத்திட்டத்தின் முடிவு-** தேசிய, மாவட்ட, மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் 553 வேலைத்திட்டங்கள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**பெற்றுக் கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்:-** 45,344 சிறார்களின் பல்வேறு ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், 281 சிறுவர் நுலகங்களை ஆரம்பித்தல், மற்றும் 236 தலைமைத்தவ பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல்.

## கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள்

காலி மாவட்ட எல்பிட்டிய பிரதேச செயலப் பிரிவின் சிறுவர் வாசிகசாலை






காலி மாவட்ட சிறுவர் கழக தலைமைத்துவ பயிற்சி நாகொட பிரதேச செயலகப் பிரிவு



பொலனறுவை மாவட்டம்






தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட சிறுவர் கழக போட்டிகள்





## 8.6. உளவளத்துணை மற்றும் தொழில் வழிகாட்டல்கள்:-

**அறிமுகம்:-** வறுமை தொடர்பான கலந்துறையாடல்களின் போது முக்கிய தலைப்பாக மாறுவது பொருளாதார ரீதியான வறுமை நிலையாகும். இருப்பினும் தற்போது வறுமை நிலையின் முக்கிய காரணி ஒன்றாக உள ரீதியான காரணியும் அதற்குக் காரணமாகவுள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி, போட்டித் தன்மை, குடும்பத் தொடர்புகள் அருந்து போதல் போன்ற காரணிகள் காரணமாக சமூகத்தின் சகல நிலையிலுமுள்ளோர் ஏதேனும் ஒரு சகவீதத்தில் ஏதேனும் ஓர் உளவியல் ரீதியான அழுத்தம் ஒன்றினால் வருத்தப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. தற்கொலை செய்து கொள்ளல், போதைப் பொருள் பாவனை, வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமை மற்றும் குடும்பச் சச்சரவுகள் அதிகரித்தள்ளமை போன்ற நிலைகளினூடாக இது வெளிக்காட்டப்படுகின்றது. இப்பிரச்சினைகள் வறிய மக்களுக்கும் ஒரு பொதுவான நிலையாகும் என்பதுடன் அந்த நிலையினை குறைப்பதற்காக கீழ் குறிப்பிடப்படுகின்ற வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

### 8.6.1. உத்தியோகத்தர் பயிற்சி:

சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நேரடியாக பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நெறிப்படுத்துகின்ற உத்தியோகத்தர்களுக்குத் தேவையான அடிப்படை அறிவினை விதிவிடப் பயிற்சி ஒன்றின் மூலம் வழங்குவதற்கும் இந்த விடயங்கள் தொடர்பில் கிராமிய மட்டத்தில் உள்ள வளவாளர்களின் பற்றாக்குறையினைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டு இனங்காணப்பட்ட சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் 153 பேரை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்துடன் கூட்டிணைந்து உளவளத்துறை தொடர்பான டிப்ளோமா படநெறியொன்று ஆரமப்பிக்கப்பட்டுள்ளது.

### 8.6.2 மக்களைப் பயிற்றுவித்தல்:

மக்களின் உளவியல் ரீதியான பிரச்சினைகளை குறைந்துக் கொள்ளும் பொருட்டு சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இலக்காகிக் கொண்டு உளவவளத்துணை வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன் அதன் மூலம் அவர்களது சுய ஆற்றலை விருத்தி செய்து உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தினை விருத்தி செய்து தனிநபர் அபிமானத்தை கட்டியெழுப் எதிர்பார்க்கப்பட்டது.

**இலக்குக் குழு-** சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் அங்கத்தவர்கள்.

**செயற்படுத்தப்படும் முறை :-** சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக தகுதியான இலக்குக் குழுக்களை இனங்கண்டு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது

**செயற்படுத்தப்பட்ட இடங்கள்** - பிரதேச செயலகங்கள், மற்றும் ஏனைய பொருத்தமான பயிற்சி நிலையங்கள்.

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு-** ரூபா. 17,500,000.00

**ஆரம்பித்த திகதி-** 2018.02.01

**பூர்த்தி செய்த திகதி**- 2018.12.31

**2018.12.31 ம் திகதியில் செலவு** ரூ 12,810,116.86

**கருத்திட்டத்தின் முடிவு-** சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் என 20,080 பேரை தொடர்புபடுத்திக் கொண்டு 262 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.

**பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்:-** சுயபலத்தை விருத்தி செய்து கொண்டு உடல், மற்றும் உள ரீதியாக நோயற்ற நிலையை விருத்தி செய்து தனிநபர் அபிமானத்தைக் கட்டியெழுப்பத் தேவையான வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.

**கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள்**

காலி மாவட்டம் ஹபராதுவை பிரதேச செயலகப் பிரிவு



ஹம்பாந்தோட்டை மாவட்டம் வலஸ்முல்லை பிரதேச செயலகம்.



**8.7. முன்னேற்ற மீளாய்வு வேலைத்திட்டங்கள்:**

**அறிமுகம்:-** எந்த ஒரு அபிவிருத்தி வேலைத்திட்டத்தினையும் செயற்படுத்தும் போதும் அதனை தொடச்சியாக மதிப்பீட்டுக்குற்படுத்துவதன் ஊடாக உத்தேச இலக்குகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும் ஊழியர்களின் வினைத்திறனை விருத்தி செய்யவும் வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அதன் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் போது மாவட்ட செயற்பாடுகளை தேசிய மட்டத்தில் காலாண்டிற்கு ஒரு முறை மதிப்பீடவும், பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலான செயற்பாடுகளை மாதாந்தம் மாவட்ட மட்டத்தில் மதிப்பிடவும் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**இலக்குக்குழு-** பிரதேச செயலக மட்டத்தில் பணிபுரியும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள், தலைமையக முகாமையாளர்கள், மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர்கள், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள், தலைமையக் காரியாலயத்தின் சமூக அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்கள்,

**செயற்படுத்தப்படும் முறை-** மாதாந்த பிரதேச செயலகப் செயற்பாடுகளை மாவட்ட மட்டத்தில் மதிப்பீடு செய்தல் மாவட்ட மட்ட செயற்பாடுகளை காலாண்டிற்கு ஒரு முறை தேசிய மட்டத்தில் மதிப்பீடு செய்தல்.

**செயற்படுத்திய இடம்-** மாவட்டச் செயலகம், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு ரூபா:-** 2,500,000.00

**ஆரம்பித்த திகதி-** 2018.02.01

**முடித்த திகதி-** 2018.12.31

**2018.12.31 இல் செலவுகள் ரூபா:-** 1,515,700.42

**கருத்திட்டத்தின் முடிவுகள்:-** மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் 146 முன்னேற்றப்பட்டறைகளை செயற்படுத்தப்பட்டுள்ளது.

**பெற்றுக் கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்-** 2017ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்தி பிரிவின் பொருட்டு ஒதுக்கப்பட்ட ரூபா மில்லியன் 208 இல் 245ஐ செலவிட்டு 87% முன்னேற்றத்தினை பெற்றிருத்தல்.

## 09. சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் செயலாற்றுகை.

**அறிமுகம் :-** 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்திற்கமைய மக்களை பொருளாதார, சமூக, மற்றும் ஆத்மீக ரீதியாக வலுவூட்டச் செய்யும் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் வறுமையினை ஒழித்தல், சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்துதல், தேசிய கொள்கையினை அறிமுகம் படுத்தும் பொருட்டு தனிநபர், குடும்பம், குழுக்கள், மற்றும் மக்களை மையமாகக் கொண்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதலையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அபிவிருத்தி வேலைத்திட்டமும் மக்களை அடிப்படையாகக் கொண்டு சமுதாய அடிப்படை அமைப்புக்கள் ஊடாக செயற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவின் பொருட்டு அல்லது கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றில் ஒரு பகுதியின் பொருட்டு அல்லது பல கிராமிய சேவர் பிரிவுகளின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு தாபிக்கப்படுகின்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இப்பிரிவில் பணிப் பொறுப்புக்களை செயற்படுத்ததும் பொருட்டு மக்கள் தொடர்புபடுகின்ற கீழ் மட்ட ஒழுங்கமைப்பான அலகே சமுதாய அடிப்படை அமைப்பாகும். சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு என்பது சமுர்த்தி சட்டத்தின் மூலம் உத்தேச நெறிப்படுத்தல் நடவடிக்கைகளில் மக்கள் தொடர்புபடுகின்ற கிராமிய மட்டத்திலுள்ள ஒரு அமைப்பாகும் இந்த அலகினை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி பிரதேச அமைப்பு, சமுர்த்தி மாவட்டக் குழு மற்றும் சமுர்த்தி தேசிய சம்மேளனம் போன்ற வகையில் அனைத்து அமைப்புக்களின் கட்டமைப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

சமுர்த்தி சட்டத்திற்கமைய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சகல அபிவிருத்தி பணிகளிலும் மக்கள் தொடர்புபடுகின்ற கீழ் மட்ட அலகான சமுதாய அடிப்படை அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு மக்களின் முழுப்பங்களிப்புடன் நிறைவேற்றப்படவேண்டியதாகவுள்ளது. சமுதாய அடிப்படை அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதும் அதனோடு இணைந்ததாக பிரதேச அமைப்புக்கள் மற்றும் மாவட்டக் குழுக்களையும் அமைத்து நடாத்திச் செல்லவேண்டும். தற்போது 30211 சமுதாய அடிப்படை அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பக்களின் பணிகளை பிரதேச மட்டத்தில் கண்கானிப்புச் செய்தல், பரீட்சித்தல், மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற பணிகளின் பொருட்டு சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்களின் பங்கேற்புடன் சமுர்த்தி பிரதேச அமைப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சமுர்த்தி பிரதேச அமைப்புக்கள் 331 ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திற்குள் செயற்படும் சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களினதும் தலைவர்கள் மற்றும் செயலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தி சமுர்த்தி மாவட்டக் குழு தாபிக்கப்படுகின்றது. இந்த குழுவானது ஒவ்வொரு மூன்று மாதத்திற்கொருமுறையும் கூட்டங்களை கூட்டி நடாத்துதல் வேண்டும்.

**சமுர்த்தி தேசிய சம்மேளனம்** - சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களினதும் தொடர் பிரதிநிதிகளைக் கொண்டவாறு தேசிய சம்மேளனம் அமைக்கப்படுகின்றது அமைச்சர் தேசிய சம்மேளனத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைப் பொறுப்பினை வகித்தல் வேண்டும்.

தேசிய மட்டத்தில் சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்யும் தேசிய கொள்கையினை திட்டமிடும் பொருட்டு தேவையான பிரேரணைகள் மற்றும் கருத்துக்களை மீளாய்வு செய்தல், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு தலைமைத்துவத்தினை வழங்குவது தேசிய சம்மேளணத்தின் குறிக்கோளாகும்.

இச்சகல அமைப்புக்களையும் ஆரம்பித்து இற்றைப்படுத்துதல், பராமரித்துச் செல்லல், மற்றும் மேலாண்மை செய்தல் உட்பட இவ்வமைப்புக்களின் சகல நடவடிக்கைகளையும் கண்காணிப்பது சமுதாய அடிப்படை அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**நோக்கு:-** ''வலுவூட்டப்பட்ட சௌபாக்கியமிக்க ஒரு சமூகம்''

**பணி:-** மனித, மற்றும் பௌதீக வளங்களை பலப்படுத்தும் தனிநபர், குடும்பம் மற்றும் மக்களிடத்தேயே சமூக மற்றும் பொருளாதார நிலையினைக்கட்டியெழுப்ப அறிவு, மனப்பாக்கு மற்றும் திறமைகளையும் விருத்தி செய்து சமுதாய அடிப்படை அமைப்பு, பிரதேச அமைப்பு, மாவட்டக்குழுக்கள் ஊடாக மக்களை வலவூட்டுதல்.

01. **நோக்கம் :-**

1. தனது அதிகாரப் பிரதேசத்தில் வாழும் சமுர்த்திப் பயனாளிகளின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்
2. சமுதாய அடிப்படை அமைப்பு வலையமைப்புடன் தொடர்புள்ள சமுர்த்தி பயனாளிகளின் அறிவு, ஆற்றல், மனப்பாங்கினை அபிவிருத்தி செய்தல்.
3. அரசாங்கத்தினதும் திணைக்களத்தினதம் கொள்கைகளுக்கு ஏற்ற பிரகாரம் அறிமுகப்படுத்தப்படுகின்ற சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பொருட்டு மக்கள் பங்கேற்பினை மேம்படுத்துதல்.
4. சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற நலன்புரி வேலைத்திட்டங்களின் பொருட்டு சமுர்த்தி பயனாளிகளை தெரிவு செய்து கொள்ளல்.

02. **சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் பணிப்பொறுப்புக்கள்:-**

- சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களை கட்டியெழுப்புதல், மற்றும் பலப்படுத்தும் பொருட்டு மக்களை வலுவூட்ட சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவு செயற்படுத்துகின்ற பணிகள் கீழ் குறிப்பிடப்படுகின்றவைகளாகும்.
- சிறுகுழுக்களில் இணைந்து கொள்வதற்கு தங்களது அங்கத்துவர்களை ஊக்கப்படுத்துவதும் அவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குவதும்.
- அங்கத்தவர்களின் சேமிப்புப் பழக்கத்தினை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஊக்குவிப்பதும், வாழ்வாதார செயற்பாடுகளை மேம்படுத்துவது மற்றும் உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அங்கத்தவர்களின் தொழில்சார் திறமைகளையும் அறிவினையும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தேவைப்படக்கூடிய வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அங்கத்தவர்களின் பங்கேற்புடன் சிரமதானப் பணிகளை ஒழுங்கு செய்தல், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சமுர்த்தி பயனாளிகளினதும் அவர்களது குடும்பங்களினதும் கல்வி மட்டத்தினையும் திறமையினையும் கட்டியெழுப்புதல்.
- சமுர்த்தி பயனாளிகளின் தன்னம்பிக்கை, சமூகம் தொடர்பிலான கூட்டுப் பொறுப்புக்கள், சிறந்த பண்புகள் மற்றும் குணாதிசயங்களை விருத்தி செய்தல்.

**சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள்.**

- ❖ சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பினை ஆரம்பித்தல்.
- ❖ சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பினை பதிவு செய்தல்.
- ❖ சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்புக்களின் பதிவினை புதுப்பித்தல்.
- ❖ சமுர்த்தி தேசிய சம்மேளனத்தினை வருடாந்தம் நடாத்துதல்
- ❖ மக்கள் தலைவர்களை விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

❖ சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்புக்களின் கணக்கீட்டு நடவடிக்கைகளுக்குறியவாறு அச்சிட்ட எழுது கருவிகளை வழங்குதல்.

❖ பொருளாதார அமைப்புக்களை ஆரம்பித்தல்.

❖ வர்த்தக அமைப்புக்களை ஆரம்பித்தல்.

❖ சமுர்த்தி கொடி வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்.

❖ அமைப்பின் நிதியங்களை விருத்தி செய்வதற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல்.

❖ சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விளையாட்டுத்திறமைகளைக் கொண்ட சிறார்களுக்கு விளையாட்டு அபிவிருத்தி உதவிகளை வழங்குதல்.

❖ திணைக்களத்தில் திறமையினைக் கொண்டுள்ள பணியாளர்களை அரசாங்க சேவைகள் விளையாட்டுப் போட்டிகள் அத்துடன் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளின் பொருட்டு கலந்து கொள்ளச் செய்தல்.

➢ சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் எண்ணிக்கை - 30211

➢ சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் எண்ணிக்கை - 331

➢ காலாண்டுக்கொருமுறை நடாத்தப்படும் மாவட்டக் குழுக்களின் எண்ணிக்கை - 100

➢ சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்களது எண்ணிக்கை - 20 மில்லியன்

➢ சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்புக்களில் உள்ள நிதியம் - ரூ. மில். 1200

➢ 2017 கொடி வருமானம் - ரூ. மில் 185.5

➢ 2018 கொடி வருமானம் - ரூ. மில் 191.3

➢ கொடி வருமானத்தினால் செயற்படுத்தப்படும் பல்வேறு கருத்திட்டங்களுக்கான செலவிடப்பட்ட செலவு - ரூ. மில் 56.54

புள்ளிவிபரக் குறிப்பு 9.1

| **தொ. இல** | **வேலைத்திட்டம்** | **செலவு (ரூபா)** |
|---|---|---|
| 01 | சமூக ரீதியான கணக்காய்வுக்குழு ஒன்றினை உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு பயிற்றுனர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் | 1,705,890.50 |
| 02 | பிரதேச அமைப்புக்களின் பொருளாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுக்கான கணக்கீட்டுப் பயிற்சிகள் | 1,113,087.00 |
| 03 | பிரதேச அமைப்புக்களின் உள்ளக கணக்காய்வாளர்களுக்கான கணக்காய்வுப் பயிற்சி | 451,858.90 |
| 04 | மாவட்டக் குழுக் கூட்டத்தினை நடாத்துதல் | 1,188,006.00 |
| 05 | மக்கள் பயிற்றுனர்கள் மூலம் சமுர்த்தி பயனாளிகளை பயிற்றுவித்தல் | 11,905,715.00 |

| | | |
|---|---|---|
| 06 | விளையாட்டு அபிவிருத்தி மற்றும் உடற்பயிற்சி செயற்பாட்டு வேலைத்திட்டம் | 9,100,899.00 |
| | **மொத்தச் செலவு** | **25,465,456.40** |

### 9.3. பயிற்சி வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்.

2013ஆம் ஆண்டின் 01 இலக்க சமுர்த்தி சட்டத்தின் 04வது பிரிவின் (எ) மற்றும் (ஏ) இப் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு 05 வது பிரிவின் (ங) இங்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 06வது பிரிவின் (ஈ) மற்றும் (ஔ) இங்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செயற்படுத்தவதற்கு ஏற்றதாக செயற்படும் பொருட்டு மக்களை விளக்கமளிப்பது அத்தியாவசியமானதாகும் அதன் பிரகாரம் மக்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மக்கள் இடையீட்டாளர்களை புதிய சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்புக்களின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் முறைப்படி மேற்கொள்ளும் பொருட்டு சமுர்த்தி பயனாளிகளை விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### 9.3.1. மக்கள் பயிற்றுனர்களை (மக்கள் இடையீட்டாளர்களை) தெரிவு செய்தல்.

பிரதேச (தலைமையக) சமுர்த்தி முகாமையாளர்களால் சமுர்த்தி பிரதேச அமைப்பின் கௌரவ தலைவரின் சிபாரிசு மற்றும் வலயப் பொறுப்பு சமுர்த்தி முகாமையாளர் விளக்கத்தின் பிரகாரம் ஒரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்து சமுர்த்தி பயனாளி மக்கள் பிரதிநிதிகள் இருவர் மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்பின் பொருளாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளராக கடமை புரியும் உத்தியோகத்தர்கள் இருவரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சமுர்த்தி பயனாளி மக்கள் பிரதிநிதிகளின் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் தலைப்பின் கீழ் ஆரம்பப் பயிற்சியொன்று வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

I. சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டம்.
II. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பின் பொருட்டு அடிப்படை கணக்கீட்டு முறை
III. சமூக கணக்காய்வு.

மக்கள் பயிற்றுனர்களாக கடமையாற்றும் மக்கள் பிரதிநிதிகளினால் மக்கள் தலைவர்களுக்கு வழங்கப்படுகின்ற கீழ் குறிப்பிடப்படும் பயிற்சிகள் பிரதேச செயலாளரால் நியமிக்கப்படுகின்ற கீழ் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களைக் கொண்ட ''மக்கள் பயிற்சி கண்காணிப்புக் குழு''வின் மூலம் சிறப்பாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளபடுகின்றது.

மக்கள் பயிற்சிக் கண்காணிப்புக் குழுவினால் மக்கள் பயிற்சியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு பயிற்சியும் சிறந்ததாக கண்காணிப்பு செய்ததன் பின்னர் மக்கள் இடையீட்டாளன் ஒருவராக நியமிக்கக் கூடிய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து பெயரிடப்படுகின்றது.





## 9.4. மாவட்டக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் பிரதேச அமைப்புக்களின் வேலைத்திட்டங்களை கண்காணித்தல், ஒழுங்குபடுத்தல், மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல், மாவட்டத்திற்குள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்குறிய திட்டங்களை சமர்ப்பித்தல், வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

இடம் - மாவட்டச் செயலகம்.

பங்கேற்பு - பிரதேச அமைப்புக்களின் தலைவர்கள், செயலாளர்கள், சமுதாய அடிப்படை வங்கிச்சங்க சிரேஷ்ட முகாமையாளர்கள், மாவட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மூன்று பேர்.

ஒவ்வொரு வருடமும் மூன்று மாதத்திற்கொருமுறை கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன் வருடத்தில் நான்கு கூட்டங்கள் நடைபெறும்.

மாவட்டத்தின் சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தும் பொருட்டான கருத்துக்களையும் வெளிப்பாடுகளை கவனத்தின் கொண்டு அத்துடன் அவற்றினை திணைக்களத்ததிற்கு சமர்ப்பித்தல், மாவட்ட மட்டத்தில் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினைப் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.





## 9.5. சமுர்த்தி கொடி வேலைத்திட்டம்.

2013 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 10 (ஔ) பந்தியின் பிரகாரம்.

I. சமுர்த்தி பயனாளிகளின் தன்னம்பிக்கை, சமூகம் தொடர்பில் உள்ள கூட்டுப் பொறுப்பு, சிறந்த குணங்கள், மற்றும் நற்பண்புகளை மேம்படுத்துவது சமுதாய அடிப்படை அமைப்பின் ஒரு குறிக்கோளாகும் என்பதுடன் சட்டத்தின் 16 (உ) பந்தியின் பிரகாரம்.

II. சமுர்த்தி பயனாளிகளின் மனித ஆளுமை, கூட்டுச் செயற்பாடுகள், சமய மற்றும் ஆத்மீக ரீதியான பண்புகளை மேம்படுத்துவது சமுரத்தி பிரதேச அமைப்புக்களின் ஒரு குறிக்கோளாகும்.

இக்குறிகோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ஒரு வேலைத்திட்டம் ஒன்றாக 2018ஆம் ஆண்டின் மே 31ஆம் திகதியில் கொண்டாடப்படுகின்ற சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்துடன் இணைந்ததாக சமுர்த்தி கொடி வேலைத்திட்டம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்கள் ஊடாக செயற்படுத்தப்பட்டது. தனது பிரிவுக்குச் சொந்தமான சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாலர் உட்பட நிறைவேற்றுக் குழுவினர் உட்பட அங்கத்தவர்களுடன் ஒன்றினைந்து சமுர்த்திப் பயனாளிகள் ஊடாக கொடி, மற்றும் ஸ்ரிக்கர்களை அணிவிக்கச் செய்து புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையிலிருந்து விலகியிருக்குமாறு ஒரு செய்தியை மக்களுக்கு வழங்கி நிதியத்தினை சேகரிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

சமுர்த்திப் பயனாளிகளினதும், குறைந்த வருமானம் பெறுவோரினதும் சமூக நலன்புரி நடவடிக்கைகளின் பொருட்டு இந்த நிதியம் பயன்படுத்தப்படுகின்றது.

I. கொடியினை அச்சிடல்.
II. மாவட்ட மட்டத்தில் விநியோகித்தல்.
III. பிரதேச மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பு மட்டத்தில் விநியோகித்தல்.
IV. புகைத்தல் மற்றும் போதைப்பொருளிலிருந்து மக்களை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு விழிப்பூட்டல்களை மேற்கொண்டு கொடியினை அணிவிக்கச் செய்வதன் ஊடாக நியத்தினை சேகரித்தல்.

சகல மக்களின் பொருட்டு சகல மாவட்டச் செயலகங்களில் செயற்படுத்தப்படுகின்றது. புகைத்தல், எதிர்ப்பு தினத்தோடு இணைந்ததாக போதை தடுப்பு வேலைத்திட்டங்களையும் நடாத்தவது மற்றும் கொடி வேலைத்திட்டத்தினூடாக சேகரிக்கப்பட்ட நிதியங்களால் பயனாளிகளினதும் அவர்களினதும் குடும்பங்களினதும் பிள்ளைகளினதும் நலன்புரியின் பொருட்டு ஈடுபடுத்துதல்.








**பெற்றுக்கொள்ளப்பட்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்**

| இலக்கம் | பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார கருத்திட்டம். | வேலைத்திட்டங்களுடன் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வீடமைப்பு நிர்மானம் | 149 |
| 2 | வீடுகளைத் திருத்தஞ் செய்தல் | 365 |
| 3 | பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் | 2576 |
| 4 | பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், உபகரணங்களை வழங்குதல். | 69679 |
| 5 | தும்புரவேற்பாட்டு வேலைத்திட்டங்கள் | 716 |
| 6 | சுகாதாரமும் போசனையும் | 621 |
| 7 | மகளிர் மற்றும் முதியோர் தின வேலைத்திட்டங்கள் | 569 |
| 8 | போதை தடுப்பு வேலைத்திட்டங்கள் | 940 |
| 9 | மாற்றுத்திறனாளிகளின் நலன்புரி நடவடிக்கைகள் | 356 |
| 10 | கெக்குலு சிறுவர் கழக வேலைத்திட்டங்கள். | 26973 |

### 9.6. விளையாட்டு அபிவிருத்தி மற்றும் தேசாப்பியாச செயற்பாட்டு வேலைத்திட்டம்

I. சமுர்த்திப் பயனாளி சிறுவர்களின் விளையாட்டுத் திறமையினை இனங்கண்டு அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு அழைத்து வரும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

II. விளையாட்டில் திறமையுள்ள பயனாளிச்சிறார்களின் விளையாட்டு ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தியின் பொருட்டு விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.

III. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான (தலைமைக்காரியாலயம் உட்பட நாடு பூராகவும் பரந்திருகின்ற சகல பணியாளர்களுக்கும்/ அரசாங்க செவைகள்/ மாகாண/ மாவட்ட/ தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளின் பொருட்டு ஈடுபடச் செய்வதும் மாவட்ட மட்டத்தில் விளையாட்டுச் சங்கங்களை ஆரம்பிப்பதும்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் மற்றும் சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் பிள்ளைகளின் விளையாட்டுத் திறமைகள் விருத்தி செய்யப்படுகின்றது.









## 10. பொருளாதார, வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி பிரிவின் செயலாற்றுகை

### 10.1. அறிமுகம்:



2030ஆம் ஆண்டாகும் போது வறுமை நிலையினை ஒழிக்கும் அரசாங்கத்தின் கொள்கையினை செயற்படுத்தி 2018ஆம் ஆண்டினை வறுமையினை ஒழிக்கும் இரண்டாம் ஆண்டாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் அதனோடு இணைந்ததாக சகல அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோரை வலுவூட்டுவதனை இலக்காகக் கொண்டு செயற்படுத்தியது.

இதன் கீழ் பொருளாதார வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டமும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோரை வலுவூட்டுவதற்கு முன்னுரிமைப் படுத்திகொண்டு வேலைத்திட்டங்களை திட்டமிட்டதுடன் திணைக்களத்தினால் இப்பரிவிக்கு வழங்கிய வலுவூட்டப்பட வேண்டிய 30273குடும்பங்கள் என்ற இலக்கினை பூர்த்தி செய்து கொள்வதற்கு புதிய மற்றும் விசேடமான 06 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன இதன் பொருட்டு ரூ.மில்லியன் 998.38 இற்கான நிதி ஒதுக்கீட்டளவினை வாழ்வாதார அபிவிருத்தியின் பொருட்டு ஒதுக்கியது.



அதன் பிரகாரம் சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதனை இலக்காகக் கொண்டு 25,241 கருத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பொருட்டு ரூபா மில்லியன் 630.17 கீழ் குறிப்பிடப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா மில்லியன் 383.28 ஆன பயனாளிப் பங்களிப்பினையுனம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.1**

**அரசாங்கத்தினதும் பயனாளிகளினதும் பங்களிப்புடன் பூர்த்தி செய்யப்பட்ட வேலைத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| வேலைத்திட்டம் | ஒதுக்கிய நிதி ஒதக்கீட்டளவு (ரூ.மில்) | பூர்த்தியான கருத்திட்டங்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | பயனாளிகளின் பங்களிப்பு (ரூ.மில்) | பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. “சமுர்த்தி அருணலு” சிறிய மறறும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி வேலைத்திட்டம் | 438.93 | 12,319 | 401.41 | 261.32 | 12,319 |
| 2. தொழில் கல்வி வலுவூட்டலின் ஊடாக தொழில்களில் ஈடுபடச் செய்யும் வேலைத்திட்டம் | 19.00 | | | | |
| 3. வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம் | 110.00 | 9,145 | 56.58 | 27.96 | 9,145 |
| 4. சேதனப் பசளை விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டம் | 75.00 | | | | |
| 5. சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம வேலைத்திட்டம் | 200.00 | 1,832 | 77.15 | 46.06 | 1,832 |
| 6. விசேட கருத்திட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் | 30.07 | 462 | 13.69 | 9.62 | 462 |
| 7. வாழ்வாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம். | 42.00 | 3 | 4.44 | 0 | 576 |
| **நிர்வாகச் செலவு** | **4.00** | | **0.28** | | |
| **மொத்தம் (திறைசேரி நிதி ஒதுக்கீடு)** | **919.00** | **23,761** | **553.55** | **344.96** | **24,334** |
| 8. சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம | 36.93 | 1,193 | 34.57 | 17.29 | 1,193 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்தி வேலைத்திட்டம் (குறைவேலை) | | | | | |
| 9. சமுர்த்தி மாதிரிக் கிராமங்களில் வீடமைப்பு (குறைவேலை) அபிவிருத்திவேலைத்திட்டம் | 42.45 | 287 | 42.05 | 21.03 | 287 |
| **மொத்தம் (சமூக பாதுகாப்பு மற்றும் பொறுப்பு நிதியம்)** | **79.38** | **1,480** | **76.62** | **38.32** | **1,480** |
| **மொத்தம்** | **998.38** | **25,241** | **630.17** | **383.28** | **25,241** |

**வரைபடக் குறிப்பு - 10.1**

**செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் நிதி ஒதுக்கீடு பிரிந்து சென்ற விதம்**






## 10.2. சமுர்த்தி அருணலு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கருத்திட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம்



இந்த வேலைத்திட்டமானது சமுர்த்திப் பயனாளிகளை இலக்காகக் கொண்டு 25 மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவும் உட்படுகின்ற பிரகாரம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இங்கு வறுமையினை ஒழிக்கும் அரச கொள்கையுடன் இணைந்ததாக சமுர்த்தி வேலைத்திட்டத்தில் கூடிய விருமானம் பெறும் குழுவினருக்குள் உள்ளவர்களை சரியாக வலுவூட்டக் கூடிய சமுர்த்தி பயனாளிகளை இலக்காகக் கொண்டுள்ளதுடன் அதன் பொருட்டு ரூ. மில்லியன் 438.93 இற்கான நிதி ஒதக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீட்டினை ஒதுக்கும் போது மாவட்ட மட்டத்திலுள்ள சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்கள் எண்ணிக்கை இலக்காகக் கொள்ளப்பட்டது. அத்துடன் வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கிய



வரையறுக்கப்பட்ட அளவுக்கு ஒத்ததாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வலுவூட்டக்கூடிய நிலையான இலக்கு ஒன்றினை வழங்கிகுடும்ப வருமானத்தினை உயர்த்த மட்டத்திற்கு எடுத்துச்சொல்லும் பொருட்டு தேவையான உபகஅ பகுப்பாய்வை (SWOT Analysis) தயாரிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கருத்திட்டத்தின் பொருட்டு வழங்கிய உயர்ந்தபட்ச தொகையானது ரூபா 45000/= ஆகும் என்பதுடன் கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவின் 40%த்தின் பொருட்டு பயனாளிப் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம் கீழுள்ளவாறாகும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.2**

**சமுர்த்தி அருணலு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கருத்திட்டங்களின் முன்னேற்றம்.**

| கருத்திட்டத்தின் வகை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திணைக்கள செலவு (ரூ.மில்) | பயனாளிப் பங்களிப்பு (ரூ.மில்) | பயனாளிக் குடும்ப எண்ணிக்கை | வலுவூட்டப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| விவசாய அபிவிருத்தி கருத்திட்டம் | 2,311 | 69.28 | 27.71 | 2,311 | 2,311 |
| கால்நடை வள அபிவிருத்தி கருத்திட்டம் | 1,242 | 48.89 | 19.59 | 1,242 | 1,242 |
| மீன்பிடி அபிவிருத்தி கருத்திட்டம் | 216 | 8.04 | 3.22 | 216 | 216 |
| கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி கருத்திட்டம் | 8,183 | 262.76 | 105.10 | 8,183 | 8,183 |
| தொழிலை இலக்காக் கொண்ட தொழில் பயிற்சி கருத்திட்டம் | 367 | 10.53 | 4.21 | 367 | 0 |
| நிர்வாகச் செலவு | | 1.91 | | | |
| **மொத்தம்** | **12,319** | **401.41** | **159.83** | **12,319** | **11,952** |



அதன் பிரகாரம் மொத்த இலக்கினைத் தாண்டியதாக சமுர்த்தி பயனாளிக்குடும்பங்கள் 12,319 இனது வாழ்வாதாரங்களின் பொருட்டு நிதி மாணியங்கள் வழங்கப்பட்டதுடன் இச்சகல குடும்பங்களும் சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கூடிய வருமானம் பெறும் குழுவிற்குச் சொந்தமான குடும்பங்களாக இருப்பது முக்கியமானதாகும். இந்த வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூ.மில் 438.93 ஒதுக்கப்பட்டாலும் கட்டுநிதி கிடைக்காத காரணத்தினால் செலவிடப்பட்டது ரூ.மில் 401.41 மட்டுமேயாகும். கருத்திட்டத்தின் பொருட்டான பயனாளிப் பங்களிப்பானது ரூ.மில் 159.83 ஆக இருந்தமையும் இங்கு விசேட அம்சமாகும் என்பதனையும் சுட்டிக் காட்டப்படல் வேண்டும்.

## 10.3. சமுர்த்தி மாதிரி வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம்.

''ஒன்றினைந்து முன்னேறுவோம் - தோட்டத்தினையும் களஞ்சியத்தையும் நிரப்புவோம்'' என்ற தலைப்பின் கீழ் ஜனாதிபதி செயலகத்தின் மூலம் நெறிப்படுத்தப்படுகின்ற தேசிய உணவு உற்பத்தி முயற்சியுடன் இணைந்ததாக சமுர்த்தி திணைக்களத்தினால் சமுர்த்தி மாதிரி வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.



2018ஆம் ஆண்டில் சமுர்த்தி திணைக்களத்தினால் வலுவூட்டப்படுவதற்கு இலக்கிடப்பட்ட 125,000 குடும்பங்களினது வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு விழிப்பூட்டலின் ஊடாக பயனாளிகளை ஈடுபடச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் குடும்பத்தின் போசனையினை உயர்த்துதல், உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், குடும்பத்தின் வாழ்கைச் செலவைக் குறைத்தல், மேலதிக வருமான வழியொன்றினை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் நச்சுப் பொருளற்ற மரக்கறிகளின் பயன்பாட்டினை பழக்கப்படுத்துவது இதன் அடிப்படைக் குறிக்கோளாக இருந்தது.



இந்த வேலைத்திட்டத்தின் மேலும் ஒரு பணியொன்றானது சமுதாய அடிப்படை வங்கி, மற்றும் வங்கிச் சங்க வளவு, மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வளவு உட்பட உத்தியோகத்தர்களின் வீட்டுத்தோட்ட அபிவிருத்தியின்

பொருட்டு விதைகள் அடங்கிய பொதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டமையாகும்.

அதன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படுவது செயற்படுத்தப்படுகின்ற வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கையாகும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.3**

**செயற்படுத்தப்படும் வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை**

| பயனாளி வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கை | உத்தியோகத்தர்களின் வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கை | சமுதாய அடிப்படை வங்கிகளின் எண்ணிக்கை | சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம்/ பிரதேச செயலகங்கள். |
|---|---|---|---|
| 62,353 | 11,480 | 598 | 230 |

அதன் பிரகாரம் இந்த வேலைத்திட்டத்தினை மிக வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்வதற்கு பிரிவு மட்டத்தில் சிறந்த முன் மாதிரியான விட்டுத் தோட்டம் / பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சிறந்த ஊக்கமுள்ள விவசாயிகள் மூவரக்கு பரிசுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டது.

அதன் பிரகாரம் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றமானது கீழுள்ள பிரகாரமாகும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.4**

**வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| பிரிவு மட்டத்தில் சிறந்த வீட்டுத் தோட்டம் (A) | | பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சிறந்த வீட்டுத் தோட்டம் (B) | | பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சிறந்த இளம் விவசாயிகள்(C) | |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | தொகை (ரூ) | எண்ணிக்கை | தொகை (ரூ) | எண்ணிக்கை | தொகை (ரூ) |
| 8,213 | 37,770,150 | 624 | 8,308,614 | 308 | 4,419,611 |
| **வீட்டுத் தோட்ட வேலைத்திட்டத்தின் மொத்த செலவுகள்.** | | | | | |
| மேலே A,B,C என்பவற்றின் பொருட்டு செலவான மொத்தத் தொகை (ரூபா) | | | | 50,498,375 | |
| விழிப்பூட்டல், மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் பொருட்டான செலவு (ரூபா) | | | | 4,405,550 | |
| உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக வளவுகளுக்குள் விதைகளடங்கிய பக்கெட்களின் பொருட்டு செலவிட்ட தொகை (ரூபா) | | | | 1,512,208 | |
| வேலைத்திட்டத்தின் பொருட்டு செலவிட்ட மொத்த தொகை (ரூபா) | | | | 56,416,133 | |

## 10.4. சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம வேலைத்திட்டம்



விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவைகளை வழங்குதல் ஆகிய ஏதேனும் ஒரு உற்பத்தி நடவடிக்கையொன்றினை மிகச் சிறப்பாக விருத்தி செய்து சமுர்த்தி வேலைத்திட்டத்தின் அடையாளமான “சமுர்த்தி உற்பத்திகளை” உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகள் வரை எடுத்தக் சொல்லும் ஆரம்பப் பணியொன்றாக இந்த வேலைத்திட்டத்தினூடாக செயற்படுத்துவது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அடிப்படைக் குறிக்கோளாக இருந்தது.

அதன் பிரகாரம் 2018ஆம் ஆண்டிலும் ஒவ்வொரு மாவட்டமும் பிரதிநிதித்துவப் படுகின்ற பிரகாரம் சமுர்த்தி மாதிரிக் கிராமங்கள் 49 இனங்காணப்பட்டுள்ளதுடன் அதில் 46 கிராமங்களில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

ஒரு கிராமத்திற்கு ரூ.மில் 4.00 வீதம் என்ற வகையில் ரூ.மில் 153.34இற்கான தொகை அங்கீகரிக்கப்பட்டாலும் திறைசேரியிலிருந்து நிதி கிடைக்காத காரணத்தினால் கருத்திட்டல்களை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது 27 கிராமங்களில் மாத்திரமேயாகும் இங்கும் ஒரு பயனாளிட்கு திணைக்களத்தின் உயர்ந்த பட்ச பங்களிப்பானது ரூபா 45000/= ஆகும் என்பதுடன் கருத்திட்டம் ஒன்றின் மதிப்பீட்டுச் செலவிலிருந்து 40%த்தினை பயனாளியாலும் எஞ்சிய 60%த்தினை திணைக்களத்தினாலும் மேற்கொள்ளப்பட்டது.

பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் செலவிட்ட தொகைக்கேற்ப உற்பத்திகளை கீழுள்ள பிரகாரம் வகைப்படுத்த முடியும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.5**

**உற்பத்திகளை வகைப்படுத்துதல்.**

| தொ. இல | கிராமத்தின் பெயர் | உற்பத்தியின் கருத்திட்டம் | கருத்திட்ட / பயனாளிகள் எண்ணிக்கை | செலவிட்ட தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| 1 | தெலவல தெற்கு | சீமந்து கல் உற்பத்தி | 40 | 0.70 |
| 2 | ஹிங்குரலகம | மிளகு/ வெற்றிலைபயிர்ச் செய்கை | 52 | 1.69 |
| 3 | துன்காலப்பிட்டிய | அலங்கார மலர்ச் செய்கை | 100 | 2.88 |
| 4 | குஞ்சாவத்த | அலங்கார புல் பயிர்ச் செய்கை | 35 | 2.59 |
| 5 | ரணபனாதெனிய | மலர்ச் செய்கை | 64 | 4.00 |
| 6 | கொட்டவில தெற்கு | களிமண் சார் உற்பத்தி | 96 | 3.30 |
| 7 | பின்தென்ன | கறுவாப் பயிர்ச் செய்கை | 38 | 4.39 |
| 8 | பட்டிவெல | கறவைப் பசு வளர்ப்பு | 61 | 3.72 |
| 9 | திம்புல்கும்பர | வெட்டுமலர்கள் / மரக்கறிப்பயிர்ச் செய்கை | 66 | 2.62 |
| 10 | அன்நறுவை | காரவயுடை தைத்தல் மற்றும் வாகனம் நிறம்தீட்டல் | 114 | 3.99 |
| 11 | அல்லலந்தை | கித்துள் சார் உற்பத்தி | 34 | 1.36 |
| 12 | குடுமஹுவெல | வெட்டுமலர்ப் பயிர்ச் செய்கை | 66 | 2.89 |
| 13 | ஹட்டங்கல | மிளகுப் பயிர்ச் செய்கை | 65 | 1.46 |
| 14 | மலேவ | கொய்யாப் பயிர்ச் செய்கை | 56 | 2.25 |
| 15 | மஹனெலுவேவ | ஒக்கிட் பயிர்ச் செய்கை | 88 | 3.84 |
| 16 | கிரிஓய | பழப்பயிர்ச் செய்கை | 14 | 0.22 |
| 17 | கோலாவில் | பயிர்ச் செய்கையும் கோழி வளர்ப்பும் | 46 | 1.55 |
| 18 | செல்வா நகர் கிழக்கு | நெசவுக்கைத்தொழில் உற்பத்தி | 89 | 3.84 |
| 19 | மலயார்கட்டு | மாடு மற்றும் ஆடு வளர்ப்பு | 89 | 4.00 |
| 20 | ஈஸ்வரிபுரம் | பால்/ பற்பொடி மற்றும் பைட் உற்பத்தி | 100 | 4.00 |
| 21 | ஒஷந்தபிட்டிய | சிறியளவிலான கைத்தொழில் | 97 | 4.00 |
| 22 | பொக்கனை | கால் துடைப்பான் உற்பத்தி | 34 | 2.46 |
| 23 | மதபோடை | கதவுகளுக்கு தொழிலக்கு உற்பத்தி | 42 | 1.77 |
| 24 | தேரன்கண்டல் | கால்நடை வளர்ப்பு செங்கள் உற்பத்தி | 89 | 3.92 |
| 25 | சபுமல்தென்ன | விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு | 88 | 3.43 |
| 26 | மலயாளபுரம் | தேனி வளர்ப்பு | 86 | 3.96 |

|  |  |  |  |  |
|---|---|---|---|---|
| 27 | கிருஷ்ணபுரம் | உணவு உற்பத்தி | 83 | 3.95 |
|  | மொத்தம் |  | **1832** | **78.78** |



புதிய அனுபவங்களை வழங்கி செயற்படுத்தப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்டம் ஒன்றிலிருந்து 02 கிராமங்கள் இனங்காணப்பட்டதுடன் நடைமுறையிலுள்ள உற்பத்திச் செயற்பாடுகளை சிறப்பாக விருத்தி செய்து கொண்டு சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் உட்பட உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சகல மக்களினதும் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இங்கு விசேடமாக சுட்டிக்காட்டப்பட வேண்டியது சமுர்த்திப் பயனாளிகளை வலுவூட்டுவதனை இலக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டாலும் உற்பத்தி நடவடிக்கையில் முழுக் கிராமமுமே ஈடுபடும் போது வழங்கப்படும் நன்மைகள் முழுக்கிராமமுமே ஏற்புடையதாக்கிக் கொள்கின்றது.

கிழே குறிப்பிடப்படுவது இந்த 27 கிராமங்களிலும் செயற்படுத்தப்பட்ட உற்பத்திகள் தொடர்பான பௌதீக மற்றும் நிதி நிலமைகளாகும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.6**

**சமுர்த்தி உற்பத்தி மாதிரிக்கிராம வேலைத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| கருத்திட்ட வகை | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | திணைக்களத்தின் செலவு (ரூ.மில்) | பயனாளிப் பங்களிப்பு (ரூ. மில்) | பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை | வலுவூட்டப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| விவசாய அபிவிருத்தி கருத்திட்டம் | 769 | 34.22 | 13.88 | 769 | 769 |
| கால்நடை வள அபிவிருத்தி கருத்திட்டம் | 244 | 11.27 | 4.51 | 244 | 244 |
| கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி கருத்திட்டம் | 819 | 33.29 | 13.32 | 819 | 819 |
| **மொத்தம்** | 1832 | 78.78 | 31.71 | 1832 | 1832 |

## 10.5 விசேட கருத்திட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம்



மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதக்கீடுகள் போதுமானதாக இல்லாதவிடத்தும் அம்மாவட்டங்களின் அத்தியாவசிய வாழ்வாதாரக் கருத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு வருடாந்தம் ஓரளவு நிதி ஒதுக்கட்டளவினை இப்பிரிவின் மூலம் வைத்துக் கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இந்த வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூபா மில்லியன் 30.07 இற்கான தொகை ஒதுக்கப்பட்டது.

இங்கு கூடிய விலையுடன் மிகக் சிறந்த உட்நாட்டு வெளிநாட்டு சந்தையினை உறுதிப் படுத்திக் கொள்ளவும் வரட்சிக் காலத்தில் பயிர்ச் செய்கையின் பொருட்டு பயனாளிகளை ஈடுபடச் செய்வதனை நோக்காகக் கொண்டு அந்தந்த மாவட்டங்களில் சிறந்த திறன்களையுடைய பயிர்ச் செய்கைகளின் பொருட்டு பொது வசதிகளை மேம்படுத்துவதற்கும் மாவட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.7**

**விசேட கருத்திட்ட வேலைத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்.**

| கருத்திட்ட வகை | கருத்திட்ட ங்களின் எண்ணிக் கை | திணைக்களத்தின் செலவு (ரூ.மில்) | பயனாளிப் பங்களிப்பு (ரூ. மில்) | பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பன்சார்ந்த உற்பத்திகள் | 1 | 0.06 | 0.04 | 1 |
| அலங்கார மீன் வளர்ப்பு | 31 | 3.25 | 1.24 | 31 |
| கால் நடை வளர்ப்பு கருத்திட்டம் | 33 | 0.75 | 0.51 | 33 |
| தும்பு சார்ந்த உற்பத்திகள் | 72 | 1.25 | 1.36 | 72 |
| வெட்டு மலர்ப் பயிர்ச செய்கை | 52 | 2.58 | 2.91 | 52 |
| மிளகுப் பயிர்ச் செய்கை | 114 | 0.15 | 0.10 | 114 |
| தேயிலைப் பயிர்ச் செய்கை | 1 | 0.11 | | |
| இனிப்புப் பாண்டம் உற்பத்தி | 15 | 0.28 | 0.19 | 15 |
| கொடித் தோடைப் பயிர்ச் செய்கை | 10 | 0.45 | 0.27 | 10 |
| சன சமூக நிலையம் | 1 | 1.00 | 1.27 | 232 |
| உருளைக் கிழங்கு, வெங்காயம், மற்றும் செத்தல் மிளகாய் பயிர்ச் செய்கை | 129 | 3.09 | 1.62 | 129 |
| நெல் ஆலை | 1 | 0.17 | 0.11 | 125 |
| ஆடை தயாரிப்பு | 1 | 0.04 | | 1 |
| வீதியொன்றின் நிர்மானம் | 1 | 0.51 | | 500 |
| **மொத்தம்** | **462** | **13.69** | **9.62** | **1012** |

## 10.6. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம்

2018இன் பொருளாதார வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வாழ்வாதார அபிவிருத்திக்குத் துணைபுரியும் அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் 05 இன் பொருட்டு மாத்திரம் நிதி ஒதுக்கீட்டினை வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இங்கு 2017ஆம் ஆண்டில் குறை வேலைக் கருத்திட்டங்கள் 03 உடன் ரூபா மில்லியன் 43.08 இற்கான நிதி ஒதுக்கிட்டளவினை கண்டி, நுவரெலியா, களுத்துறை,காலி, மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்குறியதாக ஒவ்வொரு கருத்திட்டத்தின் பொருட்டு நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டாலும் 03 கருத்திட்டங்கள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டது.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.3**

**வாழ்வாதார அபிவிருத்திக்கு துணைபுரிகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்.**

| கருத்திட்ட வகை | முடிக்கப்பட்ட கரத்திட்டங்களி ன் எண்ணிக்கை | வழங்கியத் தொகை (ரூ. மில்) | திணைக்களச் செலவு (ரூ. மில்) | பயனாளிக் குடும்பங்களி ன் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி | 3 | 4.44 | 4.44 | 336 |

## குறைவேலைக் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்

## 2016/2017 சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமம்

2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் செயற்படுத்திய சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமங்களின் பொருட்டு நிதி வழங்கப்பட்டது. சமூக பாதுகாப்பு நிதியத்தின் மூலமாகும். அதன் பிரகாரம் குறைவேலையான அங்கீகாரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் நிலுவையான பணிகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ரூ.மில் 79.91 இற்கான தொகையினை 2018அம் ஆண்டில் அந்நிதியத்திலிருந்து வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் கீழ் உற்பத்திக் கருத்திட்டங்களின் பொருட்டு வீடுகளின் நிலுவையான பணிகளை பூர்த்தி செய்வதற்கும் தேவையான நிதி வழங்கப்பட்டது. கீழ் குறிப்பிடப்படுவது அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றமாகும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.3**

**2016/2017 சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம வேலைத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்**

| தொ.இல | கிராமத்தின் பெயர் | உற்பத்தியின் கருத்திட்டம் | கருத்திட்ட / பயனாளிகள் எண்ணிக்கை | செலவிட்ட தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| 1 | மடம்பெல்ல | நெசவுக் கைத்தொழில் | 12 | 0.48 |
| 2 | ரத்தம்பலகெட்டிய | வெற்றிலைப் பயிர்ச் செய்கை | 104 | 2.66 |
| 3 | பரவாஹெர | கம்மாலை/ பொற்கொள்ளன்/ வெள்ளிக் கைத்தொழில் | 38 | 1.88 |
| 4 | வெட்டகே தெணிய | வெணிலா | 166 | 0.89 |
| 5 | வதுபொல | வாழை | 3 | 0.39 |
| 6 | தங்கவேதாயுதபுரம் | ஆடு வளர்ப்பு | 54 | 4.41 |
| 7 | ரணாலை | களிமண் மற்றும் சீமெந்து உற்பத்தி | 38 | 1.29 |
| 8 | ஹிரேவத்த | மீன்பிடி சார்ந்த உற்பத்திகள் | 56 | 1.52 |
| 9 | பரதுவ | பால் உற்பத்தி | 9 | 0.38 |
| 10 | புவக்தண்டாவ | களிமண் சார்ந்த உற்பத்திகள் | 8 | 0.18 |
| 11 | குடாவெல்லை மேற்கு | கருவாடு மற்றும் மாசி உற்பத்தி | 62 | 1.27 |
| 12 | அம்பலாந்தொடை | ஓக்கிட் பயிர்ச் செய்கை | 63 | 1.13 |
| 13 | சூரிய வெவ | ஓக்கிட் பயிர்ச் செய்கை | 50 | 0.86 |
| 14 | எத்துள்கம மேற்கு | பால் உற்பத்தி | 6 | 0.66 |
| 15 | எப்பலாவத்தை | கம்மாலை உற்பத்தி | 12 | 0.14 |
| 16 | மல்மீகந்தை | கித்துள் உற்பத்தி | 156 | 1.77 |
| 17 | பனஹடுவை | மரவள்ளி பயிர்ச் செய்கை | 23 | 0.99 |
| 18 | கனகராயன் குளம் | கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய உற்பத்தி | 5 | 1.90 |
| 19 | கற்கடந்த குளம் | கால்நடை வளர்ப்பு விவசாய உற்பத்தி | 20 | 0.92 |
| 20 | பெறியமடு | கால்நடை வளர்ப்பு விவசாய உற்பத்தி | 115 | 2.51 |
| 21 | புனைநீராவி | பால் உற்பத்தி | 99 | 4.00 |
| 22 | அய்யக்கச்சி | கால்நடை வளர்ப்பு விவசாய உற்பத்தி | 41 | 2.00 |
| 23 | பின்தென்ன | துப்புரவேற்பாடு மற்றும் வீடமைப்பு (2018 புதிய ஒரு கருத்திட்டம்) | **53** | **2.39** |
| | மொத்தம் | | **1,193** | **34.57** |

இங்கு 2017ஆம் ஆண்டில் ஒரு கிராமத்திலிருந்து வீடுகளற்ற சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்கள் 04 வீதம் இனங்காணப்பட்டதுடன் ஒரு வீட்டின் பொருட்டு ரூபா 200,000 இற்கான தொகை வழங்கப்பட்டது. இங்கு பயனாளிப் பங்களிப்புடன் நன்கொடையாளர்களினதும் பிரதேச மக்களினதும் பங்களிப்பினைப் பெற்றுக் கொண்டு இந்த வீடுகளின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 2018ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

கீழே காட்டப்படவது இந்த வேலைத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி நிலைகளாகும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.10**

| | |
|---|---|
| மொத்த உற்பத்தி மாதிரிக் கிராமங்களின் எண்ணிக்கை | 96 |
| அங்கீகரித்த வீடுகளின் எண்ணிக்கை | 288 |
| விடுவித்த நிதி தொகையின் அளவு (ரூ.மில்) | 42.45 |
| முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 287 |
| மொத்தச் செலவு (ரூ. மில்) | 42.05 |



## 10.8. மொத்த முன்னேற்றம்

இவ்வாறு 2018ஆம் அண்டில் 05 வேலைத்திட்டங்களினூடாக சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை பயனுள்ளதாகவும் வெற்றிகரமானதாகவும் செயற்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்ததுடன் சரியாக சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு இருந்தும் இலக்கிடப்பட்ட உத்தேச அங்கீகரித்த நிதியளவு திறைசேரியினால் வழங்கப்படாமை காரணமாக உத்தேச இலக்கினை நோக்கி பயணிக்க முடியாமை தொடர்பில் இங்கு விசேடமாக சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.

செயற்படுத்தப்பட்ட சகல வாழ்வாதார கருத்திட்டங்களின் பொருட்டு வழங்கிய நிதி மாணியங்களாகும் என்பதுடன் பயனாளிகளின் பங்களிப்பிணையும் அதில் உள்ளடக்கி கருத்திட்டங்களின் முடிவுப் பெறுமதியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் சமுர்த்தி பயனாளிகளின் வருமான நிலையினையும் உயர்ந்தளவில் விருத்தி செய்ய வாய்ப்புக் கிடைத்தது.

அத்துடன் சமுர்த்தி வங்கிச் சங்க மட்டத்தில் செயற்படும் வாழ்வாதார சுழற்சி நிதியம் மூலமும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் போது பயனாளிகளுக்கு அவர்களது பங்களிப்பினை வழங்கி பணமில்லாத சந்தர்ப்பத்தில் குறைந்த வட்டியின் கீழ் சலுகைத் தவணைப் பணத்தை அறவிடுதல் என்பதன் கீழ் கடன் தொகையினை வழங்கி வாழ்வாதார வேலைத்திட்டங்கள் மிக இலகுவான விதத்தில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் ஒவ்வொரு கருத்திட்டப் பிரிவின் கீழும் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கைகள் தொடர்பில் கீழுள்ள பிரகாரம் சுட்டிக்காட்ட முடியும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 10.3**

**வாழ்வாதார சுழற்சி நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்.**

| கருத்திட்ட வகை | முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | செலவிட்ட தொகை (ரூ.மில்) | பயனாளிப் பங்களிப்பு (ரூ. மில்) | பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை | வலுவூட்டப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| விவசாயக் கருத்திட்டம் | 12,940 | 171.98 | 84.31 | 12,940 | 12,940 |
| கால்நடை வளர்ப்பு கருத்திட்டம் | 1,899 | 80.94 | 52.61 | 1,899 | 1,899 |
| மீன்பிடிக் கருத்திட்டம் | 334 | 10.83 | 6.49 | 334 | 334 |
| சிறியளவிலான கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி | 9,356 | 303.59 | 197.33 | 9,356 | 9,356 |
| தொழில் பயிற்சிக் கருத்திட்டம் | 367 | 10.53 | 4.21 | 367 | 367 |
| உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 345 | 52.30 | 38.32 | 1,355 | 0 |
| **மொத்தம்** | **25,241** | **630.17** | **383.27** | **26,251** | **24,896** |

**வரைபடக் குறிப்பு - 10.02**

**வாழ்வாதார சுழற்சி நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்.**



# 11. தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் செயலாற்றுகை.

**11.1. அறிமுகம் :** **தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் மூலம் 2018ஆம் ஆண்டில் முக்கிய வேலைத்திட்டங்கள் 02 செயற்படுத்தப்பட்டது.**

**11.2. தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம்**

இதன் கீழ் சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகளின் பொருட்டு விற்பனை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது, சந்தையின் ஸ்தரித்தன்மையினைப் பாதுகாத்து சந்தை வாய்ப்பினை விஸ்தரித்துக் கொள்வது, கல்வி மற்றும் தொழில்நுட்ப அறிவினை வழங்குதல், தொழில் முயற்சி அபிவிருத்திக்குறிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உற்பத்தியாளருக்கும் வாடிக்கையாளருக்கும் சாதாரண விலை ஒன்றினை உறுதிப்படுத்திக் கொடுத்தல், மற்றும் தரம் வாய்ந்த நச்சுப் பொருட்களற்ற சுற்றாடல் நேயமிக்க உற்பத்திகளின் பொருட்டு தொழில் முயற்சியாளர்களை ஈடுபடச்செய்வதன் ஊடாக சுயதொழில் வாய்ப்புக்களை இலகுவாக்கிக் கொடுப்பது என்பன முதற்கட்டமாக மேற்கொள்ளப்படுகின்றது.

**11.3. சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை பராமரித்துக் செல்லல்.**

ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிக்குடும்பத்தின் பொருட்டும் நிரந்தரமான வீடொன்றிற்கான உரிமையினை வழங்கும் நோக்கில் மாதாந்த சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் சீட்டெழுப்பு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்.

**நோக்கு :**

**"மக்கள் நேயமுள்ளதான புதியவைகளை வழங்குகின்ற தொழில் முயற்சியாளர் சமூகம் ஒன்று மற்றும் ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிக் குடும்பத்தின் பொருட்டு நிரந்தரமான ஒரு வீடு"**

**பணி :** **"புதிய அறிவினாலும் திறமைகளினாலும் மனப்பாங்குகளினால் பூரணமான, சகலரும் திருப்தியடைக்கூடிய சந்தை ஒன்றினையும் சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றினையும் வழங்குதல்."**

**குறிக்கோள் :-**

1. சமுர்த்தி பயனாளித் தொழில் முயற்சியார்களின் அறிவுத்திறமையினை விருத்தி செய்தல், தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை உயர்ந்த தரத்திலும் பூரணத்துமானதுமான விதத்திலும் மேற்கொள்ளல் நிலையான ஒரு சந்தையினை உருவாக்கிக் கொள்ளல் நிரந்தரமான வாடிக்கையான சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல், உற்பத்திக்கு சாதாரன ஒரு விலையினைப் பெற்றுக் கொள்ளல், மற்றும் சுற்றாடல் நேயமிக்க பசுமையான தொழில் வாய்ப்புக்களை இலகுவாக்குவதன் ஊடாக தொழில் முயற்சியாளரை பொருளாதார, மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டப்படுவதன் ஊடாக தேசிய பொருளாதார விருத்திக்கு நேரடியாக பங்களிப்புச் செய்தல்.

2. சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினைகளை நிரந்தரமாக தீர்த்து வைப்பதன் ஊடாக அவர்களை பொருளாதார, சமூக, கல்வி மற்றும் கலாச்சார ரீதியாக பலப்படுத்துவதுடன் ஆத்மீக பண்புகளை மேம்படுத்துவது.

## 11.6. மொத்த முன்னேற்றம் தொடர்பான பொழிப்பு

சமுர்த்தி தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு பயன்படுத்தப்பட்டது திறைசேரி நேரடி நிதி ஒதுக்கீடு மாத்திரமேயாகும். அதன் பிரகாரம் 2018ஆம் ஆண்டின் பொருட்டு ஓதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவானது ரூபா மில்லியன் 168 ஆகும் என்பதுடன் மொத்தச் செலவுகள் ரூபா மில்லியன் 110.5ஆகும்.

**புள்ளிவிபரக் குறிப்பு - 11.1**

**தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம் - நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்.**

| | வேலைத்திட்டம் | ஒதுக்கிய தொகை ரூ. மில் | செலவு ரூ. மில் | இலக்கிடப்பட்ட கருத்திட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | தொழில் முயற்சி அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 66.2 | 53.53 | 1325 | 1546 |
| 2 | மாவட்ட விற்பனைக் கண்காட்சி | 10.0 | 7.12 | 25 | 22 |
| 3 | தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம் | 16.55 | 11.91 | 331 | 609 |
| 4 | உணவுத் தொழில் நுட்ப பயிற்சி வேலைத்திட்டம் | 2.0 | 0.77 | 10 | 07 |
| 5 | மாவட்ட சந்தைப்படுத்துதல் (விற்பனை) நிலையங்களை அமைத்தல். | 30.0 | 17.05 | 05 | 04 |
| 6 | புதிய தொழில் முயற்சியாளர்கள் 14021பேரை பயிற்றுவிப்பதும் தொழில்களை ஆரம்பிக்க ஊக்குவிப்பதும். | 33.1 | 15.86 | 14021 | 17255 |
| 7 | விசேட கருத்திட்டங்களும் வேலைத்திட்டங்களும் | 4.81 | 1.47 | 04 | 04 |
| 8 | V-2025 என்டர் பிரைசஸ் ஸ்ரீலங்கா தேசிய கண்காட்சி | 4.5 | 2.42 | 01 | 01 |
| 9 | நிர்வாகச் செலவு | 0.84 | 0.37 | | |
| | மொத்தம் | 168 | 110.5 | 15722 | 19448 |

**வரைபடக் குறிப்பு - 11.1**

**வேலைத்திட்டங்களுக்கமைய செலவுகள் ரூ.மில்லியன்.**




## 11.5. தொழில் முயற்சி அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

சமுர்த்தி பயனாளிகளினால் கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தேசிய உற்பத்திகளின் மிகைகமையைப் பாதுகாப்புடன் கூடிய கால பாவனையின் பொருட்டு வைத்துக்கொள்வதற்குத் தேவையான சிறிய அளவிலான களஞ்சியசாலைகள், சந்தைப்படுத்தல் (விற்பனை) நடவடிக்கைகளை இலகுவாக்கும் சிறியளவிலான நடமாடும் வண்டிகள், நடமாடும் விற்பனை கூடங்கள், உற்பத்திகளின் தரம், சிறப்பு நிலை, தரத்தினை அதிகரித்தல் உட்பட பெறுமதிசேர் உற்பத்திகளின் பொருட்டு தேவையான உபகரணங்களையும் இயந்திர பொறிகளையும் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான உதவிகள் இதன் கீழ் வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் ரூபா 200,000.00 வீதம் என்ற வகையில் ரூபா மில்லியன் 66.2 இற்கான நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் 2018.12.31ஆம் திகதியாகும் போது கருத்திட்டப் பெறுமதியில் 50%த்தினை பயனாளிகளின் பங்களிப்புடன் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 116 வீட்டுடனான களஞ்சியங்கள், மற்றும் 503 நடமாடும் வண்டிகளும், விற்பனை கூடங்களும் என்பதுடன் அவற்றுடன் சிறியளவிலான இயந்திர பொறிகள் 927 சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதுடன் செலவிடப்பட்ட மொத்த செலவானது ரூபா மில்லியன் 53.53 ஆகும். சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக பயனாளிக் குடும்பத்தின் மாதாந்த வருமானமானது ஆகக் குறைந்தது 5000/= ரூபாவினால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் அதனூடாக வறுமை நிலையினை குறைத்து வருமானத்தை இலகுவாக்கிக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

## 11.6. விற்பனை நிலையங்கள் / உணவகங்களை ஆரம்பித்தல்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களின் சந்தைகளை விரிவு படுத்தும் மூலோபாயம் ஒன்றாக ஆரம்பிப்பதற்கு ஒரு மாவட்டத்திற்கு பல்வேறு வகையான உற்பத்திகளைக் கொண்ட சந்தைப்படுத்தல் நிலையம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. விற்பனை நிலையங்கள்/ உணவகங்களை ஆரம்பிப்பதன் முக்கிய குறிக்கோளானது சமுர்த்தி தொழில் முயற்சியாளர்கள் நச்சுப் பொருட்களற்ற சுற்றாடல் நேயமிக்க உற்பத்திகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிப்பதும் அவ்வாறான தரம் வாய்ந்த பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வாடிக்கையாளர்களை பழக்கப்படுத்துவதற்குமாகும் அதன் கீழ் 2018ஆம் ஆண்டில் மாத்தளை, அம்பாறை, புத்தளம், மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் பொருட்டு ரூபா மில்லியன் 30.0 இற்கான நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன் 2018.12.31ஆம் திகதியில் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகளும் ரூபா மில்லியன் 17.05 ஆகும்.

## 11.7. சமுர்த்தி தொழில் முயற்சிப் பயிற்சி வேலைத்திட்டம்

சமுர்த்தி தொழல் முயற்சியாண்மையாளர்களாகிய மக்களிடத்தேயுள்ள சிறிய மற்றும் குறுகியளவிலான தொழில் முயற்சியாளர்களை மேலும் மேம்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. அங்கு அவர்களது வர்த்தகம் அல்லது உற்பத்திகளை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பேணிச் செல்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு உட்பட கோட்பாட்டு மற்றும் நடைமுறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டது.

இதன் பொருட்டு ஒரு பிரதேச செயலகப் பிரிவுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதக்கீட்டளவானது ரூபா 50000.00 ஆகும் அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டளவு ரூபா மில்லியன் 16.55ஆகும்.

2018.12.31ஆம் திகதியில் 609 பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக 26255 தொழில் முயற்சியளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் செலவிடப்பட்ட மொத்தச் செலவானது ரூபா மில்லியன் 11.91 ஆகும்.

## 11.8. மாவட்ட விற்பனைக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்.

தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களுடன் தொடர்புபட்டு மற்றும் அதன் மூலம் நன்மைகளைப் பெற்ற சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் பொருட்டு தொடர்ச்சியான சந்தை ஒன்றின் ஊடாக கூடிய ஒரு விற்பனையினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ''சமுர்த்தி அபிமானீ - 2018'' என்ற தலைப்புச் சுலோகத்தினை மையமாக வைத்துக்கொண்டு மாவட்ட வர்த்தகக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம் ஏப்ரல் அல்லது டிசம்பர் பண்டிகைக் காலத்தினை மையமாக வைத்துக்கொண்டு மாவட்ட வர்த்தக் கண்காட்சிகள் 25ஐ நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது அதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டின் அளவானது ரூபா மில்லியன் 10.00 ஆகும்.

2018.12.31ஆம் திகதியில் 22 மாவட்டங்களில் விற்பனைக் கண்காட்சிகளை நடாத்தக் கூடியதாக இருந்ததுடன் அதன் பொருட்டு சமுர்த்தி தொழில் முயற்சியாளர்கள் 3000 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டுள்ளனர் விற்பனைக் கண்காட்சியின் பொருட்டு செலவிடப்பட்ட மொத்த செலவானது ரூபா மில்லியன் 7.12 ஆகும்.

## 11.9. உணவு தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டம்.

இதன் கீழ் நிகழ்கால மக்கள் சமூகத்தினரிடம் நச்சுப் பொருட்களற்ற உள்நாட்டு உணவுகளுக்கு அதிகரித்த கேள்விகள் உள்ளதனால் அக்கேள்விகளுக்கு நிரம்பல்களை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பது தற்போதுள்ள துரித உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மற்றும் அதன் பொருட்டு சுவையினைக் கொண்டுள்ள சமுர்த்தி பயனாளிகளின் பொருட்டு தரமான மற்றும் சுகாதார பாதுகாப்புடன் உற்பத்திகளை மேற்கொள்ளும் தேவைப்பாடுகளை சுட்டிக்காட்டி முறைப்படியானதும் கோட்பாட்டு ரீதியானதாகவும் செயல்முறைப் பயிற்சியொன்று வழங்கப்பட்டது.

உணவுத் தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டத்தின் பொருட்டு ரூபா மில்லியன் 2.0 இற்கான நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன் 2018.12.31 ஆம் திகதியாகும் போது மாத்தளை, இரத்தினபுரி,மொனராகலை, மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 148 பயனாளிகளின் பொருட்டு 07 பயிற்சி வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்ய்ப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டு செலவிட்டமொத்த செலவானது ரூபா மில்லியன் 0.77 ஆகும்.

## 11.10. 14,021 புதிய தொழில் முயற்சியாளர்களை பயிற்றுவிப்பதும் வர்த்தகங்களை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்பதும்.

இளம் வயதினரின் தொழில் இன்மையினை நீக்குதல், மற்றும் வறுமையினை ஒழிக்கும் நோக்கினை முன்வைத்துக்கொண்டு சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களின் பாடசாலையினை விட்டு விலகிய இளைஞர், யுவதிகள் மற்றும் வயது வந்தோர்களிடத்தேயே விவசாயம், கால் நடை வளர்ப்பு, மீன்பிடி, கைத்தொழில் மற்றும் சேவை ஆகிய எந்த ஒரு துறையினூடாகவேனும் புதிதாக வியாபாரம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு ஊக்கத்தினை உடையவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டல்களை இதன் கீழ் மேற்கொண்டது அங்கு மரபு ரீதியான சுயதொழில் வாய்ப்புக்களிலிருந்து விலகி படைப்பாக்க பூர்வமான மற்றும் சுற்றாடல் நேயமுள்ள புதிய உற்பத்திகளுனூடாக தொழில் முயற்சியாளர் ஒருவராக வர்த்தக உலகில் பிரவேசிக்க விருப்பத்தினைக் கொண்டுள்ள இளைஞர் யுவதிகளைக் தெரிவு செய்வது தொடர்பில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் கருத்திட்டத்தில் ஈடுபடச் செய்யும் பொருட்டு ஒரு கிராம சேவகர் பிரிவிலிருந்து ஒருவர் என்ற வகையில் புதிய தொழில் முயற்சியாளர்கள் 14021 பேர் பயிற்றுவிக்கப்பட இருப்பது என்பதுடன் அதன் பொருட்டு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டள்ளவானது ரூபா 100,000.00 ஆகும். அதற்கமைய ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டள்ளவானது ரூபா மில்லியன் 33.1 ஆகும்.

2018.12.31 ஆம் திகதியில் புதிய தொழில் முயற்சியாளர்கள் 17,255 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டள்ளதுடன் மொத்தச் செலவானது ரூபா மில்லியன் 15.86 ஆகும்.

## 11.11. V- 2025 என்டர் பிரைசஸ் ஶ்ரீலங்க தேசிய கண்காட்சி

கிராமிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு விளக்கங்கள், நிதியுதவிகள், மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் நல்லிணக்கம் தொடர்பில் விரிவான கலந்துறையாடல் ஒன்றினை உருவாக்குதல், மற்றும் பசுமையான ஊரெழுச்சியின் (கம்பெரலிய) ஊடாக ஒவ்வொரு கிராமத்திலும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதனை நோக்காக் கொண்டு V- 2025 எண்டர்பிரைசஸ் ஶ்ரீலங்கா தேசிய கண்காட்சி 2018.08.29,30 மற்றும் 31 ஆகிய மூன்று நாட்களாக மொனராகலையில் நடாத்தப்பட்டது.

இந்த வர்த்தக கண்காட்சியின் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி மொனராகலை மாவட்டத்தின் சமுர்த்தி தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொள்ளச் செய்யப்பட்டதுடன் அதன் பொருட்டு செலவிட்ட செலவான ரூபா மில்லியன் 2.42 ஆகும்.

## 11.12. விசேட கருத்திட்டங்களும் வேலைத்திட்டங்களும்.

வருடாந்த செயற்பாட்டுத்திட்டமிடலில் உட்படுத்தப்படாத இருப்பினும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் குறிக்கோள்களும் நோக்கங்களும் நிறைவேற்றப்படுகின்ற விதத்தில் காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டிய கருத்திட்டங்கள் அல்லது நடாத்தப்பட்ட வேண்டிய வேலைத்திட்டங்களின் பொருட்டு ரூபா மில்லியன் 4.81. ஒதுக்கப்பட்டதுடன் 2018.12.31ஆம் திகதியில் விசேட கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களின் கீழ் கிழுள்ள கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.

**புள்ளிவிபரக் குறிப்பு - 11.2**

**விசேட கருத்திட்டங்களும் வேலைத்திட்டங்களும்.**

| கருத்திட்டம் | மாவட்டம் | நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை | செலவு ரூ. மில். |
|---|---|---|---|
| தெல்லிப்பழை விற்பனை நிலைய காணியில் வேலி நிர்மாணம் | யாழ்ப்பாணம் | 15 | 0.31 |
| கந்தளாய் விற்பனை நிலைய நிர்மாணிப்பு | திருகோணமலை | 05 | 0.80 |
| சர்வதேச மகளிர் தின நினைவு நாள் விற்பனைக் கண்காட்சி | பொலனறுவை | 35 | 0.05 |
| நாஉல விற்பனை நிலையத்தின் பொருட்டு மூலதன உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல் | மாத்தறை | 25 | 0.31 |
| மொத்தம் | | 70 | 1.47 |

## 11.13. சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் நம்பிக்கை நிதியத்தினை பாரமரித்துக் செல்லல்.

சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் கட்டியெழுப்பப்பட்டிருப்பது சமுர்த்திக் பயனாளிக் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணத் தொகையிலிருந்து மாதாந்தம் 50.00ஐ நம்பிகை நிதியத்தில் வரவிடுவதன் மூலமேயாகும். இந்த நிதியமானது பல சட்டப்பிரமாணங்களுக்கு உட்பட்டதாக நம்பிக்கைப் பொறுப்புச் சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுகின்றது நிதியத்தினை பராமரித்துச் செல்வதன் முக்கிய குறிக்கோளானது ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிக் குடும்பத்திற்கும் நிலையான வீடொன்றிற்கான உரிமையினைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பு வேலைத்திட்டம் நடாத்திச் செல்லப்படுகின்றது.

சீட்டிழுப்பின் பொருட்டு பயன்படுத்தப்படுவது சகல சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களின் குடும்பக் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட கணினித் தரவுத் தொகுதியொன்றிலாகும். இத்தரவுத் தொகுதியினைப் பயன்படுத்தி மாதாந்தம் பிரதேச செயலகப் பிரிவு ஒன்றுக்கு ஒரு வெற்றிபெற்ற பயனாளி ஒருவர் என்ற வகையில் வெற்றி பெற்ற பயனாளிகள் 331 பேர் தெரிவு செய்யப்படுகின்றனர். ஒருவருக்கு வழங்கப்படுகின்ற பரிசுத் தொகையின் பெறுமதியானது ரூபா 200,000.00ஆகும். இந்நிதியினைப் பயன்படுத்தி வீடொன்றினை நிர்மாணிக்க தற்போதுள்ள வீட்டினை திருத்திக் கொள்வதற்கு காணியொன்றினைக் கொள்வனவு செய்ய அல்லது வீடொன்றிற்கான தேவைப்பாடு இல்லாவிடின் வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றிலும் ஈடுபத்திக் கொள்ள முடியும் அதன் மூலம் பயனாளிக் குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றினை வழங்குவதன் ஊடாக அவர்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டுவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

இதற்கு மேலதிகமாக வீடுகளை பரிசாக வழங்கியதன் பின்னர் நிலுவையாகும் ஏதேனும் மீதிகள் இருப்பின் அவற்றினை இந்த நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் விதத்தில் தொடர்ந்தும் பயன்படுத்திக் கொள்ள நம்பிக்கை நிதியத்திற்கு அதிகாரம் உள்ளது. அதன் பிரகாரம் 2018.12.31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்குள் லொத்தர் நிதியத்திலிருந்து பயனாளிக் குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினையினைத் தீர்க்கும் பொருட்டு கீழுள்ள பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**புள்ளிவிபரக் குறிப்பு - 11.3**

**சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்.**

| தொ.இல | வேலைத்திட்டம் | நிவாரணம் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. மில் |
|---|---|---|---|
| 01 | சமுர்த்தி வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பு | 3972 | 794.4 |
| 02 | விசேட வீடமைப்பு வேலைத்திட்டம் | 24 | 4.7 |
| 03 | சமுர்த்தி வீடமைப்பு வாசனா கிராமம் (ஆராச்சிக்கட்டுவை) | 26 | 5.69 |
| | மொத்தம் | 4022 | 804.79 |






(கண்ணொருவை விவசாய பயிற்சி நிலையத்தில் துரித உணவு தொழில் நுட்பம் தொடர்பில் நடைமுறைப் பயிற்சியினைப் பெறும் மாத்தளை மாவட்ட பெண்கள்)



(பணிகள் முடிக்கப்பட்டுள்ள மாத்தளை விற்பனை நிலையம்)



(பணிகள் முடிக்கப்பட்டுள்ள காலி மாவட்ட மாவட்ட விற்பனை நிலையம்)



(பணிகள் முடிக்கப்பட்டவண்ணமுள்ள புத்தளம் மாவட்ட விற்பனை நிலையம்)



(கேகாலை மாவட்ட விற்பனைக் கண்காட்சி)



(சமுர்த்தி அபிமாணி விற்பனை கண்காட்சி திருகோணமலை மாவட்டம்)



(நடமாடும் விற்பனைக் கூடம் - கம்பஹா மாவட்டம்)



(விற்பனைக் கூடம் - காலி மாவட்டம்)

# 12. தகவல் தொழில்நுட்பப் பிரிவின் செயலாற்றுகை

12.1. **அறிமுகம்** -

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை தகவல் தொழில் நுட்பத்துடன் இணைப்புச் செய்து மிகவும் வினைத்திறன் மிக்கதான சேவையொன்றினை வழங்குவது இப்பிரிவின் குறிக்கோளாகும். தற்போது கடித ஆவணங்களால் மேற்கொள்கின்ற செயற்பாடுகளை இணையத்தளத்தினைப் பயன்படுத்தி கொள்கின்ற செயற்பாடுகளை இணையத்தளத்தினைப் பயன்படுத்த E-mail செய்திப் பறிமாற்றம் மற்றும் கணினி வேலைத்திட்டங்களை உருவாக்கி செய்து சேவைகளை வினைத்திறன் மிக்கதாக மேற்கொள்வது தகவல் தொழில் நுட்பம் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**நோக்கு** -

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வேலைத்திட்டங்கள் ஊடாக கடிதப் பரிமாற்றங்களற்ற அலுவலக வளவு ஒன்றினை உருவாக்குதல்.

**பணி**

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை கிராமியப் பிரதேசம் வரை விஸ்தரித்து உற்பத்திகளை உலக சந்தைகளுக்கு முன்வைத்து தேசிய பொருளாதாரத்தினை உள்ளார்ந்த பலமுள்ளதாக மாற்றுவதில் ஊழியர்கள், குறைந்த வருமானம் பெறுவோர் கருத்திட்டங்கள், மற்றும் வங்கி வலையமைப்பினை தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் வலுவூட்டஞ் செய்து புதிதான ஒரு திசைக்குத் திருப்புதல்.

**குறிக்கோள்கள்**

- நாடுபூராகவும் அமைந்துள்ள 1073 சமுர்த்தி வங்கிகளை கணனிமயப்படுத்துவதன் பொருட்டு கணனி மென் பொருளை உருவாக்கி சகல வங்கிகளை வலையமைப்புக்குட்படுத்துதல்.
- சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் பெயர்ப்பட்டியலை இணையத்தளத்தின் ஊடாக இற்றைப்படுத்தக்கூடிய விதத்தில் முகாமைத்துவ மொடியூலை (CRM) அபிவிருத்தி செய்தல்.
- மனிதவள முகாமைத்துவ மொடியூலை (HRM) இற்றைப்படுத்தி உத்தியோகத்தர்களின் வினைத்திறனை மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டத்தினை (Performes Evaluation) செயற்படுத்தல்.
- மிகப் பொருத்தமான நிவாரணம் பெறும் குடும்பங்களை 29 எடுகோள்களை பயன்படுததி கணனி மென்பொருள் மூலம் தெரிவு செய்து கொள்ளல்.
- தலைமைக் காரியாலத்தில் கடிதப் பரிமாற்றத்தினைக் குறைக்கும் பொருட்டு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்த முறைப்படி உள்ளக வலைத் தொகுதியினை (Local Area Network) தயாரித்தல்.
- திணைக்களத்தின் தொலைபேசி அழைப்புக்களுக்கான செலவுகளைக் குறைக்கும் பொருட்டு உருவாகியுள்ள Calling Circle தொலைபேசி வலையமைப்பினை உறுதியாக பலப்படுத்தல்.

**12.2. கருத்திட்டம்** - சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை கணனி மயப்படுத்தல்

**செயற்பாடுகள்** -

i. கணினி மயப்படுத்தப்பட்ட வங்கிகளின் பொருட்டு சிறந்த சேவையினை வழங்கும் கணினி மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்களுடன் சேவை ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல்.

ii. மென்பொருளின் சகல குறைபாடுகளையும் இனங்கண்டு அவற்றினை சீர் செய்து சகல வங்கிகளுக்கும் வழங்குதல்.

**செயற்படுத்தப்பட்ட இடங்கள்** -

i. மொனராகலை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள சகல சமுதாய அடிப்படை வங்கிகள்

ii. SLTS மென்பொருளை 6 முன்னோடியான மற்றும் Online விதத்தில் 28 வங்கிகளையும் ஒவ்வொரு மாவட்டமும் உள்ளடங்குகின்ற பிரகாரம் மேற்கொள்ளல்.

**இலக்குக் குழு – சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள்**

**ஆரம்பித்த திகதி** -2012 ம் ஆண்டு

**முடிக்கப்பட்ட திகதி :-** செயற்படுத்தப்பட்டு வருகின்றது

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடுகள் -** இதன் நிதி நடவடிக்கைகள் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**2018.12.31 ம் திகதியில் செலவு** – இல்லை

**2018.12.31 ம் திகதியில் முடிவுகள்** -

i. வாடிக்கையாளர்களைப் பதிவு செய்தல்
ii. கணக்குகளை உட்படுத்துதல்
iii. கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்தல்
iv. கடன்களை உட்படுத்துதல்
v. பாஸ்புத்தகங்களை அச்சிடல்

**பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்** -

- தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்ற முன்னோடியான சமுர்த்தி வங்கிகளின் வினைத்திறன் உயர்ந்த மட்டத்தில் உள்ளது.
- உத்தியோகத்தர்களின் உழைப்பினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டினை கணினி மென்பொருள் ஊடாக மேற்கொள்ளும் போது சரியான மற்றும் இலகுவாக மேற்கொள்வதற்கு காலத்தினை மீதப்படுத்தி கொள்ள முடியுமாக உள்ளமை.
- பயனாளிகளுக்கு தாமதமின்றி உறிய நேரத்தில் தற்போது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இலகுத் தன்மையினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**புகைப்படம்** -



**12.3.** CRM மொடியூலை செயற்படுத்தல்.

**செயற்பாடுகள்** -

i. இணையத்தளத்தின் ஊடாக சமுர்த்திப் பயனாளிகளின் பெயர்ப்பட்டியலை இற்றைப்படுத்துதல்.
ii. வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பின் பொருட்டு இற்றைப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**செயற்படுத்தப்பட்ட இடம்** - சகல சமுர்த்தி தலைமையக அலுவலகங்கள்.

**இலக்குக் குழு** – சகல சமுர்த்தி பயனாளிக் குடும்பங்கள்

**ஆரம்பித்த திகதி** -2018

**முடிக்கப்பட்ட திகதி** –செயற்படுத்தப்பட்டு வருகின்றது

**அங்கீகரித்த நிதி ஒதுக்கிடு** - ரூ. மில்லியன் 2

**2018.12.31 இல் செலவுகள் - இல்லை**

**2018.12.31 இல் முடிவுகள் -75%**

**பெற்றுக்கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்** -

i. சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களின் பெயர் பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகின்றது.

**புகைப்படம்** -



**12.4.** சமுர்த்தி நிவாரணத்தின் பொருட்டு பொருத்தமான குடும்ப எடுகோள்களைப் பயன்படுத்தி கணினி மென்பொருள் ஊடாக தெரிவு செய்து கொள்ளல்.

**செயற்பாடுகள்** -

i. ஆய்வுப் படிவங்கள் மூலம் தகவல்களை சேகரித்தல்

ii. சகல தரவுகளையும் கணனி மயப்படுத்துதல்.

iii. புள்ளிவிபரத் திணைக்களத்துடன் தயாரிக்கப்பட்ட 29 எடுகோள்களையும் பயன்படுத்திக் கொண்டு கணினி மென்பொருளின் பயன்பாட்டுடன் குடும்பங்களுக்கான புள்ளிகளை வழங்குதல்.

iv. தகுதி வாய்ந்த குடும்பங்களின் பெயர்ப்பட்டியலை பகிரங்கப்படுத்தல்.

**செயற்படுத்தப்பட்ட இடங்கள்** - முழு நாடும் உள்ளடங்குகின்ற பிரகாரம்

**இலக்கக் குழு** – சகல குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள்

**ஆரம்பித்த திகதி - 2017**

**பூர்த்தி செய்த திகதி – ஒவ்வொரு வருடமும் செயற்படுத்தல்**

**அங்கீகரித்த நிதி ஒதுக்கிடு - ரூ. மில்லியன் 2.50**

**2015.12.31 ம் திகதியில் செலவுகள் - இல்லை**

**2018.12.31 ம் திகதியின் முடிவுகள் - 85%**

**பெற்றுக் கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள் -**

**i.** முறையான பிரகாரம் நிவாரண உதவிகளின் பொருட்டு தகுதியான குடும்பங்களை தெரிவு செய்வதற்குத் தேவையான மென்பொருள் ஒன்றைத் தயாரித்தல்.




-




**12.5. கருத்திட்டம்** - தலைமைக் காரியாலயத்தின் கணினி வலையமைப்புக்குட்படுத்தல்.

**செயற்பாடுகள்** -

i. உள்ளக கணினி மற்றும் துணை உறுப்புக்கள் அமைந்துள்ள விதத்திற்கேற்ப திட்டமிடலைத் தயாரித்துக் கொள்ளல்.

ii. வலையமைப்புக்குட்படுத்தவதற்குத் தேவையான துணை உறுப்புக்களை இனங் காணுதல்.

iii. உள்ளக கணினிகள் சகலதையும் வலையமைப்புக்குட்படுத்துதல்.

**செயற்படுத்தப்பட்ட இடங்கள்** - தலைமைக் காரியாலயத்தின் சகல பிரிவுகளின் பொருட்டு

**இலக்கக் குழு** – தலைமைக் காரியாலயத்திற்ன் சகல உத்தியோகத்தர்கள்

**ஆரம்பத் திகதி** -2018.12.18

**முடிக்கப்பட்ட திகதி -**2018.12.28

**அங்கீகரித்த நிதி ஒதுக்கிடு** -ரூ. மில்லியன் 2

**2018.12.31 ம் திகதியில் கொடி** 1.91

**2018.12.31 ம் திகதியில் முடிவு** -100%

**பெற்றுக் கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்** -

i. தலைமைக் காரியாலயத்தினை தகவல் தொழில்நுட்பத்தினூடாக அபிவிருத்தி செய்தல்.

ii. Printers, Photocopy Network மேற்கொள்வதன் ஊடாக திணைக்களத்திற்கு ஏற்படும் செலவினைக் குறைத்தல்.

**புகைப்படம்** -








# 13. ஊடகப் பிரிவின் செயலாற்றுகை

13.1. **அறிமுகம் :-**

சமுர்த்தி வேலைத்திட்டத்தின் மொத்த செயற்பாடுகள் தொடர்பில் இலத்திரணியல், அச்சு மற்றும் புதிய ஊடகங்கள் ஊடாக விரிவான பிரச்சாரத்தினை வழங்குதல்.

**நோக்கு :-**

2030 ம் ஆண்டில் வறுமை நிலையற்ற ஒரு இலங்கையின் பொருட்டு செயற்படும் சகல அபிவிருத்திப் பணிகளையும் வினைத்திறன்மிக்கதாகவும், பயனுறுதிவாய்ந்ததாக மற்றும் பாதுகாப்பாதனதாகவும் ஆக்கிக் கொள்ளும் பொருட்டு இலத்திரணியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஒத்துழைப்பினை வழங்குதல்.

**பணி :-**

வறுமை நிலையினை ஒழிக்கும் பொருட்டு குறைந்த வருமானம் பெறும் மக்கள் பிரிவினர்களுக்கு தோள்கொடுக்கும் தொடர்பாடல் முறையொன்றினைக் கட்டியெழுப்புவதும் அதனூடாக சமுர்த்தி வேலைத்திட்டத்தின் அபிவிருத்தி ரீதியான பண்புகளை மக்களிடம் பிரபல்யப்படுத்துவது, சமுர்த்தி வேலைத்திட்டம் சார்ந்த புதிய அபிவிருத்திப் பிரதேசம் ஒன்றினைக் கட்டியெழுப்புதல், குறைந்த வருமானம் பெறும் மக்களின், அரச சார்பற்ற அமைப்புக்களின் தொண்டர் பணியாளர்களின் தொழில் வாண்மையாளர்களின் மற்றும் அரசியல் தலைமைகளின் அந்நியோந்நிய அனுபவங்களை சமூக அபிவிருத்திச் செயற்பாட்டினை புரட்சிகர ரீதியில் முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு பொருத்தமான கருத்தாடலை இலத்திரணியல், அச்சு, மற்றும் சமூக வலைத்தளங்களின் பயன்பாடுடன் கட்டியெழுப்புதல்.

**குறிக்கோள்**

- வறுமையினை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்திற்கு பொறுப்புச் சொல்லும் நிறுவனமான சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மிகப் பயனுறுதிவாய்ந்ததாகவும் பயனுள்ளதாகவும் மக்களிடத்தேயே எடுத்துச் செல்ல முழுமையான ஊடகப் பங்களிப்பினை வழங்குதல்.

**புள்ளிவிபரக் குறிப்பு 13.1**

**மொத்த முன்னேற்றம் தொடர்பான பொழிப்பு**

| தொ இல் | கருத்திட்டத்தின் பெயர் | ஒதுக்கிய தொகை (ரூ. மில்) | கருத்திட் டங்களி ன் எண்ணிக் கை | பௌதீக முன்னேற்றம் | | | நிதி முன்னேற்ற ம் (ரூ.மில்) | வீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | முடிக்கப் பட்டுள்ள கருந்திட்ட ங்களின் எண்ணிக் கை | நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள கருத்திட்ட ங்களின் எண்ணிக் கை | ஆரம்பிக்கப்ப ட்டுள்ள கருத்திட்டங்க ளின் எண்ணிக்கை | | |
| 1. | சமுர்த்தி செய்திப்பத்திரிகை அனுபந்தத்தினை வெளியிடுதல் (சிங்களம் / தமிழ்) | 6.90 | 24 | 24 | | | 6.9 | 100% |
| 2. | சமுர்த்தி (உதானய தொலைக்காட்சி நிகழ்ச்சி) | 6.80 | 18 | 15 | | | 4.614 | 67% |
| 3. | வெளியீடுகள் (கையேடு) | 10.95 | 5 | 5 | | | 2.4 | 22% |

## 13.2. சமுர்த்தி செய்திப்பத்திரிகை அனுபந்த வெளியீடு (சிங்களம்/தமிழ்)

**அறிமுகம்**

சமுர்த்தி செய்திப்பத்திரிகை சிங்களம் மற்றும் தமிழ் (தினமின பத்திரிகை அனுபந்தம், தினகரன் பத்திரிகை அனுபந்தம்) மொழிகளில் வெளியிடுதல்

வறுமை நிலையினை குறைக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் பிரிவினரின் முயற்சிகளுக்கும் தோள்கொடுக்கின்ற ஊடக முறையொன்றினைக் கட்டியெழுப்பி சமுர்த்தி வேலைத்திட்டத்தினை விரிவான கருத்தாடல் ஒன்றில் உட்படுத்தி அதன் அபிவிருத்தியினை மிக விரைவாக திறனுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் மக்களிடத்தே எடுத்துச் செல்ல தேசிய மட்டத்திலான செய்திப் பத்திரிகை ஒன்றில் அபிவிருத்திச் செய்திகள் உள்ளடங்கிய செய்திப் பத்திரிகை அனுபந்தம் ஒன்று வெளியிடப்படுகின்றது.

**இலக்கிடப்பட்ட குழு**

வறுமையினை ஒழிக்கும் தேசிய பணிக்கு தோள் கொடுத்து சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் செயற்படும் அபிவிருத்திக் கருத்திட்டத்திலிருந்து அச்சு ஊடகங்கள் மூலம் மக்களிடத்தேயே எடுத்துச் சென்று விளக்கமளித்தல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் ஊடாக அந்த வேலைத்திட்டங்களை ஊக்குவித்து மக்களுக்கும் அவ்வாறான நிலைக்குள்ளாவதற்கு எதிர்ப்பார்க்கின்ற மக்களுக்கு உந்துதலாக இருந்து கொண்டு மக்களை வலுவூட்டச் செய்வதற்கு தோள் கொடுத்தல்.

**செயற்படுத்தப்படும் முறை**

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் வரையறுக்கப்பட்ட எக்ஸத் செய்திச் சங்கங்கத்துடன் ஒன்றிணைந்து தினமின மற்றும் தினகரன் செய்திப்பத்திரிகைகளின் அனுபந்தமாக மாதத்திற்கொருதடவை வெளியிட்டு விநியோகித்தல்

**செயற்படுத்தப்பட்ட இடம்**

தலைமைக் காரியாலயம்

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடு**

ரூ.மில்லியன் 6.9

**ஆரம்பித்த திகதி**

2018 ஜனவரி

**முடித்து வைத்த திகதி**

2018 டிசெம்பர்

**2018.12.31 ம் திகதியில் செலவு**

ரூ.மில்லியன் 6.9

**கருத்திட்டத்தின் முடிவு**

அளவு – டெப்லொய்ட்
பக்கங்களின் எண்ணிக்கை – 8 பக்கங்கள்
உள்ளடக்கம் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்குறியவைகள்
தாள் வகை – 70 GSM

**01. பக்கம்** காலத்திற்குறிய விசேட புகைப்படத்துடனான விசேட தலைப்புக்கள்.

**02. பக்கம்** பிரதேச தகவல்கள் (சமுர்த்தி ஊடகவியலாளர்கள் ஊடாக)

**03. பக்கம்** - கௌரவ அமைச்சர்கள் உட்பட விசேட விருந்தினர்களின் ஆக்கங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்

**04. பக்கம்** சமுர்த்தி கருத்திட்டங்கள் மூலம் வெற்றிகரமான நிலையிலுள்ள மக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசேட ஆக்கங்கள் மற்றும் அறிக்கைகள்

**05. பக்கம்** சமுர்த்தி வங்கிகளின் மேம்பாடுகள் மற்றும் கடன் சேமிப்பு விசேட வேலைத்திட்டங்கள்

**06. பக்கம** விசேடமான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் அறிமுகப்படுத்துவதும் மாதிரிக் கிராமமும்

**07. பக்கம்** பிரதேச செய்திகள் - சமுர்த்தி ஊடகவியலாளர்கள் ஊடாக பிரதேச மட்டத்தில் பெற்றுக் கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள், விசேட வைபவங்கள் தொடர்பான செய்திகள், மற்றும் தகவல்கள்

**08. பக்கம** சமுர்த்தி அபிவிருத்தி வேலைதிட்டம் சார்ந்த விசேட வெற்றிகள் மற்றும் திறமைகளை அறிமுகப்படுத்துதல்.

* ஏனையவை – தமிழ் மொழிகளில் இச் செய்திகளை மொழிபெயர்புச் செய்து தினகரன் செய்திப் பத்திரிகையில் அநுபந்தம் ஒன்றாக வெளியிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**பெற்றுக் கொண்ட சமூக பொருளாதார பெறுபேறுகள்**

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்களை விளக்கமளித்தல்

**கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள்**






## 13.3. சமுர்த்தி உதானய தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்

அறிமுகம்

இந்த நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களிடத்தேயே தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றாக செயற்படுத்தி மக்களின் நலனின் பொருட்டு நேரடியாக செயற்படுகின்ற முன்னோடி அபிவிருத்தி வேலைத்திட்டமானது. சமுர்த்தி வேலைத்திட்டமாகும். நாடுபூராக வசித்துவரும் குறைந்த வருமானம் பெறுவோரைக் கட்டியெழுப்பும் பொருட்டு செயற்படுத்தப்படுகின்ற இந்த வேலைத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பில் விரிவான பிரச்சாரம் ஒன்றினை வழங்குவது அத்தியாவசியமான ஒரு விடயமாகும். இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்திக் கொண்டு இந் நடவடிக்கைகளை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்ளக் கூடியதாக இருப்பதனால் தொலைக்காட்சி ஊடகத்தினை இதன்பொருட்டு பயன்படுத்துவது நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யும் பொருட்டு இந்த நாட்டின் வறுமையினை குறைக்கும் தேசிய பணிக்குத் தோள்கொடுப்பதற்கு செயற்படுகின்ற சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு பொருட்டு பிரச்சார ரீதியாக ஒத்துழைத்தல்.

**இலக்கிடப்பட்ட குழு**

இந்த நாட்டின் வறியமக்களை கட்டியெழுப்பும் பொருட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் பொருளாதார, சமூக மற்றும் ஏனையவை என்ற ரீதியாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தியுள்ளது. அதன் பெறுபேற்றினை உச்சமட்டத்தில் பெறவேண்டுமாயின் பயனாளிகள் உட்பட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை விசேடமாக விளக்கமளிக்கப்பட வேண்டியுள்ளது. அதன் பொருட்டு இலத்திரனியல் ஊடகம் ஒன்றாக இது பயன்படுத்தப்படுகின்றது.

52 வாரங்களுக்குள் பொருத்தமான விதத்தில் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் பொதுமக்களில் அதிக ரசிகர் கூட்டத்திற்கு பார்க்கக் கூடிய விதத்தில் ஒளிபரப்புக் காலத்தினை பயன்படுத்திக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**செயற்படுத்தப்படும் முறை**

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து செயற்படுகின்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் மூலம் மக்களை பொருளாதார, சமூக, அரசியல் உடல், உள பௌதீக, மற்றும் சுற்றாடல் ரீதியாக வலுவூட்டச் செய்வது தொடர்பில் மக்களை விளக்கமளிக்கும் பொருட்டு 15 அல்லது 30 நிமிடங்கள் மட்டளவில் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல், வீட்டுக்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம், மாகாணங்களுக்கிடையில், மாவட்டங்களுக்கிடையில் தங்களது அனுபவங்களை பறிமாற்றம் செய்து கொள்ள விசேடமான முறையொன்றினை படைப்பாக்க ரீதியாக உருவாக்கிக் கொள்வதன் ஊடாக மானுட சமூகத்தின் பொருளாதார இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு துணையாக இருப்பதே நோக்காகும்.

**செயற்படுத்தப்பட்ட இடம்**

தலைமைக் காரியாலயத்தின் மூலம்

**அங்கீகரித்த நிதி ஒதுக்கீடுகள்**

ரூபா மில்லியன் 6.8

**ஆரம்பித்த திகதி**

2018 ஜனவரி

**முடிக்கப்பட்ட திகதி**

2018 டிசெம்பர்

**2018.12.31 ம் திகதியில் செலவு**

ரூ மில்லியன் 4.614

**கருத்திட்டத்தின் முடிவு**

அறிமுகப்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களுக்குறியதாக குறித்த பிரதேசத்தில், மாவட்டத்தில், பௌதீக மற்றும் இயற்கை அழகை வர்ணனை செய்தல்.

2) வேலைத்திட்டத்திற்குப் பொருத்தமான பாடல் ஒன்றின் ஒரு பகுதி

3) பிரதேசத்தில் அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான சிறிய ஒரு விவரணம்.

4. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுடன் கலந்துறையாடி அவர்களது அபிவிருத்திச் செயற்பாடுகளை பிரதேசங்களுக்கிடையே அனுபவங்களையும் செயற்பாடுகளையும் அறிமுகஞ் செய்தல்.

5. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சேமிப்பு வேலைத்திட்டங்களுடன் இணைந்துள்ள விதத்தினை குறித்த வங்கியுடன் தொடர்புபடுத்தி சிறியதாக அறிமுகஞ்செய்தல்.

* ஆரம்ப கட்ட நிகழ்ச்சிகளில் கௌரவ அமைச்சர், பிரதியமைச்சர், செயலாளர், பணிப்பாளர் நாயகம், ஆகியோரை நேர்முகம் செய்வதன் ஊடாக வேலைத்திட்டத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளல்.

**பெற்றுக் கொள்ளப்பட்ட சமூக, பொருளாதார பெறுபேறுகள்**

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்களை விளக்கமளித்தல்.

### 13.4. சமுர்த்தி வெளியீடுகள் (கையேடுகள்) வேலைத்திட்டம்

**அறிமுகம்**

சமுர்த்தி வேலைததிட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒட்டியதாக கையேடுகளை அச்சிட்டு அதனோடு அதன் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள மக்களுக்கு கிராம மட்டத்தில் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**இலக்கிடப்பட்ட குழு**

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் இலங்கை வாழ் சகல மக்களும்

**செயற்படுத்தப்பட்ட இடம்** - தலைமைக் காரியாலயம்

**அங்கீகரித்த நிதி ஒதுக்கிடு** - ரூ. மில்லியன் 10.95

**2018.12.31ம் திகதியில் செலவு** - ரூ. மில்லியன் 2.4

கருத்திட்டத்திற்குறிய புகைப்படங்கள் -











## 14. குறுநிதி (வங்கி) பிரிவின் செயலாற்றுகை - 2018

### 14.1 அறிமுகம்:-

1996 ஆம் ஆண்டில் இலங்கை சமுர்த்தி அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அதன் மற்றுமொரு பிரிவாக 'கடன் பிரிவு' ஆரம்பிக்கப்பட்டது. காலவோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் இப்பிரிவு 1998 ஆம் ஆண்டில் "வங்கி நிதி நடவடிக்கைகள் பிரிவு" என பெயரிடப்பட்டது.

1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்திற்கு இணங்க தேசிய சமுர்த்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 1996 ஆம் ஆண்டில் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன், குறைந்த வருமானம் பெறுபவர்களின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரித்து, அதனூடாக முதலீட்டு ஆற்றலை வளர்ப்பதற்கும் உற்பத்தி மற்றும் சேவை விருத்திக்கு மூலதனத்தை (கடன் வசதிகள்) வழங்கவும் முறையற்ற கடன் கொடுக்கல் வாங்கல்களைக் குறைப்பதற்கும் அதனூடாக அவர்களை கடன் சுமையிலிருந்து விடுவித்து இலாபகரமான நிறுவனமுறையொன்றினை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கமைய காலத்தின் தேவைக்கேற்ற விதத்தில் 2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்திற்கமைய பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதிலும் வறுமை நிலையினை குறைக்கும் பொருட்டு சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் தேசிய கொள்கையினை நடைமுபடுத்துவதற்கான முன்னோடியான குறிக்கோள்களை நிலைநிறுத்தும் நோக்கில் நடைமுறையிலுள்ள வணிக வங்கி வலையமைப்புக்களால் சேவைகளை வழங்கும் போது முக்கியத்துவம் காட்டப்படாத குறைந்த வருமானம் பெறுவோர் தொடர்பில் முறையான கவனத்தினைச் செலுத்தி வறுமையினை ஒழிக்கும் குறிக்கோள்களுக்கு இணைந்ததாக சமுதாய அடிப்படை மட்டத்தில் மக்களது சிக்கனப் பழக்கவழக்கங்களை விருத்தி செய்தல், மக்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுதல் மற்றும் அவர்களது நிதித்தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதன் ஊடாக வருமான விருத்தியின் பொருட்டும் நாட்டின் தேசிய உற்பத்திக்கு கூடிய பங்களிப்பினை பெற்றுக்கொள்ளும் அடிப்படைக் குறிக்கோள்கள் குறுநிதித்தொகுதியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இத் தொகுதிக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தின் குறுநிதிப் பிரிவு பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் 331 உடன் நாடுபூராகவும் அமைந்துள்ள சமுதாய அடிப்டை வங்கிகள் 1074 சொந்தமாகின்றது.

அதற்கமைய ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்டை வங்கி மற்றும் சமுதாய அடிப்டை வங்கிச் சங்கங்களின் பிரதான நெறிப்படுத்தல் அலுவலமாக குறுநிதிப் பிரிவு மாறியதுடன் மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைய அந்த நிறுவனங்ளை நெறிப்படுத்துவது குறுநிதிப் பிரிவின் பணிப்பொறுப்பாக மாறியது.

**நோக்கு :-**

"இலங்கையில் மிகவும் நவீன மயப்படுத்தப்பட்ட பிரபலமான மற்றும் மக்கள் நேயமிக்கதுமான நிலைபேரான குறுநிதி வங்கி வலையமைப்பு ஒன்றாக சமுர்த்தி வங்கி வலையமைப்பினை உருவாக்குதல்."

**பணி:-**

வறுமை நிலையற்ற சுபீட்சமிகு தேசம் ஒன்றினைக் கட்டியெழுப்பும் உண்ணத நோக்கில் வறிய மக்களை தங்கிவாழும் மனநிலையற்ற, வலுவூட்டலினூடாக அவர்களது அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை மெருகூட்டி பொருளாதார சமூக ரீதியாக தன்னம்பிக்கையுடன் முன்னேறுவதற்கு குறுநிதியியல் மற்றும் நிதியியல் அறிவின்பால் திரட்டுதல்.

### 14.2. குறுநிதிப் பிரிவின் பணிப் பொறுப்புக்கள்

1. வங்கித் வலையமைப்பிற்கான புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் அவற்றுக்குத் தேவையான சுற்றறிக்கைகளையும் நெறிப்படுத்தல் அறிவுறுத்தல்களையும் வெளியிடுதலும்.
2. ஏனைய நெறிப்படுத்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் வழங்குதல்.
3. வைப்புக்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்களை அறிமுகஞ் செய்தலும் அதற்குத் தேவையான வழிகாட்டல்கள் அறிவுறுத்தல்களை வழங்குதலும்
4. வங்கி நிதியங்களை முதலீடு செய்தல் மற்றும் பிரதேச மட்டத்தில் அறிவுறுத்தல்களை வழங்குதல்.
5. நுண்நிதிப் காப்பீட்டு நடவடிக்கைளை மேற்கொள்ளுதல்
6. அனைத்து வங்கிகளிலும் தேசிய மட்டத்தில் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் அது தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்குவதும்
7. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் இறுதிக் கணக்குகளிய் பொருட்டு வழங்கப்படும் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் இறுதிக் கணக்குகளை உறுதிபடுத்துவதும் இலாப பகிர்வுக்கான கட்டளைகளை வழங்குதலும்.
8. வங்கிகளுக்கான மீள் நிதியீட்டல் கடன் வசதிகளை வழங்குதலும் கடன் பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலும்.
9. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளுக்கும் வங்கிச் சங்கங்களுக்குமான காணிகளைச் சுவீகரித்தல்/ கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் வங்கிக் கட்டிட நிர்மாணத்திற்கான நிதியங்களை வழங்குவதும் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதும்.
10. சமுர்த்தி சமுதாய அடிப்படை முகாமைச் சபையினைக் கூட்டுதல், முகாமைத்துவப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் அக்கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல்.
11. அனைத்து சமுதாய அடிப்படை வங்கிகளையும் வங்கிச் சங்கங்களையும் கண்காணிப்புச் செய்தல், மேற்பார்வை செய்தல், பின் பணி தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
12. இலங்கை மின்சார சபையுடன் இணைந்து “விதுலி அத்வல” கடன் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.
13. சமுர்த்தி பயனாளிகளை, சமுதாய அடிப்டை வங்கிச் சங்கங்கள் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடனும் அமைப்புக்களுடனும் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
14. வாழ்வாதார மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கு சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

**இதன் பிரகாரம் வங்கி நிதி நடவடிக்கைகள் பிரிவின் செயற்பாடுகள் இரு வகைப்படுகின்றது**

1. சமுதாய அடிப்படை வங்கி மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்க வேலைத்திட்டத்திற்கு பங்களிப்பினை வழங்குதல்.
2. சமுதாய அடிப்டை வங்கிக்குள் செயற்பாடுகள்

## 14.3. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி வேலைத்திட்டம்

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் ஆரம்பமானது 07 கட்டங்களில் செயற்பட்டதுடன் 2018.12.31ம் திகதியாகும் போது வடக்கு கிழக்கு மாவட்டங்களும் உட்பட்டதாக நாடுபூராகவும் 1073 வங்கிகளும் 331 சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களும் இயங்குகின்றது.

இதற்கமைய பார்க்குமிடத்து சமுதாய அடிப்படை வங்கிகளாக ஆரம்பமான கிளை வலையமைப்புக்கள் இந்நாட்டின் குறுநிதித் துறையில் நாடுபூராகவும் விரிவடைந்துள்ள பாறியளவிலான சிறிய குறுநிதி வங்கி நிறுவன கட்டமைப்பாக குறுகிய காலத்திற்குள் உருவாகியுள்ளதுடன் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க வலைமைப்பு சர்வதேச மட்டத்தில் குறுநிதித் துறையில் சுட்டிக்காட்டக் கூடிய இடம் ஒன்றினைப் பெற்றுள்ளது. குறுநிதித் துறையில் பிரபலமானவர்களிடத்தேயே விருச்சமாகவுள்ள ஒரு இடத்தினைப் பெற்றுள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கித் தொகுதி, வறுமையினை ஒழிக்கும் குறிக்கோள்களுக்கு ஏற்றதாக வைப்புகளை சேகரிப்பதில் விசேட ஒரு நிலையினைப் பெற்றுள்ளதுடன் குறைந்த வருமானமுள்ள மக்களின் வருமான நிலையினை மேம்படுத்தும் பொருட்டு சிறிய தொழில் முயற்சிகளின் பொருட்டு தேவையான கடன் வசதிகளை வழங்குவது தொடர்பில் கூடிய முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது. அதேபோன்று புதிய வங்கி தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அடிப்படை குறிக்கோள்களுடன் ஒன்றினைந்து குறுநிதியினூடாக குறைந்த வருமானம் பெறும் மக்களை வலுவூட்டும் விசேட பணியினை நிறைவேற்றும் போது அதற்கு அடிப்படைக்கட்டமைப்பாக சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி வலையமைப்பினை உதவியாக வைத்துக் கொள்கின்றது.

இப்பணிகளை நிறைவேற்றுவதன் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்றம் கீழ் உள்ளவாறாகும்.

### 14.3.1 வங்கி அங்கத்துவமும் பங்கு மூலதன முன்னேற்றமும்

சமுர்த்தி பயனாளிகள் ரூபா 500/- இற்கான பங்கொன்றினை கொள்வனவு செய்வதன் மூலம் அவர்களுக்கு சமுர்த்தி சமுதாய அடிப்டை வங்கியின் அங்கத்துவம் கிடைப்பதுடன் அதனூடாக அவர்கள் வங்கியின் பங்குதாரர்களாக ஆகின்றனர்.

**புள்ளி விபரக்குறிப்புக்கள் 14.1**

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி அங்கத்துவ முன்னேற்றம் - (2000-2018)**

| ஆண்டு | பெண்கள் | ஆண்கள் | மொத்தம் | கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி | வளர்ச்சி வீதம் % |
|---|---|---|---|---|---|
| 2000 | 943,142 | 628,094 | 1,571,236 | 326,300 | 26 |
| 2001 | 1,042,158 | 663,905 | 1,706,063 | 134,827 | 9 |
| 2002 | 1,149,226 | 716,833 | 1,866,059 | 159,996 | 9 |
| 2003 | 1,275,273 | 777,222 | 2,052,495 | 186,436 | 10 |
| 2004 | 1,351,769 | 806,470 | 2,158,239 | 105,744 | 5 |
| 2005 | 1,428,848 | 824,846 | 2,253,694 | 95,455 | 4 |
| 2006 | 1,516,985 | 853,604 | 2,370,589 | 116,895 | 5 |
| 2007 | 1,575,509 | 872,490 | 2,447,999 | 77,410 | 3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2008 | 1,641,872 | 859,900 | 2,501,772 | 53,773 | 2 |
| 2009 | 1,691,112 | 896,947 | 2,588,059 | 86,287 | 3 |
| 2010 | 1,830,840 | 970,693 | 2,801,533 | 213,475 | 8 |
| 2011 | 1,881,808 | 987,740 | 2,869,548 | 68,015 | 2 |
| 2012 | 2,079,173 | 1,078,546 | 3,157,719 | 288,171 | 9 |
| 2013 | 2,199,135 | 1,121,833 | 3,320,968 | 163,249 | 5 |
| 2014 | 2,389,133 | 1,214,461 | 3,603,594 | 282,626 | 8 |
| 2015 | 2,503,840 | 1,253,016 | 3,756,856 | 153,262 | 4 |
| 2016 | 2,543,403 | 1,248,042 | 3,791,445 | 34,589 | 1 |
| 2017 | 2,624,784 | 1,266,833 | 3,891,617 | 100,172 | 3 |
| 2018 | 2,680,394 | 1,276,500 | 3,956,894 | 65,277 | 2 |

18 வருட காலப்பகுதியில் அங்கத்துவத்தின் பரம்பலானது 1ம் புள்ளிவிபரக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது. புதிய அங்கத்தவர்களாக 2018 ஆம் ஆண்டிலும் 65,277 பேர் புதிதாக பங்களிப்புச் செய்துள்ளதுடன் பல்வேறு சமூக, பொருளாதாரப் பிரச்சினைனகளுக்கு மத்தியில் நிதி நிறுவனங்கள் எதிர்நோக்கிய நெருக்கடியான பொருளாதார நிலைமையிலும் எமது சமுதாய அடிப்படை வங்கி தொடர்பில் வாடிக்கையாளர்கள் வைத்துள்ள நம்பிக்கையை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

விசேடமாக 2017 ஆம் ஆண்டில் சமுதாய அடிப்படை வங்கிகளின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட ‘‘திரிய சவிய’’ விசேட கடன் திட்டமும் உள்ளடங்கலாக அதுவரையில் நடைமுறையிலிருந்து சுயதொழில், விவசாய, மிஹிஜய, சுவசக்தி, இடர், கிருள கடன், யொவுன் திரிய, நுகர்வோர், வாழ்வாதாரம் போன்ற கடன் திட்டங்களும் இந்த வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

**புள்ளி விபரக் குறிப்புக்கள் 14.2**

**அங்கத்தவர்கள் செலுத்திய பங்குப் பணம் (2000-2018)**

| ஆண்டு | தொகை (ரூ.மி) | வளர்ச்சி (ரூ.மி) | வளர்ச்சி வீதம் % |
|---|---|---|---|
| 2000 | 985.16 | 397.98 | 67.80 |
| 2001 | 1,383.15 | 397.99 | 40.40 |
| 2002 | 1,679.79 | 296.64 | 21.44 |
| 2003 | 1,930.37 | 250.57 | 14.92 |
| 2004 | 2,206.62 | 276.25 | 14.30 |
| 2005 | 2,601.01 | 394.40 | 17.90 |
| 2006 | 3,096.44 | 495.42 | 19.05 |
| 2007 | 3,639.53 | 543.10 | 17.50 |
| 2008 | 3,989.90 | 350.37 | 9.63 |
| 2009 | 4,212.42 | 222.52 | 5.58 |
| 2010 | 4,790.47 | 578.05 | 13.72 |

| | | | |
|---|---|---|---|
| 2011 | 5,370.53 | 580.06 | 12.11 |
| 2012 | 6,380.00 | 1,009.69 | 18.80 |
| 2013 | 7,101.00 | 721.00 | 11.30 |
| 2014 | 8,499.50 | 1,398.50 | 19.65 |
| 2015 | 9,927.81 | 1,428.31 | 16.80 |
| 2016 | 11,791.00 | 1,863.19 | 18.76 |
| 2017 | 13,724.19 | 1933.19 | 16.39 |
| 2018 | 15,848.23 | 2124.54 | 15.48 |




கடந்து 18 வருடங்களில் பங்கு மூலதனத்தின் பரம்பலானது 2ம் புள்ளி விபரக் குறிப்பின் (1ஆம் வரைபுக் குறிப்பு) மூலம் காட்டப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் பங்கு மூலதனத்தின் வளர்ச்சி 68% என்ற கூடிய பெறுமதியல் காணப்பட்ட போதிலும், அண்மைய ஆண்டுகளில் வளர்ச்சி வீதம் 15% மட்டளவிலான நிலையான வளர்ச்சி வீதத்தினைச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனைக் காணலாம்.

இந்த நிலையினை மேலும் பகுப்பாய்வு செய்து வங்கிகளின் நிரந்தரமான செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற பிரகாரம் சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோரின் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் உள்ளடங்கலாக சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் எதிர்கால திட்டமிடலைத் தயாரிப்பது தொடர்பில் கவனஞ் செலுத்துதப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 11,791 ஆகக் காணப்பட்ட பங்கு மூலதனம் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா மில்லியன் 15,848 வரை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

### 14.3.2 வங்கிச் சங்க வைப்பு வேலைத்திட்டம்

**புள்ளி விபரக் குறிப்புக்கள் 14.3**

வைப்புக்கள் (அங்கத்தவர், அங்கத்தவரல்லாதோர், கூட்டு, சிறுவர் மற்றும் திரிய மாதா)

**(2000 – 2018)**

| ஆண்டு | கணக்குகளின் எண்ணிக்கை | கணக்குகளின் எண்ணிக்கையின் வளர்ச்சி | தொகை (ரூ. மில்) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| 2000 | 2,645,574 | 1,220,922 | 2,033.45 | 1264.50 |
| 2001 | 3,035,233 | 389,659 | 3,111.16 | 1,077.71 |
| 2002 | 3,296,569 | 261,336 | 3,857.10 | 745.94 |
| 2003 | 3,680,786 | 384,217 | 4,710.80 | 853.70 |
| 2004 | 3,989,539 | 308,753 | 5,751.81 | 1,041.01 |
| 2005 | 4,229,575 | 240,036 | 6,824.88 | 1,073.07 |
| 2006 | 4,394,498 | 164,923 | 8,131.66 | 1,306.78 |
| 2007 | 4,613,504 | 219,006 | 9,875.63 | 1,743.97 |
| 2008 | 5,081,229 | 467,725 | 11,356.79 | 1,481.16 |
| 2009 | 5,167,854 | 86,625 | 13,536.65 | 2,179.86 |
| 2010 | 5,505,853 | 337,999 | 15,906.77 | 2,370.12 |
| 2011 | 5,524,025 | 18,172 | 18,907.33 | 3,000.56 |
| 2012 | 6,206,484 | 682,459 | 20799.06 | 1,891.73 |
| 2013 | 6,383,307 | 176,823 | 23,916.57 | 3,117.52 |
| 2014 | 6,822,409 | 439,102 | 29,436.10 | 5,519.53 |
| 2015 | 7,096,317 | 273,908 | 36,528.03 | 7,091.93 |
| 2016 | 7,417,540 | 321,223 | 43,716.00 | 7,187.97 |
| 2017 | 7,800,246 | 382,706 | 49,320.02 | 5,604.02 |
| 2018 | 8,177,216 | 376,970 | 5,5627.64 | 6,307.62 |




2018ஆம் ஆண்டில் ரூபா மில்லியன் 5464.73 தொகையினை வைப்புச் செய்து வங்கி வேலைத்திட்டம் தொடர்பில் தொடர்ந்தும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் நம்பிக்கை வைத்து செயற்பட்டுள்ளதுடன் விசேடமாக சிங்கள, தமிழ் புது வருடத்திற்கான புது வருட சேமிப்பு நிகழ்ச்சி மற்றும் மார்ச் 8 ஆந் திகதி கொண்டாடப்படும் உலக மகளிர் தினம் என்பவற்றை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திரியமாதா சேமிப்பு வைப்பு மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் இந்த வைப்புக்களின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. ஏனைய போட்டித் தன்மை கொண்ட குறுநிதி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாறான வளர்ச்சி ஒன்றினை பெற்றுக் கொள்வது போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

### 14.3.3 சமுதாய அடிப்படை வங்கிக்கடன் வேலைத்திட்டம்.

- சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறுவோரின் தொழில் முயற்சியாண்மை ஆற்றல்களை இனம்கண்டு, சுய பலத்தின் ஊடாக வறுமையிலிருந்து விடுபடுவதற்குத் தேவையான சூழலைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான குறுநிதியியல் வசதிகளை வழங்குவது சமுதாய அடிப்படை வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் செயற்படுகின்றது.

- அங்கத்தவர்களின் மூலதன நிதியம் மற்றும் துரித நிதித் தேவைகளை சமாளிப்பதற்கான விசேட கடன் வேலைத்திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

- வருமானமீட்டல் கருத்திட்டங்களின் பொருட்டு ரூபா 50,000/= த்திலிருந்து ரூபா 500,000/= வரையிலான பல்வேறு கடன்திட்டங்களின் கீழ் சமுர்த்தி வங்கிகள் ஊடாக கடன் வழங்கப்படுகின்றது அதன் பிரகாரம் சுயதொழில், பயிர்ச் செய்கை, தொழில் பயிற்சிகள் போன்ற துறைகளின் பொருட்டு துரித கடன் தேவைகளுக்காகவும் கடன் வழங்கப்படுகின்றது.

- வீடமைப்பு, நுகர்வு, இடர் போன்ற தேவைகளின் பொருட்டு வங்கிக் கடன் வசதிகள் செயற்படுகின்றது. இதன் பொருட்டு ரூபா 50,000/= த்திலிருந்து ரூபா 300,000/= வரையிலான உயர்ந்தபட்ச கடன் வழங்கப்படுகின்றது.

- சமுர்த்தி வங்கிக் கடன் வேலைத்திட்டத்தின் மூலம் வெற்றிகரமாக முன்னேறியுள்ள தொழில் முயற்சியாளர்களின் மூலதன நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ரூபா 500,000/= த்திலிருந்து ரூபா 1,000,000/= வரையிலான கடன்களை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் மூலம் “இசுர” கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகின்றது.

- அவசரப் பணத் தேவைகளின் போது அநியாய வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து விடுபட்டு மிகவும் இலகுவாக பணத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நுகர்வோர், இடர், சுவசக்தி கடன் திட்டத்தின் ஊடாக அங்கத்தவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 8,868,512 அங்கத்தவர்களுக்கு ரூபா மில்லியன் 264,519.28 தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**<u>புள்ளிவிபரக் குறிப்புகள்</u> 14.4**

**கடன்களை வழங்குதல் (1999 - 2018)**

| ஆண்டு | எண்ணிக்கை (திரட்டிய) | திரட்டியதாக விடுவித்த கடன் தொகை (ரூபா.மில்) | வருடத்தினுள் வழங்கப்பட்ட கடன்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| 1999 | 209,818 | 966.31 | 966.31 |
| 2000 | 481,475 | 2,788.50 | 1,822.19 |
| 2001 | 813,334 | 5,552.75 | 2,764.24 |
| 2002 | 1,016,392 | 7,448.08 | 1,895.33 |
| 2003 | 1,340,126 | 10,503.30 | 3,055.22 |
| 2004 | 1,697,866 | 13,977.81 | 3,474.51 |
| 2005 | 2,149,135 | 20,725.03 | 6,747.22 |
| 2006 | 2,527,841 | 26,035.09 | 5,310.06 |
| 2007 | 2,952,840 | 32,843.04 | 6,807.93 |
| 2008 | 3,450,469 | 42,757.37 | 9,914.36 |
| 2009 | 3,721,662 | 48,352.73 | 5,595.36 |
| 2010 | 4,160,596 | 58,531.61 | 10,178.88 |
| 2011 | 4,682,822 | 71,721.04 | 13,189.43 |
| 2012 | 5,085,275 | 87,046.00 | 15,324.96 |
| 2013 | 5,360,115 | 98,056.00 | 11,010.00 |
| 2014 | 6,388,489 | 127,805.40 | 29,749.40 |
| 2015 | 6,851,459 | 153,989.65 | 26,184.25 |
| 2016 | 7,536,257 | 180,229.25 | 26,239.60 |
| 2017 | 8,202,461 | 220,873.20 | 40,643.95 |
| 2018 | 8,868,512 | 264,519.13 | 43,645.93 |




**புள்ளிவிபரக் குறிப்பு -14.5**

**கடன்களை வகைப்படுத்தல் 2018.12.31 ஆந் திகதியில் திரட்டிய விடுவிக்கப்பட்டவைகள்.**

| கடன் வகை | தொகைரூ.மி | பங்களிப்பு(%) |
|---|---|---|
| சுயதொழில் | 87,687.75 | 40.157 |
| விவசாயம் | 14,800.90 | 6.176 |
| ஏனையவை (மிஹிஜய, மீன்பிடி, சுவசக்தி, இடர், கிருள கடன்,யொவுன் திரிய வாழ்வாதார சுழற்சி நிதி, ரட்டவிருவோ வாழ்வாதார அபிவிருத்தி) | 79034.68 | 29.88 |
| நுகர்வு | 11,694.60 | 4.424 |
| ஜனபுபுது | 11,459.42 | 4.33 |
| வீடமைப்பு | 23,620.03 | 8.53 |
| திரிய சவிய | 2966.86 | 1.12 |
| சஹன அருண | 6,296.04 | 2.38 |
| மனை அலகுகளில் உட்கட்மைப்பு வசதிகள் | 26,065.75 | 9.86 |
| அவசர வர்த்தகக் கடன் | 884.53 | 0.33 |
| அருணலு | 4.50 | 0.000 |
| மொத்தம் | 264519.29 | 100 |




### 13.3.4 சமுதாய அடிப்படை வங்கி மேலதிக நிதியங்களை முதலீடு செய்தல்

(நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள்)

வங்கிகளின் சொத்துக்களின் உச்ச பயனை அடையும் நோக்கில் கடன் விண்ணப்பதாரர்களுக்கு கடன்கள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் மேலதிகமாகவுள்ள நிதியத்தினை, சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் ஊடாக திறைசேரியின் சுற்றறிக்கைக்கு இணங்க அரசாங்க வங்கிகளில் மாத்திரம் முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களை நிதியியல் ரீதியாக பலப்படுத்துவதே நோக்கமாகும்.

**புள்ளிவிபரக் குறிப்புக்கள்.14.6**

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளிலுள்ள மேலதிக நிதியை முதலீடு செய்தல் (2000 – 2018)**

| ஆண்டு | தொகை (ரூபா. மில்) | வளர்ச்சி (ரூபா. மில்) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| 2000 | 1.620 | 1,038 | 178% |
| 2001 | 3.175 | 1,555 | 96% |
| 2002 | 5.097 | 1,922 | 68% |
| 2003 | 5.914 | 817 | 16% |
| 2004 | 7.828 | 1,914 | 32% |

| | | | |
|---|---|---|---|
| 2005 | 7.417 | -411 | (5)% |
| 2006 | 9.936 | 2,519 | 34% |
| 2007 | 13.791 | 3,855 | 39% |
| 2008 | 18.833 | 5,042 | 36% |
| 2009 | 24.039 | 5,206 | 28% |
| 2010 | 27.248 | 3,209 | 13% |
| 2011 | 39.048 | 11,800 | 43% |
| 2012 | 42.098 | 3,050 | 8% |
| 2013 | 55.690 | 13,592 | 32% |
| 2014 | 48.309 | -7,381 | (13)% |
| 2015 | 55.906 | 7,597 | 16% |
| 2016 | 68.692 | 12,786 | 23% |
| 2017 | 77.978 | 9,286 | 13% |
| 2018 | 85,942 | 7,964 | 10% |




